# செம்மண்

நிலம் 2 துகள் 82 வள்ளுவர் ஆண்டு 2052, 12 - 18 மாசி 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-

## அமெ. தூதராக புதியவர் நியமனம்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக கொரிய வம்சாவளியைச் சேர்ந்தவரான ஜூலி சங் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் இதுவரை பதவியிலிருந்து வந்தவரான அலைனா பி.தப்லிஸின் இடத்திற்குப் புதியவராக சங் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சங் 1996இல் அமெரிக்க அயலுறவுத் துறைச் சேவையில் இணைந்தவர். ஆசியாவின் பல நாடுகளிலும் பணியாற்றியிருக்கிறார்.

இலங்கையில் சீனத் தலையீடு அதிகரித்திருப்பது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்குத் தலையிடியாக மாறியிருக்கும் நிலையில் புதிய தூதுவர் தனது பதவியை ஏற்கிறார்.



## நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி சுகாதார ஊழியர்கள் போராட்டம்

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இரு கட்டாணைகளையும் மீறி சுகாதாரத் பணியாளர்களின் போராட்டம் வெள்ளிக்கிழமை ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.

இலங்கை சுகாதாரத் தொழிலாளர்கள் சம்மேளனம் இந்தப் போராட்டத்தை கடந்த திங்கட்கிழமை தொடங்கியிருந்தது. 7 கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டது.

சுகாதாரப் பணியாளர்கள் 2021ஆம் ஆண்டில் தமது கோரிக்கைகளுக்கான அடையாளப் போராட்டங்கள் பலவற்றையும் நடத்தியிருந்தனர். ஆனாலும் தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் இந்த ஆண்டு மாசி 6ஆம் நாள்

பக்கம் 02

## மொழி முன்னுரிமை சர்ச்சையுடன் வவுனியா பல்கலைக்கழகம் திறப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக இருந்து தனியான பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்ட வவுனியா பல்கலைக்கழகம் வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. கொழும்பிலிருந்து இதற்கென வருகை தந்திருந்த அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பல்கலைக்கழகத்தைத் திறந்து வைத்தார்.

பக்கம் 19



# பங்குனியில் பல மணிநேர மின் வெட்டு

### கொழும்பில் தண்ணீர் பஞ்சமும் வரும் என எச்சரிக்கை

நாடு தற்போது சென்றுகொண்டிருக்கும் பாதையில் தொடர்ந்தும் பயணித்தால் பங்குனி மாதத்தில் பெரும் மின் வெட்டை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கின்றனர் தற்போதைய கள நிலவரம் தொடர்பில் மிகவும் தொடர்புபட்ட வல்லுநர்கள்.

நாட்டின் தேசிய மின் வழங்கல் சேவையில் பல மணி நேர மின் வெட்டை எதிர்கொள்வதும் கொழும்பு போன்ற பெரு நகரங்களில் தண்ணீர் விநியோகம் தடைப்படுவதும் தவிர்க்க முடியாத பேரிடராக வந்து முடியும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் ஒரு மணி நேர மின்வெட்டை நடைமுறைப் படுத்துவதற்கு அனுமதிக்குமாறு இலங்கை மின்சார சபை தற்போது கோரிக்கை விடுத்து வருகின்றது. ஆனால் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவும் அதற்கு அனுமதி மறுத்துவருகின்றன.

மாசி மாதம் 14ஆம் நாள் வரையிலும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது என்று வெள்ளிக்கிழமை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்தது. இதைத் தொடர்ந்து கருதத்துத் தெரிவித்த துறைசார் வல்லுநர்கள், இது ஆபத்தான போக்கு என்று எச்சரித்தனர்.

நிலக்கரியில் இயங்கிவரும் மின் உற்பத்தி நிலையங்கள் சில பழுதுபட்டமையாலும் அதனை ஈடுசெய்யும் வகையில் மின்பிறப்பாக்கிகள் மூலமான உற்பத்தியை அதிகரிப்பதற்கான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாத டொலர் நெருக்கடியில் நாடு சிக்கியிருப்பதாலும்

பக்கம் 02

## அரச தலைவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவில் வெள்ளியன்று ஆர்ப்பாட்டம்

***காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் முன்னெடுப்பு***



இலங்கையின் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச வெள்ளிக்கிழமை வவுனியாவிற்கு வருகை தந்தபோது அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்த முற்பட்ட வலிந்து காணாமல் ஆக்கபப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியா பல்கலைக்கழகத்தை நெருங்காதவாறு தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனால் அந்த இடத்தில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

பம்மைமடுவில் அமைந்துள்ள வவுனியா பல்கலைக்கத்தின் முன்பாக அரச தலைவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்வதற்கு இவர்கள் முயன்ற போதும் பம்பைமடுவில் உள்ள படையினரின் சோதனை நிலையத்தில் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். மேற்கொண்டு செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. சோதனை நிலையத்

பக்கம் 02



## பால்மா, எரிவாயு, கோதுமைக்கு மட்டுமே கொஞ்சம் தட்டுப்பாடாம்

பால்மா, எரிவாயு, கோதுமை மா மற்றும் சிமெந்து ஆகிய பொருள்களுக்கு மட்டுமே கொஞ்சம் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவை தவிர்ந்த ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் போதியளவு கையிருப்பில் உள்ளதாகவும் நிதி

பக்கம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

## ஊழியர் சேமலாப நிதி மீதான வரி விதிப்பு கைவிடப்படவேண்டும்

ஊழியர் சேம லாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் வருமானத்திற்கு 25 சதவீத வரி விதிப்பதற்கு ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. தனியார் நிறுவனங்கள் இடையிலான தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் முன்பாக வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

ஊழியர் சேம லாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியன தனியார் நிறுவனங்களால் பணிக்காலத்தில் ஊழியர்களின் எதிர்காலத் தேவை கருதி மேற்கொள்ளப்படும் ஒருவித சேமிப்பு. ஆனால் இதைப் பல தனியார் நிறுவனங்கள் முறையாகச் செலுத்துவதில்லை. அதிலும் தமிழ்ப் பரப்பில் காணப்படும் தனியார் நிறுவனங்கள் சட்டத்தை முழுமையாகப் பின்பற்றி இந்தக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதில்லை.

இதனைக் கண்காணிப்பதற்கும் ஊழியர்களின் நலன்சார் நிதி விடயத்தைக் கையாள்வதற்கும் அரச திணைக்களங்கள் உள்ளன என்கிறபோதும் பல நிறுவனங்கள் ஊழியர்களின் சேம லாப நிதியையும் நம்பிக்கை நிதியையும் செலுத்துவதில்லை. மேலும் பல நிறுவனங்களில் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து இந்த நிதி கழிக்கப்பட்ட பின்னரும் அது உரிய திணைக்களங்களில் செலுத்தப்படுவதில்லை.

அதனைக் கண்காணித்து முறைப்படுத்தவேண்டிய அரசு அது தொடர்பில் தொடர்ந்தும் பாராமுகமாகவே இருந்து வருகின்றது. குறிப்பாக தனியார் ஊழியர் ஒருவர் ஒரு நிறுவனத்தில் ஒருநாள் பணியாற்றினால்கூட அவருக்கான சம்பளம், சேம லாப நிதி, நம்பிக்கை நிதி ஆகியன செலுத்தப்படவேண்டும் என்கிறது சட்டம். ஆனால் பணியில் சேர்ந்து பல வருடங்களான பின்னரும் தமது ஊழியர்களுக்காக அவற்றைச் செலுத்தாத பல நிறுவனங்கள் மீது எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை என்பதே யதார்த்தம்.

ஊழியர்களும் இந்த விடயத்தில் நிறுவனங்களுடன் முரண்பட்டுக்கொண்டு பணியாற்ற முடியாது என்பதால் அது பற்றி முறையிடுவது மிகக் குறைவு. அதிகாரிகள் நிறுவனங்களில் திடீர் சோதனைகளை எப்போதாவது நடத்தினாலும்கூட தமது ஊழியர்களின் உண்மையான விவரங்களை மறைத்தும், உண்மையைப் பேசும் ஊழியர்களைத் துரோகிகளாக அடையாளப்படுத்தியும் இந்த விடயத்தை அமுக்குவதில் நிறுவனங்கள் கைதேர்ந்தவைகளாக இருக்கின்றன.

இப்படி பல சிக்கல்களையும் இடைஞ்சல்களையும் தாண்டியே தனியார் நிறுவனப் பணியாளர்களின் உழைப்புக்கான ஒரு சிறு தொகை சேமிக்கப்படுகின்றது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த தொகையின் மீதான வருமானத்திற்கே இப்போது அரசு வரி அறவிடப்போவதாக அறிவித்துள்ளது.

இந்த வருமானத்தின் மூலமே தனியார் நிறுவன ஊழியர்களின் பிள்ளைகள் புலமைப் பரிசில் சித்தியடைந்தால், அல்லது இடைநிலைப் பள்ளியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றால் சிறு நிதி உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன. அரசு வரி விதிக்கும்பட்சத்தில் அத்தகைய நடவடிக்கைகளும் நின்றுபோகும் பேராபத்து இருக்கின்றது.

தனியார் ஊழியர்களின் நலன்களை முழுமையாகப் பேண நடவடிக்கை எடுக்காத அரசு இப்போது அந்த நிதியில் இருந்து வருமானம் எடுப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு செய்வதை அனுமதிக்கவும் முடியாது.

எனவே அத்தகைய எந்தவொரு முடிவையும் அரசு உடன் நிறுத்தி வைக்கவேண்டும். பதிலாக அனைத்து தனியார் நிறுவன ஊழியர்களுக்குமான ஊழியர் சேம லாப நிதி, நம்பிக்கை நிதி ஆகியன முறையாகச் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

## பங்குனியில்...

நாளாந்தம் ஒரு மணி நேர மின் வெட்டை அனுமதிக்கும்படி மின்சார சபை கோருகின்றது.

தற்போது நீர் மின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமே நாட்டின் மின்சாரத் தேவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படுகின்றது.

மாசி, பங்குனி மாதங்கள் நாட்டின் வறட்சிக் காலங்கள் என்பதால் நீர் மின் உற்பத்தியை அதிகரிப்பது இந்தக் காலங்களில் மேலும் தண்ணீர்த் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் என்று வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

மின்வெட்டைத் தவிர்ப்பதற்காக நாட்டின் நீர் மின் உற்பத்திக்கான நீர்த் தேக்கங்களில் இருந்து தண்ணீரைத் தொடர்ந்து வெளியேற்றிக் கொண்டிருப்பது தொடர்ந்தும் சாத்தியப்படக்கூடியதல்ல என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பங்குனி மாதத்தின் பிற்பகுதியில் நாளொன்றுக்கு மூன்று முதல் நான்கு மணி நேர மின்வெட்டை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று மின்சாரத்துறை அமைச்சர் உதய கம்பன்பில அண்மையில் தெரிவித்திருந்தார். அது உண்மையான கூற்று என்கிறார்கள் துறைசார் வல்லுநர்கள்.

சித்திரை மாதத்தில் எதிர்பார்க்கப்படும் பருவ மழை இந்த வருடம் தாமதித்தால் நிலமை மேலும் மோசமாகும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

நாட்டின் மிகப் பெரும் நீர்த் தேக்கங்களான மஸ்கெலிய மற்றும் காசல்ரீ ஆகியவற்றில் இருந்தே தற்போது நீர் மின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு தேசிய மின் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது. ஏற்கவே மஸ்கெலிய நீர்த் தேக்கத்தின் அளவு அதன் அரைவாசியை அடைந்துவிட்டது. காசல்ரீயின் கொள்ளளவில் 30 சதவீதம் பயன்படுத்தப்பட்டுவிட்டது.

மின்வெட்டைத் தடுப்பதற்காக இந்த நீர்த் தேக்கங்களில் இருந்து தொடர்ந்தும் இவ்வாறே நீர் வெளியேற்றப்பட்டுக்கொண்டிருந்தால் காசல்ரீ மாசி மாதக் கடைசிப் பகுதியிலும் மஸ்கெலிய பங்குனி மாத நடுப்பகுதியிலும் முற்றாக வறண்டுவிடும்.

அத்தோடு மழை வீழ்ச்சி குறைந்தால் கொழும்புக்கு தண்ணீரை விநியோகிக்கும் முக்கிய நதியான களனி கங்கையிலும் தண்ணீரின் அளவு குறைந்துவிடும்.

இந்த நிலைமைகள் நாட்டில் பல மணி நேர மின்வெட்டையும் கொழும்பில் தண்ணீர் வெட்டையும் நிச்சயம் கொண்டுவரும் என்கிறார்கள் வல்லுநர்கள். அரசு சமயோசிதமாகச் செயற்படவில்லை எனில் இந்தப் பேரிடரைத் தவிர்க்க முடியாது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

## நீதிமன்ற...

முதல் தொடர் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

சுகாதாரத்துறையின் 16 பிரிவுகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன. மருத்துவ ஆய்வுகூட அறிவியலாளர்கள், மருந்தாளர்கள், கதிரியக்கவியலாளர்கள், இருதயநோய் வல்லுநர்கள், பொதுச் சுகாதார அதிகாரிகள், குடும்பநல சுகாதார உதவியாளர்கள் ஆகிய துறைகளும் இதில் உள்ளடக்கம்.

முன்னதாக தாதியர்களின் போராட்டம் மக்களுக்கு பொதுத் தொல்லையாக இருப்பதாகத் தெரிவித்து வியாழக்கிழமை சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அந்தப் போராட்டத்திற்கு எதிராக இரு கட்டாணைகளைப் பிறப்பித்திருந்தது.

இருப்பினும் போராட்டம் ஐந்தாவது நாளாக வெள்ளிக்கிழமையும் தொடர்ந்தது. நீதிமன்றத்தின் உத்தரவு தமக்கோ அல்லது சம்மேளனத்துக்கோ உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை என்று சம்மேளத்தின் தொடர்பாளர் சமன் ரத்னபிரிய வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நீதிமன்றக் கட்டளை தமக்கு நேரில் கிடைத்த பின்னரே போராட்டத்தைத் தொடர்வதா இல்லையா என்பது தொடர்பில் முடிவெடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். அதேநேரம் போராட்டத்தில் ஈடுபடுவது தமது உரிமை என்றும் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டால் தமது தரப்பு நியாயத்தை விளக்குவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## அரச...

தில் குவிக்கப்பட்டிருந்த காவல்துறையினரும் சிறப்பு அதிரடிப் படையினரும் ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுத்து அவர்களின் முன்னேற்றத்தை நிறுத்தினர்.

தங்கள் பிள்ளைகள், உறவினர்கள் காணாமல் ஆக்கப்பட்டதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவரே தற்போது நாட்டின் தலைவராக இருக்கிறார், அவரிடம் சில கேள்விகளைக் கேட்கவேண்டியிருப்பதால் தம்மை பல்கலைக்கழகம் முன்பாகச் செல்ல அனுமதிக்கும்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் காவல் துறையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அவர்களின் கோரிக்கைக்கு காவல்துறையினர் செவிசாய்க்காதபோதும் வழக்கமான கடின அணுகுமுறையிலன்றி மென் போக்கோடு ஆர்ப்பாட்டக்காரர்களோடு நடந்துகொண்டனர். வாக்குவாதத்தின் இடையே மயங்கி விழப்போன பெண் ஒருவரைத் தாங்கிப் பிடித்து அவருக்கு தண்ணீர் பருக்கி உதவிய பெண் காவலர்கள், அவரை ஆசுவாசப்படுத்த மட்டைகொண்டு அவருக்கு விசுக்கிவிட்டதையும் பார்க்க முடிந்தது.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச நாட்டின் பாதுகாப்புச் செயலாராகப் பதவி வகித்த காலத்திலேயே, இறுதிப் போரின் கடைசி நாட்களில் அரச படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் பலர் பின்னர் காணாமலாக்கப்பட்டிருந்தனர்.

அத்தகையவர்களின் உறவினர்கள் பலரே வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## பால்மா...

அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றிக் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக அரச தலைவரால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே நிதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சந்தையில் பால்மா, சமையல் எரிவாயு, கோதுமை மா மற்றும் சிமெந்து ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. பங்கீட்டு முறையிலேயே இவற்றை உற்பத்தி நிறுவனங்கள் வியாபாரிகளுக்கு வழங்கி வருகின்றன. சந்தைக் கேள்விக்கு ஏற்ப இவை விநியோகிக்கப்படவில்லை. இதனால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.


கோதுமை மா தட்டுப்பாட்டினால் வெதுப்பக உற்பத்திகளும் பெரியளவில் குறைந்துள்ளன. சமையல் எரிவாயு தட்டுப்பாட்டால் உணவங்களில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் வீடுகளிலும் சமையல் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றது.

சிமெந்துத் தட்டுப்பாட்டால் கட்டுமானப் பணிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இது பலரின் வேலை இழப்புக்களுக்கும் காரணமாகியுள்ளது. சிமெந்து தட்டுப்பாடு தவிர ஏனைய கட்டுமானப் பொருட்கள் அனைத்தினது விலைகளும் எகிறியிருப்பதால் இந்தத் தொழிற்துறை பெரும் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது.

இந்த நிலையிலேயே சில அத்தியாவசியப் பொருட்களுக்கு மட்டும்தான் கொஞ்சம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று நிதி அமைச்சர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் சுதந்திர தினம்



சத்தியநாதன்

யாழ்ப்பாணத்தில் அரசியல் விடயங்களில் பிரபலமாகவுள்ள அருண் சித்தார்த் மைத்திரேயனைத் தெரியுமா என்று சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் சிங்கள ஊடகவியலாளரான ஜெயலத் பாலசூரிய என்பவர் என்னிடம் கேட்டார். அவ்வாறு பிரபல்யமாக ஒருவர் இருப்பதாக அறியவில்லை என்றேன். "அருண் சித்தார்த் மைத்திரேயன் பற்றிச் சிங்கள ஊடகங்களும் சிங்கள மக்களும் நன்கு அறிந்திருக்கின்றனர். அவரைப் பற்றித் தேடிப்பார்" என்றார். அதன் பின்னர் சிங்கள ஊடகங்கள் மூலம் அருண் சித்தார்த் மைத்திரேயன் பற்றி அறிய முடிந்தது.

தெரண தொலைக்காட்சியின் "டோக் வித் சதுர" என்ற நிகழ்ச்சியிலும் வேறு பல சிங்களத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலமும் அருண் சித்தார்த் பற்றி அறியமுடிந்தது. விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டவர்களுக்கு நீதிகோரி நல்லூர்க் கோவிலின் பின்புறமாக மேடையமைத்துப் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தியவர். அவர் தொடர்ந்தும் அவ்வாறான காரியங்களைச் செய்யக்கூடும் என்ற எண்ணத்தில் அந்த இடத்தில் முள்வேலி போட்டப்பட்டது.

இலங்கையின் 74ஆவது சுதந்திரதினத்தைத் தமிழ்த் தேசியவாதிகள் புறக்கணித்தனர். கறுப்புக்கொடி கட்டினார்கள். முள்ளிவாய்க்காலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். சில தமிழ்த் தலைவர்கள் குருந்தூர் மலைக்குப் படையெடுத்தனர். ஆனால்,



யாழ்ப்பாண நகர மத்தியில் சிங்கக் கொடியுடன் ஊர்வலமும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் சுதந்திர நிகழ்வும் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வு அருண் சித்தார்த் மைத்திரேயனால் ஒழுங்குசெய்யப்பட்டது.

தமிழர் அரசியலில் கடந்த 70ஆண்டுகளுக்கு மேல் வேளாளர் அல்லாத மக்கள் வேளாளத் தலைவர்களுக்குப் பின்னால் ஒளித்து நின்று அரசியல் செய்தனர். ஆனால் அருண் சித்தார்த் மைத்திரேயன் "நான் நளவர் சமூகத்தைச் சேர்ந்தவன். எனது பெற்றோர் சீவல் தொழில் செய்து தமது பிள்ளைகளைப் படிப்பித்து ஆசிரியர்கள் ஆக்கினார்கள் என்பதைப் பெருமையுடன் கூற விரும்புகிறேன்" என்று தனது சந்ததியை முன்வைத்து அரசியலில் இறங்கியிருக்கிறார்.

ஆங்கிலம், சிங்களம், தமிழ் என்ற 3 மொழிகளுக்குமப்பால் ரஷ்யாவில் படித்ததால் ரஷ்ய மொழியும் தனக்குத் தெரியும் என்று தொலைக்காட்சிப் பேட்டியில் கூறியிருக்கிறார். யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கட்சிகளில் இணையாது புதிய பாதையில் தமது சாதி மக்களைக் கட்டமைத்துக் கணிசமான அளவு வளர்ந்திருக்கிறார் என்பதையே சுதந்திர தின நிகழ்வுகள் மூலம் அறிய முடிகிறது. இது யாழ்ப்பாண அரசியலுக்குப் ஒரு புதிய நெருக்கடியைக் கொடுத்திருக்கிறது.

இந்தச் சுதந்திர தின விழாவில் நாவற்குழிச் சிங்களக் கிராம மக்களும் கலந்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேயொரு சிங்களக் குடியேற்றம் அருண் சித்தார்த்தவுக்குத் தளமாக அமைந்திருக்கிறது. இதை வைத்தே எதிர்காலத்தில் பல அரசியல் விடயங்கள் முன்னெடுக்கப்பட வாய்ப்புண்டு. யாரையும் எதிர்கொள்ளும் ஆற்றல் அருண் சித்தார்த்தவுக்கு இருப்பதை விளங்கிக் கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் யாழ். மாநகரசபையின் பின்னணியில் நின்று முள்வேலி போடவேண்டிய நிலை ஏற்பட்டது.

அருண் சித்தாத்தவின் சாதியையும், புலி எதிர்ப்பையும் அரசியல் புலனாய்வாளன் எனக்கூறித் தமிழ்த் தலைவர்கள் அரசியல் செய்வது இலகுவான காரியமல்ல. வடக்குக் கிழக்கில் புலிகளால் கொல்லப்பட்டவர்களின் பட்டியல் அருண் சித்தார்த்தனின் அணியிடம் இருப்பதும் அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நல்ல தலைமைத்துவம் ஒன்றைக் கொடுப்பதன் மூலம் புதிய அரசியலை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்க வாய்ப்புண்டு. ஏற்கனவே வேளாளத் தலைவர்களால் சாதியைக் காரணம் காட்டி அரசியலில் இருந்து ஒதுக்கட்டபட்ட மக்கள் இருக்கும்வரை அருண் சித்தார்த் துணிந்து அரசியல் செய்ய வாய்ப்புள்ளது.

**அருண் சித்தார்த் மைத்திரேயன் "நான் நளவர் சமூகத்தைச் சேர்ந்தவன். எனது பெற்றோர் சீவல் தொழில் செய்து தமது பிள்ளைகளைப் படிப்பித்து ஆசிரியர்கள் ஆக்கினார்கள் என்பதைப் பெருமையுடன் கூற விரும்புகிறேன்" என்று தனது சந்ததியை முன்வைத்து அரசியலில் இறங்கியிருக்கிறார்.ஆங்கிலம், சிங்களம், தமிழ் என்ற 3 மொழிகளுக்குமப்பால் ரஷ்யாவில் படித்ததால் ரஷ்ய மொழியும் தனக்குத் தெரியும் என்று தொலைக்காட்சிப் பேட்டியில் கூறியிருக்கிறார்**

### இணையத் தளங்களில் சாதி

முகநூல் பதிவுகளில் நாம் நளவர், நாம் பள்ளர் எனச் சாதி ரீதியாக இணைப்பை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. நாங்கள் எங்கட சாதியை மாற்றச் சொல்லிக் கேட்கவில்லை எமக்கான அரசியல் உரிமைகளைத்தான் கேட்கிறோம்" என்று படித்த இளம் சமூகம் ஒன்று களமிறங்கியுள்ளது. இவர்கள் தம்மை அறிந்தும் தமது எதிர்காலம் எப்படி அமையவேண்டும் எனவும் தெளிவாக விளங்கியிருப்பதால் இதுவரையிருந்துவந்த அரசியல் பாரம்பரிய நிலை மாற்றமடைய வாய்ப்புண்டு.

இம்முறை நடந்த சுதந்திர கொண்டாட்டம் என்பது தமிழ்ச் சமூகத்தில் மேலெழுந்துள்ள புதிய அரசியல் செல்நெறியைக் காட்டுகிறது. இதை வெறும் கொண்டாட்டமாகப் பார்த்துவிட்டுக் கடந்துவிட முடியாது. அவர்களும் தமது தேவைக்காகச் சிங்கள அரசியல்வாதிகளை நாடவே செய்வார்கள். அருண் சித்தார்த்தனின் சிங்கள மொழியாற்றலும் சிங்கள ஊடகங்களில் அவருக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவமும் தமிழ் வேளாள அரசியல்வாதிகள் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை எவ்வாறெல்லாம் பறித்தெடுத்தார்கள் என்பதையெல்லாம் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியும் வருகிறார்.

இது தமிழ் தேசியம் சாதியப் பிரிவுகளை எப்படிக் கையாள்வது என்பதில் இனியும் அமைதியாக வாய்மூடி இருக்க முடியாது என்கிற நிலையை ஏற்படுத்தும். அது இன்றைய அரசியல் கட்சிகளுக்கு தேர்தலிலும் கடும் நெருக்கடியை ஏற்படுத்தும். ■






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கை மாபியாக்கள்...!

ரவீந்திரன்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 1960களில் 10 ஏக்கர் திட்டம், 20 ஏக்கர் திட்டம் என மத்திய தர வகுப்பினருக்கு விவசாயக் காணிகள் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தில் விவசாயத்தை மட்டும் நம்பியிராத அரச உத்தியோகத்தர்களுக்கே அதிக காணிகள் வழங்கப்பட்டன. சட்டத்தரணிகள் (பிறக்கிறாசிமார்), மருத்துவர்கள், பொறியியலாளர்கள் எனப் பலருக்கு இந்தக் காணிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சியைப் பொறுத்தவரை ஈஸ்வரன் படமாளிகை உரிமையாளர் வல்லிபுரம், பராசக்தி படமாளிகையாளர் முருகேசு, பொறியியலாளர் கனகலிங்கன் ஆகியோர் இந்தக் காணிகளைப் பெற்றதில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இதைவிட பால்ராஜ் கமம், பாம்புக் கமம் போன்ற பெயர்களுடனும் இந்தக் காணிகள் காணப்படுகின்றன. இவர்கள் யாரும் மண்வெட்டி பிடித்துக் களத்தில் இறங்கி வேலை செய்யும் கமக்காரர்கள் அல்ல.



சட்டத்தரணி ஒருவரின் மகன் கிளிநொச்சியில் தாங்கள் கமம் செய்த அனுபவம் குறித்து இவ்வாறு கூறினார், "விடிய அப்பா, அம்மா, நாங்கள் எல்லாரும் சாப்பாடு கட்டிக் கொண்டு மொறிஸ் மைனர் காரில் எங்கள் வயலுள்ள பரந்தன் பகுதிக்குச் செல்வோம். காலை உணவு, மதிய உணவு, நமக்குத் தேவையான குடிநீர் எல்லாம் காரில் கொண்டுபோய் சாப்பிட்டு மாலையானதும் திரும்புவோம். எங்கள் கமம் 10 ஏக்கர். வயலின் இரு தொங்கல்களிலும் மலையகக் குடும்பங்கள் இரண்டு இருந்தன. அவர்களுக்குச் சம்பளம், நெல்லு என அப்பா கொடுப்பார். அவர்களின் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடிவிட்டு வருவோம். மயிலு பொன்முடி என அவர்களின் பெயர்கள் இப்பவும் ஞாபகமிருக்கு" என்றார்.

**தற்போதைய மத்திய தர உத்தியோக விவசாயிகள் குத்தகைக்குக் காணிகளை எடுத்து விதைப்பதால் அதிக பசளை, மருந்துகளைப் பாவித்து அதிக லாபம் அடைவதை நோக்காகக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலபோகத்தில் சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டன. அதற்கு இத்தகைய விவசாயிகள் முழுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர்**

1977இல் மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்த பலர் இந்த மத்தியதர வகுப்புக்காரரின் வயலில் கூலிகளாக அமர்த்தப்பட்டனர். பல வருடங்களாக அவர்கள் அந்தக் காணியில் பணிசெய்தபோதும் இன்றுவரை அவர்களுக்கென்று சொந்தக் காணி இல்லாமலே வாழ்கின்றனர். தமது காணிகளில் கூலிகளாக இருந்தவர்களுக்குக் கால் ஏக்கர் காணியைக்கூட இவர்கள் எழுதிக் கொடுத்ததாக இல்லை.

தற்போதைய மத்திய தர வர்க்கம் 1960களில் இருந்த மத்தியதர வகுப்பினர் போர் இடப்பெயர்வு காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்றும் இறந்தும் விட்ட நிலையில் தற்போது மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், அரச திணைக்களங்களில் முக்கிய பதவி வகிப்பவர்கள் பலரே 50-100 ஏக்கர்வரையான காணிகளில் பெரும்போக வயல் செய்கின்றனர். இவர்கள் கிளிநொச்சியில் நிரந்தரமாக வாழ்ந்த போதும் தொலைபேசி மூலமாக வயல் செய்பவர்களாகவே உள்ளனர். அதாவது முன்பு காரில் வந்து களத்தில் இறங்காது வயல் செய்பவர்களைப்போல இவர்கள் தொலைபேசி வழிநடத்தலில் வயல்செய்பவர்களாக உள்ளனர்.



### அதிக பசளை, மருந்துப் பாவனை

தற்போதைய மத்திய தர உத்தியோக விவசாயிகள் குத்தகைக்குக் காணிகளை எடுத்து விதைப்பதால் அதிக பசளை, மருந்துகளைப் பாவித்து அதிக லாபம் அடைவதை நோக்காகக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலபோகத்தில் சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டன. அதற்கு இத்தகைய விவசாயிகள் முழுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். விவசாயத் திணைக்களத்தாலும் விவசாய அமைச்சுப் பிரதிநிதிகளாலும் கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விவசாயிகளுக்கான ஆலோசனை வழங்கும் கூட்டங்களில் இந்தப் பெரும் நெற்செய்கையாளர்கள் விவசாயிகளாக அல்லாமல் உத்தியோகத்தர்களாகக் கலந்துகொண்டு சேதனப் பசளைக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தனர். இதனால் விவசாயிகள் பக்கமிருந்து கோரப்படும் காத்திரமான ஆலோசனைகளுக்கு இவர்கள் சாதகமாகப் பதிலளித்திருக்கவில்லை.

### 3 ஆயிரம் 6 ஆயிரத்து 500க்கு மேலானது

சேதனப் பசளையை மாத்திரம் பயன்படுத்தித் தனது வயலில் நெல் விதைத்த விவசாயி ஒருவர் இவ்வாறு கூறுகிறார் "நான் குழைகள், குப்பைகள், எரு, உமிக்கரி எல்லாம் கொண்டுபோய் வயல் உழுவதற்கு முன்னரே கொட்டி உழுதேன். யூறியா இனிக் கிடைக்காது என்ற முடிவுடன் இந்த முயற்சியைச் செய்தேன். ஏக்கருக்கு 18 மூடை அறுவடை கிடைத்தது. கடந்த பெரும்போக அறுவடையின்போது 3 ஆயிரம் ரூபாவாக விற்ற நெல் தற்போது 6 ஆயிரத்து 500க்கு மேல் விற்கிறது. பசளைச் செலவு, மருந்துச் செலவு, அதற்கான கூலிகள் என்று எதுவும் எனக்கு இல்லை. அதனால் லாபமே ஏற்பட்டது. அதைவிட விசம் இல்லாத அரிசி கிடைத்திருக்கிறது. இதை 50-100 ஏக்கர் வரை செய்கின்ற உத்தியோக விவசாயிகளால் செய்ய முடியாது அவர்கள் வயலில் இறங்காமலேயே லாபம் அடைய நினைக்கிறார்கள்" என்று.

கிளிநொச்சி மாவட்ட நெல் விதைப்பில்கூட இவ்வாறாகச் சில மாபியாக்கள் இறங்கியிருக்கிறார்கள். விவசாயத் திணைக்களம் தனது முயற்சிகளைச் சிறந்த விவசாயிகளை நோக்கித் தூண்டுவதன்மூலம் தற்போதுள்ள சூழலை மேம்படுத்த முடியும். பல பெருமெடுப்பு விவசாயிகள் விவசாயத் திணைக்கள ஊழியர்களின் ஆலோசனைகளைக் கேட்காமல் மருந்து வியாபாரிகளிடமே பசளைகள் குறித்த ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். இதனால் உலக நாடுகள் பலவற்றில் தடை செய்யப்பட்ட களைநாசினிகளும் கிருமி நாசினிகளும் இலங்கையில் இன்னும் பாவனையிலுள்ளன.

இவை தட்டுப்பாடான சூழலில் 4 மடங்கு விலைக்குக்கூட விற்கப்பட்டன. இது நிலத்துக்கும் மனிதனுக்கும் பாதகமானது. விவசாய மாபியாக்கள் அதையே நாடிச் செல்கின்றனர். விவசாயிகளையும் இது போன்ற விவசாய மாபியாக்களையும் பிரித்தறிந்து அரசு ஊக்குவிப்பதன் மூலம் இந்த விபரீதப் போக்கைத் தடுக்க முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரை எழுதும் சுயசரிதம்

கடந்த வருடம் வெளியாகிப் பலரது மனதிலும் பதிந்த படம் ஜெய்பீம். சூர்யா அதில் நடித் திருந்தாலும் ராஜாக்கண்ணு பாத்திரமேற்ற மணி கண்டனே பலரையும் ஈர்த்த முதன்மைப் பாத்திரம். அவரது கதைதான் படத்தின் கருவும் பலமும். அந் தப் பாத்திரத்தையேற்று நடித்த மணிகண்டனின் இயக்கத்தில் அண்மையில் வெளியாகிய படம் "நரை எழுதும் சுயசரிதம்". இந்தப் படத்தில் முதன்மைப் பாத்திரம் டெல்லி கணேஷ். அவருக்குச் சமதையான பாத்திரத்தில் மணிகண்டன் நடித்திருக்கத் திரைக்கு வந்திருக்கிறது "நரை எழுதும் சுயசரிதம்".



**கதை**

தனியார் நிறுவனத்தில் அதிகாரியாக இருக்கிறார் டெல்லி கணேஷ். வயதானாலும் அந்த வேலைக்கு நன்கு பழக்கப்பட்ட அவர் அதைக் கச்சிதமாகச் செய்யவும் பழகியிருக்கிறார். ஓய்வுபெறுவதற்கு ஒரு வருடம் இருக்கிறது. அந்த அலுவலகத்தைக் கணினி மயப்படுத்தவிருப்பதாகத் தகவல் வருகிறது. அதற்கு அனைவருக்கும் பயிற்சி அளிக்கவிருக்கும் நிலையில் ஓய்வை எட்டியுள்ள டெல்லி கணேஷுக் குக் கட்டாய ஓய்வு வழங்குகிறது அந்த நிறுவனம். அலுவலகத்திலும் வீட்டிலும் அதிகாரம் செலுத்தி வந்த அவர் வேலையிழப்புக்குப்பின் ஓரங்கட்டப்படுகிறார். வீட்டில் குளியல், சரியான நேரத்தில் வந்த தேநீர் கூடத் தாமதமாக கிடைக்கி றது. இதனால் மனஉளைச்சலுக்கு ஆளாகித் தவிக்கிறார். மறுபுறத்தில் சென்னையில் வேலை தேடும் இளைஞராக மணிகண்டன். சாப்பாட்டிற் குக்கூட வழியில்லாமல் தேநீரைக் குடித்தே உயிர் வாழ்ந்துகொண்டு வேலைகேட்டு நிறுவனங்கள் தோறும் ஏறி இறங்கி அலைகிறார். வேலை இழந்த டெல்லி கணேஷும் வேலை தேடும் மணிகண்டனும் ஒரு தடவை சந்தித்துக்கொள்கிறார்கள். அதன் பின்னர் அவர்களின் வாழ்க் கையும் போக்கும் மாறிப்போகிறது. அந்த மாற்றம் என்ன? முடிவில் என்னவானது என்பதே மீதிக் கதை!




**பாத்திரங்கள்**

ஆடம்பரமில்லாத அலட்டலில்லாத மிக அமைதியான கதைப்போக்கு. அவ்வப்போது ஒலிக்கும் கானா ரகப் பாடல்களில் பொதிந்துள்ள அர்த் தங்கள் ஆயிரம். கதையோடு இயக்குநர் சொல்லில்செல்லும் பல. கருத் தாக்கங்களும் கவனிக்க வைக்கின்றன. பெருமெடுப்பில் வளர்ந் துள்ள நகரங்கள், நிறுவனங்கள் ஒருபுறமிருக்க அன்றாடம் அல்லல்படும் அடி மட்ட மனிதர்கள் மறுபுறமிருக்கின்ற சமூகச் சமமின்மையை வெளிப் படுத்தும் இடம் அதற்குச் சிறு உதாரணம். முதன்மைப் பாத்திரம் டெல்லி கணேஷுக்குரியது. அதில் அவர் தன்போக்கில் அசால்ட்டாக நடித் துள்ளார். மிகையில்லாமல் யதார்த்தமாகப் படம் முழுதும் நடந்து திரிகி றார். இயக்குநராக முதல் படத்தில் மணிகண்டனும் சாதாரண நடிப்புடன் கவனிக்க வைக்கிறார். இதிலும் மணிகண்டன் மனதில் அமர்கிறார். படத்தில் நகைச்சுவை என்றில்லாவிடினும் மணிகண்டனின் வறுமை யைக் காட்டும் தேநீர்க்கடைக்காரனின் காட்சி தொடங்கி 'தாத்தா நீ லூசா' என்று பேத்தி கேட்கும்போது டெல்லி கணேஷின் காட்சி வரை ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் நகைச்சுவை கவனிக்க வைக்கிறது. இயக்குநர்கள் பலர் அலட்டல் படங்களை அளித்துவரும் சூழலில் ஒரு நடிகர் நல்ல இயக்குநராகத் தனது முதல் படத்தில் கவனிக்க வைத்திருக் கிறார் என்றே மணிகண்டனைப் பாராட்டவேண்டும்.

## குடைக்குள் குடும்பம்

திறன்பேசிகள் வந்த பிறகு உறவினர்களுடன் நேரம் செலவிடு வதே குறைந்துவிட்டது. அதே வேளையில் சுபகாரியம், துக்க நிகழ்வு, பண்டிகை வாழ்த்துகளைத் தெரிவிக்க உறவினர்கள் மத்தி யில் புலனக் (வாட்ஸ் அப்) குழுக்களும் பெருகிவிட்டன. இந்தச் சூழலில் குடும்பத் தகவல் தொடர்புக்காக ஒரு தனியார் நிறுவனம் பிரத்யேக சமூக வலைத்தளத்தை உருவாக்கிவருகிறது. சோத னைக் கட்டத்தில் உள்ள இது, விரைவில் வெளியாக உள்ளது. வெவ்வேறு ஊர்களில் வசிக்கும் உறவுகளைச் சமூக வலைத்தளம் மூலம் ஒரே குடையின் கீழ் கொண்டுவரும் முயற்சிதான் இது. இதில், 'ZILLUM' என்கிற மென்பொருள், குடும்பத் தகவலுக்கென தனியாக உருவாக்கப்பட்டுள்ளது. இதில் குடும்பத்துக்கெனத் தனி யாக மின்னஞ்சல், உடனடித் தகவல் அனுப்புதல், தரவுகள் சேமிப் புத் தளம், பாஸ் வேர்ட் நிர்வாகம் என ஒரு குடும்ப கிளவுட் சேவையை இது வழங் கவுள்ளது. இதற்கு 'சோஹோ இல்லம்' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளில்லா வானூர்திகளில் வேவு பார்த்தல்

கமலநாதன்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

02

நான் அனுராதபுரத்திலிருந்து ஆளில்லா வானூர்தியின் கமரா மூலம் இரணைமடுக் காட்டுப்பகுதியைத் தொடர்ச்சியாக அவதானித்து வந்தேன். 2003ஆம் ஆண்டு புலிகளிடம் வானூர்தி ஒன்றிருப்பதை அவதானித்தேன். தார்ப்பாதையும் வானூர்தி போன்ற ஒன்று இருப்பதையும் இரவு நேரத்தில் கண்டேன். 2003 மாசி 2ஆம் திகதி இரவு இந்த அவதானிப்பைச் செய்தேன். மறுநாள் ஆளில்லா வானூர்தி மூலம் அதை உறுதிப்படுத்தினேன். வானூர்தியை நிறுத்திவிட்டு அதை அவர்கள் மூடுவதை அவதானித்தேன். அப்போது அமைதிப்பேச்சு நடந்துகொண்டிருந்தது. மாசி 4ஆம் திகதி சுதந்திர நாள் என்பதால் அந்த வானூர்தியை வைத்து ஏதாவது தாக்குதல் நடத்த வாய்ப்பிருக்கலாம் என்று நினைத்து அன்று அதிகாலையில் ஆளில்லா வானூர்தியை இரணைமடுப் பகுதியில் பறக்கவிட்டோம். அது ஒரு சிறிய வேவு வானூர்தியாக இருந்தபோதும் அதிக சத்தம் எழுப்பும். அதனால் புலிகள் தமது வானூர்தியைக் குழைகளால் மூடி வைத்ததை அவதானித்தோம்.

### செஞ்சோலை வானூர்தித் தாக்குதல்

செஞ்சோலைத் தாக்குதலுக்கு முன்னர் எமது ஆளில்லா வானூர்திகள் எடுத்த படங்களில் வீதிக்குக் குறுக்காக இருபுறமும் ஆயுதங்களுடன் அங்கு சிலர் ஓடுவதை அவதானித்தேன். தொடர்ந்தும் அவதானித்தபோது அங்கு புலிகளின் பயிற்சி முகாம் இருப்பதைக் கண்டுபிடித்தேன். பின்னர் அந்த இடத்துக்குக் குண்டுவீச்சு வானூர்திகள் குண்டுகளை வீசின. அதில் காயப்பட்டவர்களை முல்லைத்தீவு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது. அப்போது எம்மிடம் இருந்த ஆளில்லா வானூர்திகள் அவ்வளவு தரமானவையாக இருக்கவில்லை. பறப்பில் ஈடுபடும்போது 44 ஆயிரம் அடிக்குமேல் பறக்க வைப்போம். இயந்திரத்தில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் அதை மீண்டும் இயங்க வைக்க முடியாது. அத்தகைய சூழலில் கமராவை நிறுத்திவிட்டு அதன் மின்கல சக்தியை வைத்து அதை எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இறக்க வேண்டும். ஒருதடவை அனுராதபுரக் கட்டுப்பட்டு மையத்தில் இருந்தவாறு வவுனியா முகாமுக்குள் இயந்திரக்கோளாறு காரணமாக ஒரு வானூர்தியை இறக்க முயற்சித்தோம். வவுனியா முகாம் எல்லையிலிருந்து 1 கிலோ மீற்றர் தூரம் வரை பறப்பதற்கு மட்டுமே மின்கலத்தின் சக்தி போதுமானதாக இருந்ததால் எண்ணூறு அடி உயரத்திலிருந்து நிலத்தில் இறக்கினேன். பின்னர் எம்.ஐ. 17 உலங்கு வானூர்தியில் சென்று ஆளில்லா வானூர்தியை ஏற்றி எடுத்தோம். சிறிய பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அப்போது அதன் விலை 1.7 மில்லியன் டொலர்களாகும். அதைப் பத்திரமாக மீட்டதற்காகப் பாராட்டப்பட்டேன்.

### தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல்

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள புலிகளின் முகாம் ஒன்றில் காணப்பட்ட ஏற்பாடுகளை வைத்துப் பிரபாகரன் அல்லது வேறு யாரே முக்கிய தலைவர் அங்கு வரவிருக்கிறார் என்பதை வேவு வானூர்திப் படங்கள் மூலம் ஊகிக்க முடிந்தது. அந்தப் பகுதியிலிருந்த படைத்துறைப் புலனாய்வுப் பிரிவின் தகவல்களும் அதை உறுதிப்படுத்தின. அந்த முகாமைத் தொடர்ச்சியாக அவதானித்துப் பிரமுகர் ஒருவரின் வருகைக்குப் பின்னர் தகவல் அறிவித்து வானூர்திக் குண்டுவீச்சை நடத்தினோம். யாரோ ஒரு தலைவர் கொல்லப்பட்டதை அறிய முடிந்தது. அது தமிழ்ச்செல்வன் என்பதைப் பின்னர் தெரிந்துகொண்டேன்.




### 2006இன் பின்பான வளர்ச்சி

2006ஆம் ஆண்டின் பின்பான காலப்பகுதியில் படைப்பிரிவின் எல்லாத் தாக்குதல்களுக்குமான தகவல்களை எனது பிரிவே வழங்கியது. ஒரு தடவை மட்டக்களப்பில் புலிகளின் பெரிய படையணி ஒன்று டிரக்ரர் மூலம் நகர்வதை அவதானித்து அவர்கள் ஒரு முக்கிய சந்தியை நெருங்கும்வரைத் துல்லியமாகத் தகவல் கொடுத்துச் சந்திக்கு வந்ததும் எறிகணைகளை ஏவி அந்தப் படையணியை அழிக்க முடிந்தது. நாம் கொடுக்கும் இலக்குகளுக்குக் குண்டுகள் வீசப்பட்ட பின் ஆளில்லா வானூர்தி மூலம் அதை அவதானிக்க முடியும்.

முல்லைத்தீவுப் பகுதியில் ஓரிடத்தில் புலிகளின் சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றிருப்பதை அவதானித்தேன். அங்கு என்ன இருக்கிறது என்பதைக் காணமுடியாவிட்டாலும் அங்கு ஏதோ முக்கியத்துவம் உள்ளது என்பதை அறிந்து வானூர்திக் குண்டுவீச்சை மேற்கொண்டபோது புலிகளின் நிலத்துக்கடியிலான எண்ணெய்க் களஞ்சியங்கள் இருப்பது தெரிந்தது. 2 நாள்கள் அந்தப் பகுதி எரிந்துகொண்டிருந்தது.

ஒரு தடவை பூநகரியிலிருந்து ஆட்லறிகளைச் சங்குப்பிட்டிப் பகுதியூடாகப் புலிகள் மாற்றுவதை அவதானித்து அவற்றை மிதக்கும் படகுகளில் ஏற்றும்போது வானூர்திகள்மூலம் குண்டுவீசி அழித்தோம். திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் சரக்குக் கப்பல்களைப் புலிகள் தாக்க வருவதை அவதானித்துத் தாக்குதல் செய்திருக்கிறோம்.

### புலிகள் சுட்டுவீழ்த்திய ஆளில்லா வானூர்தி

ஒருதடவை இரணைமடுப்பகுதியில் வேவு பார்த்துக்கொண்டிருந்த ஆளில்லா வானூர்தி திடீரெனக் கட்டுப்பாட்டில் இல்லாது போயிற்று. இயந்திரக் கோளாறு ஏற்பட்டால் அது பற்றிக் கமரா மூலம் அறிந்துகொள்ள முடியும். ஆனால் கமராவும் ஒரே நேரத்தில் செயலிழந்தது. புலிகள் தமது வானூர்தி மூலம் வேவு வானூர்திக்கு மேலே சென்று பறந்து துப்பாக்கியால் சுட்டுவீழ்த்தினார்கள் என்று பின்னர் தெரியவந்தது. இந்த ஆளில்லா வானூர்தி பறப்பில் ஈடுபடுவதற்கு முன்னர் "கசோலின்" என்ற எரிபொருள் (பெற்றோலைவிட வித்தியாசமானது) 142 லீற்றர் அந்தச் சிறிய வானூர்திக்கு நிரப்புவார்கள். அதில் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் மாற்று ஏற்பாடுகள் இருந்தன. இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட சுப்பர் கப் என்ற ஆளில்லா வானூர்தி இருந்தது. அதன் பின்னர் இஸ்ரேல் தயாரிப்பான சேர்ச்சர் மார்க்-2 வானூர்தி கிடைத்தது. அது 16 மணி நேரம் பறக்கும் ஆற்றலுள்ளது. முன்னைய வானூர்திகளைவிட பெரியது. மிகத் துல்லியமான படங்களைத் தரவல்லது. இத்துறையில் பணியாற்றியதால் போரைப் பார்க்கும் வாய்ப்பு இருந்தது. வானூர்தி மூலம் படையினரின் வெற்றிக்கு அதிகம் உதவ முடிந்தது. அதை வாழ்நாளில் பெருமையாகக் கருதுகிறேன்.

# அரசியல்வாதிகளை அடக்கும் சமூக வலைத்தளங்கள்!

எனது நண்பர் ஒருவர் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் அண்மையில் ஓர் உதவி கேட்டுப்போனார். அதற்கு அந்த உறுப்பினர் "இப்ப எங்கட கதை எடுபடாது பிறகு பாப்பம்" என்றார். ஆனாலும் விடாத நண்பர் தனது தேவையை நிவர்த்தி செய்வதற்கு எந்த அதிகாரியுடன் தொடர்புகொள்ளவேண்டுமோ அவரது தொலைபேசி இலக்கத்தை அந்த உறுப்பினரிடம் நீட்டி, "நீங்கள் ஒருக்காக் கோல் பண்ணினால் எல்லாம் நடக்கும்" என்றார். உடனே உறுப்பினர் "இப்ப கோல் பண்ணுறதுதானே பிரச்சினையான விடயம். கிளிநொச்சிப் பெண் மருத்துவர் எவ்வளவுக்குப் பிரச்சினையைக் குடுத்து விட்டார். தயவு செய்து இதை மட்டும் கேட்டுக் குறை நினைக்காதேங்கோ. ஓம் எண்டாலும் பிரச்சினை இல்லை எண்டாலும் பிரச்சினை" என்று. பயந்தவாறு கூறினார்.

தற்போது தொலைபேசி உரையாடல்கள் அதிகம் பதிவுசெய்யப்படுகின்றன. பலரது உரையாடல்களைப் புலனாய்வுத் துறையினர் பதவு செய்வது வழக்கம். "வொய்ஸ் கோல் றெக்கோடிங்" என்கிற செயலியை வைத்துச் சந்தேகமான ஒருவர் எந்தத் தொலைபேசியில் உரையாடினாலும் அவரது "ஹலோ" என்ற தொடக்க வார்த்தையை வைத்தே ஒலிப்பதிவு தானாக நடக் கும் நுட்பம் உள்ளது. அரசியல்வாதிகள் பலருக்கு இதுபெரும் தலையிடியாக மாறியிருக்கிறது.

அழைப்பை ஏற்படுத்துபவர்கள் "கொப்பர் உப்பவும் குடிக்கிறவரோ?" என்ற பாணியில் கேள்வி கேட்கின்றனர். இதற்கு ஆம் என்றால் முன்னர் குடித்தவர் இப்பவும் குடிக்கிறவர் என்று அர்த்தப்படும். இல்லை என்றால் முன்னர் குடித்தவர் இப்ப குடிப்பதில்லை என்று அர்த்தப்படும். எதுவாக இருந்தாலும் குடித்தவர் என்பது உறுதிப்படுத்தப்படும்.

பலர் முக்கிய பிரமுகர்களுடன் கதைக்கும் விடயங்களைப் பதிவு செய்தாலும் அவற்றைத் தேவை கருதியே வெளியிட்டு வந்தனர். ஆனால் கிளிநொச்சிப் பெண் மருத்துவர் தன்னுடன் கதைத்தவர்களின் குரல் பதிவை உடனுக்குடன் வெளியிட்டது பலரைச் சிக்கலில் மாட்டியதுடன் பலரது அபிப்பிராயங்கள் மாறவும் வழிவகுத்திருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சில வருடங்களுக்கு முன்னர் "தோட்டக்காட்டான்" என்று விளித்துப் பேசிச் சிக்கலை எதிர்கொண்டார். தற்போது பெண் மருத்துவர் விடயத்திலும் சிக்கலில் மாட்டியிருக்கிறார். இனிவரும் நாள்களும் நடக்கவிருக்கும் தேர்தல்களும் பல மூத்த அரசியல் தலைவர்களையும் திணைக்களத் தலைவர்களையும் சிக்கலில் மாட்டும் பொறியாகச் சமூக வலைத்தளங்கள் தாகத்துடன் காத்து நிற்பதால் வீராப்புப் பேசுபவர்கள்கூட அடக்கி வாசித்துப் பெட்டிப் பாம்பாக மாறும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

முன்பு பத்திரிகைகள் தாம் விரும்பினால் பதிப்பிப்பார்கள் (தமக்குச் சார்பானதை) இல்லாவிட்டால் நிராகரிப்பார்கள். ஆனால் சமூக வலைத்தளங்கள் மூலம் ஒவ்வொருவரும் சுதந்திரமாகக் கருத்து வெளியிடவும் விவாதிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதனால் போலிகளைக் கலைத்துக் கலைத்து அடிக்கும் வாய்ப்புச் சாதாரண மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. கடந்த பொதுத் தேர்தலில் சொந்தமாகப் பத்திரிகை நடத்தி வந்தவர்கூடத் தேர்தலில் தோற்கும் அளவுக்குச் சமூக வலைத்தளங்கள் பத்திரிகைகளைவிடச் சக்தி மிக்கதாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற் பருமனைக் குறைக்க கொழுப்பைக் குறைக்கவேண்டும்

கு.கணேசன்

ஒரு பழமொழி உண்டு - 'காலையில் அரசனைப் போல் சாப்பிடு; மதியம் சேவகனைப் போல் சாப்பிடு; இரவில் ஆண்டியைப் போல் சாப்பிடு' என்று. காலையில் எல்லாச் சத்துகளும் நிரம்பிய முழுத் தானியங்கள், பழங்கள், காய்கறிகள் கலந்த உணவைச் சாப்பிட வேண்டும்; மதியம் கொஞ்சம் சோறு, நிறையவே காய்கறிகள்; இரவில் எளிதில் செமிபாடடையக்கூடய எளிய உணவுகளைச் சாப்பிட வேண்டும் என்பது இதன் அர்த்தம்.

ஆனால், இன்றைக்குப் பெரும்பாலானோர் காலை உணவைத் தவிர்க்கின்றனர். மதியம் கடைகளில் கொறிக்கின்றனர். இரவில் பார்ட்டிகளுக்கும் ஹோட்டல்களுக்கும் சென்று, பிரியாணி, ஃபிரைடு ரைஸ், பரோட்டா, நாண், வறுத்த, பொரித்த சகல உணவுகளையும் வயிற்றில் அள்ளிக்கொள்கின்றனர். நடுநிசிக்குப் பிறகே உறங்குகின்றனர். உடற்பருமன் பிரச்சினை ஓங்குவதற்கு இதுவும் ஒரு காரணம்.

இரவில் கேழ்வரகு இட்லி; கம்பு - சோள தோசை, முழுக் கோதுமையில் செய்த சப்பாத்தி, அவல், தோசை, காய்கறி சேர்த்த வரகரிசி உப்புமா... இப்படி ஏதாவது ஒன்றைச் சாப்பிடலாம். தொட்டுக்கொள்ள கிழங்கில் செய்யப்படாத தொடு கறி நல்லது. சின்ன வெங்காயச் சட்னி, தக்காளிச் சட்னி, புதினா சட்னி, பாசிப்பருப்பு சாம்பார் சிறந்தவை. இட்லி/தோசை இரண்டு அல்லது மூன்று. சட்னி, சாம்பார் இரண்டும் சேர்ந்து 100 மி.லி.யைத் தாண்டிவிடக்கூடாது.

வாரம் ஒருமுறை இரவில் வெறும் பழங்கள் மட்டுமே போதும். இரவில் பால் சாப்பிட வேண்டும் என்பது பொதுவானவர்களுக்குப் பொருந்தும். ஆனால், உடற் பருமனைக் குறைக்க விரும்புவோருக்கு இது பொருந்தாது. இரவு உணவுக்குப் பிறகு பால் தேவை இல்லை.

## முட்டையும் மீனும்

அசைவப் பிரியர்கள் முட்டை அல்லது மீன் சாப்பிடலாம். அளவாக இறைச்சி சாப்பிடலாம். மறுபடி, மறுபடி முட்டையைச் சிபாரிசு செய்வதால், முகம் சுளிக்க வேண்டாம். அதற்குக் காரணம் இருக்கிறது. முட்டை ஒரு புரோட்டீன் புதையல். புரோட்டீன் என்பது 22 அமினோ அமிலங்களின் கூட்டுப்பொருள். இவை அத்தனையும் கலந்த நீச்சல் குளம் முட்டை. இது உடலுக்கு வலிமை தரும். தசைகளுக்கு வளர்ச்சி தரும். இதிலுள்ள கால்சியம் எலும்புகள் தேய்வதைத் தடுக்கும்; வைட்டமின்கள் நரம்புகளுக்கு நல்லது. மீனும் அப்படியே. முட்டையும் மீனும் மற்ற அசைவங்களைவிட எளிதில் செமிக்கும்.

தாவரப் புரதத்தையும், விலங்குப் புரதத்தையும் கலந்து சாப்பிட்டால் அல்லது வாரத்தில் ஐந்து நாள் சைவம் இரண்டு நாள் அசைவம் எனச் சாப்பிட்டால் நம் தேவைக்கு அமினோ அமிலங்கள், வைட்டமின்கள், மினரல்கள் எனச் சகலமும் கிடைத்துவிடும். இரவு உணவு சைவப் புரதமாக இருந்தால், உணவு எரித்தலை 30% அதிகப்படுத்தும். அப்போது உடல் கொழுப்பும் எரிக்கப்படும். உடற்பருமன் ஒதுங்கிவிடும்...

ஒருவருக்கு நாளொன்றுக்கு ஒரு கிலோ உடல் எடைக்கு ஒரு கிராம் புரதம் தேவை என்பது பொதுவான கணக்கு. ஆனால், உடற்பருமன் உள்ளவர்கள் தினமும் ஒரு கிலோ உடல் எடைக்கு 2 கிராம்வரை புரதம் சாப்பிடலாம் என்பது புதுக் கணக்கு (சிறுநீரகப் பிரச்சினை உள்ளவர்கள் 0.6 கிராம்/கி.கிராம் உடல் எடை என்ற அளவில்தான் புரதம் சாப்பிட வேண்டும்).

## கொழுப்பு உணவு

கொழுப்பு, அநேகம் பேருக்குப் பிடிக்காத வார்த்தை. 'உனக்குக் கொழுப்பு அதிகம்' என்று மருத்துவர் தவிர மற்றவர்கள் சொன்னால், கோபம் வருகிறது. கொழுப்புடன் அப்படியென்ன பகை? கொழுப்பைப் பார்த்தீனியம்போல் பார்ப்பது பொதுப்புத்தியில் புதைந்திருக்கிறது. அதுதான் காரணம்.

கொழுப்பு உணவும் நமக்குத் தேவைதான். ஆனால், 'கொழுப்பு மட்டுமே தேவை' என்று கூறுவது தேவை இல்லை. வெண்ணெய்க்கும் நெய்யுக்கும் உள்ள உறவு கொழுப்புக்கும் கொலஸ்டிராலுக்கும் உள்ளது. கொழுப்பு உடலில் கூடினால் உடற்பருமன் குருதியில் கூடினால் அது கொலஸ்டிரால்.

கொழுப்பிலிருந்து கொலஸ்டிரால் பிறக்கிறது. நல்ல கொலஸ்டிரால் கெட்ட கொலஸ்டிரால். இரண்டாவதாகச் சொல்லப்பட்டது இதயத்தைத் தாக்கும் அ[illegible] கொழுப்பு கூடும்[illegible] இதுவும் கூடும் என்பது மாற்ற முடியாத விதி.

ஆகவே, கொழுப்பு அளவோடு இருந்தால் ஆபத்து இல்லை. உடற்பருமன் உள்ளவர்கள் தங்களுக்குத் தேவையான கலோரிகளில் 20 சதவீதத்தைக் கொழுப்பிலிருந்து பெறலாம். உதாரணத்துக்கு, ஒரு கிராம் கொழுப்பு உணவு 9 கலோரிகள் தரும். 2000 கலோரிகள் உணவு தேவைப்படுபவர்கள், தினமும் 45 கிராம் கொழுப்பு உணவு எடுத்துக் கொண்டால், அது 400 கலோரிகள் தரும்.

**'எங்கள் எண்ணெயில் கொழுப்பே இல்லை' என்று மணிக்கு பத்து முறை பாடம் நடத்தும் ஊடக விளம்பரத்தில் மயங்கி, கண்ட எண்ணெய்களைப் பயன்படுத்துகிற அம்மணிகள்தான் அதிகம்.**



கொழுப்பு என்றதும் நமக்கு உரித்த கோழியும் வறுத்த இறைச்சியும் தான் நினைவுக்கு வரும். கொழுப்பு இந்த இரண்டில் மட்டும் இல்லை. சமையல் எண்ணெய் இருக்கிறது பால், தயிர், வெண்ணெய், நெய், சீஸ், சிப்ஸ், பனீர், பாதாம், முந்திரி, தேங்காய், முட்டை, மீன், கிரீம்கேக், பலகாரங்கள், இனிப்புகள் எனப் பலவற்றில் அதன் 'இருக்கை' இருக்கிறது.

## நல்ல எண்ணெய் எது?

இவற்றில் எண்ணெய் ஒரு விஐபி. இன்றைக்கு எண்ணெய் இல்லாத சமையலை நினைத்துப் பார்க்கமுடியாது. ஆனால், 'நல்ல எண்ணெய் எது?' எனக் கேட்டால் பல அம்மாக்களுக்குப் பதில் தெரியாது. 'எங்கள் எண்ணெயில் கொழுப்பே இல்லை' என்று மணிக்கு பத்து முறை பாடம் நடத்தும் ஊடக விளம்பரத்தில் மயங்கி, கண்ட எண்ணெய்களைப் பயன்படுத்துகிற அம்மணிகள்தான் அதிகம். ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். ஊழலே இல்லாத கட்சியைக் கைகாட்டுவது எவ்வளவு சிரமமோ. அவ்வளவு சிரமம் கொழுப்பே இல்லாத எண்ணெய்யைச் சொல்வதும்!

சந்தையில் கிடைக்கும் ரீஃபைண்டு ஒயில் வகைகள் எல்லாமே உடற்பருமனுக்கு ஆதரவாளர்கள் தான். இவற்றில் ஆலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், அரிசித் தவிட்டு எண்ணெய், சோயா எண்ணெய் ஆகியவற்றை சிபாரிசு செய்யலாம். இவற்றிலும் செக்கு எண்ணெய்கள்தான் நல்லது.

ஒரே எண்ணெய்யை எல்லாச் சமையலுக்கும் பயன்படுத்துவதை விட, வறுக்கவும் பொரிக்கவும் சூரியகாந்தி எண்ணெய், தாளிக்க நல்லெண்ணெய், பலகாரம் செய்ய கடலை எண்ணெய் என்று பயன்படுத்தினால் கொழுப்பு அதிகரிக்காது. அல்லது வாரம் ஓர் எண்ணெய் எனும் சுழற்சி முறையிலும் பயன்படுத்தலாம். எந்த எண்ணெய் என்றாலும், ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 15 மில்லிக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்பது முக்கியம்.

தினமும் இறைச்சி வேண்டாதது, கோழியோ, இறைச்சியோ வாரம் ஒரு முறை சாப்பிடலாம். வாரம் இருமுறை மீன் சாப்பிடலாம். மீனில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம் உள்ளது. இது கெட்ட கொலஸ்டிராலைக் குறைத்து, நல்ல கொலஸ்டிராலை அதிகப்படுத்துகிறது; இதயத்துக்கு நல்லது. 'நான் சைவமாச்சே!' என்று கன்னத்தில் கை வைக்க வேண்டாம். ஆழி விதை, ஆக்ரூட், சோயாபீன்ஸ், கடுகு எண்ணெய், கிவி பழத்தில் ஒமேகா ஆயில் உள்ளது.

பால், தயிர், வெண்ணெய், நெய், சீஸ், பனீர், பாதாம், முந்திரி, தேங்காய் எல்லாவற்றையும் தினமும் ஒன்று என முறை வைத்துக்கொண்டு சாப்பிடலாம். அளவுதான் முக்கியம். சமைக்கப்படும் எண்ணெயிலிருந்து கிடைக்கும் கொழுப்பைக் கழித்தால், தினமும் 30 கிராம் அளவுக்குத்தான் இவற்றைச் சாப்பிடவேண்டும்.

## கிரீம் கலந்த பண்டங்கள்

உணவில் கொழுப்பைக் குறைக்க இன்னும் சில பரிந்துரைகள்.... கிரீம் கலந்த எல்லா பண்டங்களும் எல்லை தாண்டும் எதிரிகள்! உதாரணத்துக்கு, கிரீம் கேக், ஐஸ்கிரீம், குக்கீஸ். மீனோ, கோழியோ எதுவானாலும் குழம்பாக்கிச் சாப்பிட்டால் கொழுப்பு குறையும் ரோஸ்ட்டாகச் சாப்பிட்டால் கொழுப்பு கொந்தளிக்கும். எந்த அசைவத்தையும் வீட்டில் சமைத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்குள்...

43

தர்மராசா



## அது எனது இறுதி ஸ்கொட் என்று தெரிந்திருக்கவில்லை

அந்த ஜெயிலர் நல்ல மனிதனாக இருக்க வேண்டும். அந்தப் பிள்ளைகளுக்கு இடங்களைக் காட்டிவிட்டு அவசரமாக ஓடி வந்தார். எம்முடன் பண்பாக நடந்துகொண்டார். சிறைச்சாலைப் பேருந்தில் வேறு நபர்கள் வருவதால் ஏதாவது ஆபத்து அல்லது இடர் ஏற்பட்டால் அவர்களும் வீணாக இறக்கவேண்டிய நிலை ஏற்படும். காலை 10 மணியளவில் திருகோணமலைச் சிறைச்சாலையைச் சென்றடைந்தோம்.

**13.6.2002** அன்று எதிர்பாராத விடயமாகச் சிறைச்சாலை வான் ஒன்றில் அனுராதபுரம் செல்லக் கிடைத்தது. இந்தப் பயணத்துடன் திரு கோணமலைப் பயணமும் முடிவுற்றது. பிறிதொரு கைதி அனுராதபுரத்திலிருந்து திருகோண மலை மேல் நீதிமன்றுக்கு வந்ததால் எனக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது. வான் மிக வேகமாக ஓடியது. மதியத்துக்குப் பின்னர் சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டபோதிலும் பல இடங்களுக்குச் சென்று அனுராதபுரத்துக்குப் போய்ச்சேர மாலை 4 மணியாகிவிட்டது. ஜெயிலரின் வீட்டுக்கு மீன் கொடுக்கப்போனபோது அவரது வீட்டிலிருந்து எங்களுக்குத் தேநீர் கொண்டுவந்து தந்தார்கள். நாம் இருவர் மாத்திரமே என்பதால் அவர்களின் தேவைக்கு அன்று முழுதும் அந்த வானை அவர்களால் முழுமையாகப் பயன்படுத்த முடிந்தது.

**23.6.2002** அன்று அதிகாலை 4 மணிக்கு எழுந்து களுத்துறை போவதற்குத் தயாரானேன். காலை **8.30** மணியளவில் பேருந்து புறப்பட்டது. இந்தப் பயணத்துடன் அனுராதபுரம் சிறைக்குப் பயணப்படவேண்டிய தேவை இல்லாதுபோனது. பொசன் முழுநிலவுத் தினத்துக்காக (மகிந்த தேரர் இலங்கைக்கு வந்தபோது தேவநம்பியதீஸனை மிகிந்தலையில் சந்தித்த நாள். அன்று இலங்கை பௌத்த மக்கள் யாத்திரைபோவார்கள்) பெருந் தொகையான மக்கள் அனுராதபுரத்துக்குப் போவதை அவதானித்துக்கொண்டிருந்தேன். அன்றைய பயணத்துக்குக் களுத்துறை ஜெயிலர் ஒருவர் பொறுப்பாக இருந்தார். என்னுடன் வந்த கைதிகளில் இருவர் தமக்குள்ளே வாக்குவாதம் செய்து அடிபடும் நிலை ஏற்பட்டது. ஒருவர் அடிக்க மற்றவர் சக கைதியின் கையைக் கடித்து விட்டார். அவர்கள் இருவருக்கும் அடிப்பதற்காக ஜெயிலர் உள்ளே வந்தார். ஆனால் அடிக்க

> **சிலவேளை ஒரு கைதியை நடத்திக் கூட்டிச்செல்லும்போது அமைச்சர் ஒருவருக்குப் பாதுகாப்புக் கொடுப்பதுபோல ஆயுததாரிகளாகப் பொதுமக்களை அணுகவிடாது அழைத்துச்செல்வ துண்டு. கையில் விலங்குடன் இருப்பதுதான் கைதி என்பதைப் பொதுமக்களுக்குக் காட்டுகிறது**

வில்லை. அந்தச் சூழலைக் கைதிகளே ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

**22.7.2002** அன்று கொழும்பு வழக்குக்காகக் களுத்துறையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டேன். என்னுடன் வந்த மற்றைய கைதிக்கு விடுதலைக்கான அறிவித்தல் வந்திருந்தது. அவர் தனது பொதிகள், பாக்குகள் எல்லாவற்றையும் கொண்டுவந்திருந்தார். 8 பேர் வரையில் அந்த ஸ்கொட்டில் சென்றோம். ரஜீவ என்ற ஜெயிலர் அதற்குப் பொறுப்பாக வந்தார். பேருந்திலிருந்து இறங்கும்வரை அதுதான் எனது கடைசி ஸ்கொட் என்பது எனக்குத் தெரியாமலே இருந்தது. அன்று பிற்பகல் 2மணியளவில் எதிர்பாராத விதமாகக் கொழும்பு மேல்நீதிமன்று இலக்கம் 3 இலிருந்து விடுதலை செய்யப்பட்டேன்.

யாழ்ப்பாணத்தில் வழக்குக் தொடுக்கப்பட்ட பலர் திருகோணமலையிலிருந்து காங்கேசன் துறைவரை கப்பலில் ஏற்றிச்செல்லப்படுவார்கள். அவ்வாறு கொண்டுசெல்லும்போது கைதிகளுக்குக் கைவிலங்கு போடக்கூடாது என்பது சட்டமாகும். கைவிலங்கு போடப்பட்டிருப்பின் கப்பலுக்கு ஏதாவது ஆபத்து நேரிடும்போது அந்தக் கைதிக்கு எதுவும் ஏற்பட்டுவிடும். அவ்வாறு ஆபத்துகள் எவையும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பது அதன் நியதியாகும்.

பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்க வழித் துணையுடன் செல்லும் திருகோணமலை - காங்கேசன்துறைக் கப்பலில் கைவிலங்கில்லாது கைதிகள் கொண்டுசெல்லப்படுவதுண்டு. ஒரு சந்தேகநபர் சிறையிலிருக்கும்வரை கைவிலங்கு போடப்பட்டுப் பாதுகாப்பான வாகனங்களில் ஏற்றப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார். சிலவேளை ஒரு கைதியை நடத்திக் கூட்டிச்செல்லும்போது அமைச்சர் ஒருவருக்குப் பாதுகாப்புக் கொடுப்பதுபோல ஆயுததாரிகளாகப் பொதுமக்களை அணுகவிடாது அழைத்துச்செல்வதுண்டு. கையில் விலங்குடன் இருப்பதுதான் கைதி என்பதைப் பொதுமக்களுக்குக் காட்டுகிறது. இவ்வளவு பாதுகாப்பும் விடுதலை என்று கூறியதும் இல்லாது போய்விடுகிறது. அவன் வெறும் ஆளாக அருகில் யாருமின்றித் தெருவில் இறங்கும்போது சிறைச்சாலை ஊழியர்கள் அதுவரை கொடுத்த பாதுகாப்பை நினைக்கக் கைதிக்கு வேடிக்கையாக இருக்கும். (தொடரும்)



### உடற் பருமனை...

சாப்பிடுவதே நல்லது. ஹோட்டல் அசைவத்தில் கொழுப்பு கும்மாளமிடும்.

அடிக்கடி பார்ட்டிகளுக்குப் போவதை நிறுத்தினால், பருத்த உடலுக்கு டாட்டா காண்பிக்கலாம். விருந்துகளுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் வந்தால், வீட்டில் கொஞ்சம் பழங்களைச் சாப்பிட்டுவிட்டுச் செல்லுங்கள். விருந்தில் சாப்பிடும் அளவு குறைந்துவிடும். பார்ட்டிகளில் குடி, முட்டை, மீன், இறைச்சி வகைகளை மட்டும் சாப்பிடுங்கள். பிரியாணி, ஃபிரைட் ரைஸ், பரோட்டா, ரொட்டி, நான் போன்ற 'சகுனி'களைத் தொடாதீர்கள். இனிப்புகளையும் நொறுக்குத் தீனிகளையும் ஓரங்கட்டுங்கள். பாக்கெட் உணவுகளையும் பாட்டிலில் அடைக்கப்பட்டதையும் மறந்து விடுங்கள். ஆல்கஹால் ஆகாதது... தப்பு, தப்பு, விசம்.

உடற்பருமனைக் குறைக்க மாத்திரையைத் தேடி அலைவதைவிட, சாப்பிடும் உணவில் கொழுப்பைக் குறைக்க வழி தேடுவதுதான், புத்திசாலித்தனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மெட்டாவின் வீழ்ச்சி சொல்லும் செய்தி என்ன?

டி.பரத்

முகப்புத்தகம் (பேஸ்புக்) என்று அறியப்பட்ட 'மெட்டாவேர்ஸ்' நிறுவனத்தின் சந்தை மதிப்பு ஒரே நாளில் படு வேகமாக அடைந்த வீழ்ச்சி, உலகையே கவனிக்க வைத்துள்ளது. 'மெட்டா' பங்கு மதிப்பில் 26% சரிவு ஏற்பட்டதானது, அதன் சந்தை மதிப்பில் 23,000 கோடி அமெரிக்க டொலர்களை இல்லாமல் செய்திருக்கிறது. இதன் பின்னணி என்ன?

**உச்சபட்சப் பயனீட்டாளர்**

சமூகவலைத்தள நிறுவனமாக இருந்த முகப்புத்தகத்தை அடுத்த கட்டமாக, 'மெட்டாவெர்ஸ்' எனும் மெய்நிகர் உலகமாக வளர்த்தெடுக்க அந் நிறுவனத்தின் தலைவர் முன்னெடுத்துவரும் நிகழ்ச்சிகளை அறிவோம்.

முகப் புத்தக நிறுவனம் வளர்ந்துகொண்டே வந்து, இனி வளர்வதற்கு வாய்ப்பில்லை என்ற கட்டத்தை அடைந்துவிட்டது. அதாவது, புதிதாக முகப்புத்தகம் நோக்கி வருவோர் எண்ணிக்கை தலை தட்டிவிட்டது. இன்ஸ்டாகிராம் வளர்ச்சிக்குப் பிறகு சுருங்கவும் செய்கிறது. ஓராண்டை எடுத்துக்கொண்டால், முகப்புத்தகம் - மூன்றாவது காலாண்டிலிருந்ததைவிட நாலாவது காலாண்டில் 5 லட்சம் வாடிக்கையாளர்களை இழந்திருக்கிறது. அந்த நிறுவனம் தொடங்கப்பட்ட 18 ஆண்டுக் கால வரலாற்றில் இப்படி வீழ்ச்சி அடைவது இப்போதுதான்.

**ஆப்பிள் செய்த மாற்றம்**

ஆப்பிள் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்காக, செயலிகளைக் கண்காணிக்கும் வெளிப்படைத்தன்மையை அறிமுகப்படுத்தியது. இதன் ஒரு பகுதியாகத் தங்களுடைய ஆன்லைன்




செயல்பாடுகளை முகப்புத்தகம் தொடர்ந்து கண்காணிப்பதை விரும்பவோ, தடுக்கவோ ஐபோன் உரிமையாளர்களுக்கு ஒரு வாய்ப்பையும் அளித்தது 'ஆப்பிள்'. இப்படித் தனியுரிமையைப் பாதுகாக்கும் வாய்ப்பை 'ஆப்பிள்' நிறுவனம் அளித்ததானது, 'மெட்டா' நிறுவனத்தின் வியாபாரத்துக்குப் பலத்த அடியாகிவிட்டது.

ஏனென்றால், இனி முகப்புத்தகமும் இதரச் செயலிகளும், வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து பின்தொடர அனுமதிக்குமாறு அவர்களிடமே கேட்டாக வேண்டும். இதனாலேயே பல வாடிக்கையாளர்கள் மெட்டாவெர்ஸிலிருந்து வெளியேறிவிட்டனர். முகப்புத்தகத்துக்கு இனி பயனீட்டாளர் பற்றிய தரவுகள் குறைந்துவிடும். அதனால் இலக்கு வைத்து வாடிக்கையாளர்களைப் பின்பற்றிவந்த அதன் வியாபாரம் சரிந்துவிடும். இதனால் நிறுவனத்தின் வருமானம், லாபம் இரண்டும் கடும் பாதிப்பை எதிர்கொள்ளும்.

இன்னொரு இழப்பும் முகப்புத்தக நிறுவனத்துக்கு ஏற்பட்டிருக்கிறது. அதில் விளம்பரம் செய்கிறவர்களுக்கு ஐபோன் வைத்திருப்போர் மேலும் பசையுள்ள சந்தையாகத் திகழ்பவர்கள். இணையதளத்தை அணுகும் ஐபோன் வாடிக்கையாளர்கள் வசதி படைத்தவர்கள், நல்ல செலவாளிகள். ஆப்பிள் நிறுவனம் செய்த தனிநபர் உரிமை சார்ந்த இந்த மாற்றத்தால் மட்டும் மெட்டா நிறுவனத்துக்கு 1,000 கோடி டொலர்களுக்கும் மேல் அடுத்த ஆண்டு வருவாய் குறையும். ஆப்பிள் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் அந்தரங்கத்தைக் காப்பதாக அளித்துள்ள வாக்குறுதியைக் கைவிடாது. மெட்டா நிறுவனப் பங்குகளை வாங்கி வைத்திருப்பவர்களுக்கும் இது தெரியும்.

**விளம்பரத்தில் கூகுளுக்கு வருவாய்**

மெட்டாவின் வணிக இழப்பு, போட்டி நிறுவனங்களுக்கு லாபகரமான திருப்பம். மெட்டா நிறுவனத்துக்கு விளம்பரம் தந்தவர்கள் இப்போது கூகுளுக்கும் விளம்பரங்களைத் திருப்புகின்றனர். மின் வணிக தேடுதல் விளம்பரங்கள் இனத்தில் கூகுளுக்கு வருவாய் மிகப் பெரிய அளவில் உயர்ந்திருக்கிறது. இந்தப் பிரிவில்தான் மெட்டாவுக்கு கடந்த மூன்று மாதங்களில் சரிவு ஏற்பட்டது. மெட்டாவைப் போல பயனீட்டாளர் தரவுகளுக்காக ஆப்பிளை நம்பியிருக்கவில்லை கூகுள். அதனிடம் மூன்றாம் தரப்பு தரவுகள் ஏராளம். ஆப்பிள் நிறுவனத்தின் சஃபாரி பிரவுசரைப் பயன்படுத்துவோரால் இனி கூகுளுக்கு வியாபாரம் அதிகமாகிவிடும். மேலும் மேலும் விளம்பரதாரர்கள் கூகுளின் தேடுபொறிகளுக்கு விளம்பரங்களைத் வரத் தொடங்கினால் மெட்டா நிறுவனத்துக்கு அது பெரிய பிரச்சினையாகவே தொடரும்.

டிக்டாக், ரீல்ஸ்கள் ஏற்படுத்தும் கொதிநிலை முகப்புத்தக நிறுவனத்துக்கு சீனத்தின் 'டிக்டாக்' செயலி மிகப் பெரிய எதிரியாகவே திகழ்ந்தது. அதில் வெளியான குறுகிய கால வீடியோக்களுக்கு 100 கோடிக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் ஏற்பட்டுவிட்டனர். அது இப்போது மெட்டாவின் இன்ஸ்டாகிராமுடன் கடுமையான போட்டியிலிருக்கிறது.

'டிக்டாக்'கைப் போலவே இன்னொரு செயலியை 'மெட்டா' உருவாக்கியது. அது 'இன்ஸ்டாகிராம் ரீல்ஸ்' என்ற விடியோ காட்சிகளையும் கொண்டது. அதுவே இப்போது அதன் செயலிகளிலேயே அதிகம் பயன்படுத்தப்படுவதில் முதலிடத்தில் இருக்கிறது. ரீல்ஸ் பயனீட்டாளர்களை அதிகம் ஈர்த்தாலும் இன்ஸ்டாகிராமின் மற்ற பொருள்களைப் போல அதிக பணத்தை ஈட்டுவதில்லை. காரணம் விடியோ காட்சிகளுடன் விளம்பரங்கள் வந்தால், அதை ஒதுக்குவதே பெரும்பாலானவர்களின் இயல்பு. எனவே ரீல்ஸை அதிகம் பயன்படுத்துமாறு செய்தால் வருமானம்தான் குறையும்.

> “ முகப்புத்தகம் - மூன்றாவது காலாண்டிலிருந்ததைவிட நாலாவது காலாண்டில் 5 லட்சம் வாடிக்கையாளர்களை இழந்திருக்கிறது. அந்த நிறுவனம் தொடங்கப்பட்ட 18 ஆண்டுக் கால வரலாற்றில் இப்படி வீழ்ச்சி அடைவது இப்போதுதான் ”

**மெட்டாவெர்ஸுக்கு வீண் செலவு**

சமூகவலைதளங்களின் அடுத்த தலைமுறை 'மெட்டா' என்று ஜுகர்பர்க் நிச்சயம் நம்புகிறார். அதற்காக மேலும் பல கோடிகளைச் செலவிடவும் தயாராக இருக்கிறார். கடந்த ஆண்டு மட்டும் 1,000 கோடி டொலர்களுக்கும் மேல் செலவிட்டார். இன்னும் அதிகமாகக் கூட செலவு செய்ய விரும்புகிறார். எவ்வளவு செலவு செய்தாலும் அவர் நினைக்கும் அளவுக்கு வருமானம் வருமா என்று தெரியவில்லை.

**ஏகபோகத்துக்கு எதிர்**

ஜுகர்பர்க்கின் நிறுவனத்துக்கு எதிராக அமெரிக்க அரசு, ஏகபோக வர்த்தக தடை நடைமுறைச் சட்டப்படி கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கினால் பிரச்சினைகள் மேலும் அதிகரிக்கும். மெட்டா நிறுவனத்தின் செயல்பாடுகளை அரசு வெவ்வேறு துறைகள் மூலம் விசாரிக்கின்றது. பிற நிறுவனங்களால் போட்டியிட முடியாதபடிக்கு அது செயல்பட்டதா என்பது இந்த விசாரணைகளின் நோக் கம்.

போட்டிகளே இல்லாத ஏகபோக நிறுவனமாக மெட்டா இல்லை, சமூகவலைதளங்களில் அதற்குப் போட்டியாக டிக்டாக், ஆப்பிள், கூகுகள், ஃப்யூச்சர் ஆகியவை இருப்பதை ஜுகர்பர்க் சுட்டிக்காட்டுகிறார். ஆனால் அரசு எடுக்கக் கூடிய ஏகபோக நிறுவன நடைமுறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளால் 'மெட்டா' நிறுவனத்துக்கு இடையூறுகள் ஏற்படுவது நிச்சயம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எலனாரின் இல்லம்

வில்லா கேதர்

தமிழில்: இல. சுபத்ரா

'அடுத்ததாக நீங்கள் ஃபார்ச்சூனிற்குச் செல்கிறீர்களா?' எனத் தொடங்கினாள் ஹாரியட். பதிலாக, தோட்டத்தின் ஒரு மூலையில் நீரூற்றின் அடிக்கிண்ணத்தில் இருந்த கசிவினை ஆய்ந்துகொண்டிருந்த ராபர்ட் வெஸ்ட்ஃபீல்டையும் ஹரால்டையும் நோக்கி அதிர்ச்சியான ஒரு பார்வையை வீசினாள் அப்பெண். அவ்வளவு நேரடியாக அப்படிக் கேட்டது குறித்து வருந்தினாள் ஹாரியட். ஏதெல் அதற்குப் பதில் கூறியபோது அது வார்த்தையாக அன்றி வெறும் காற்றாகவே வெளிப்பட்டது.

'நாங்கள் பிறகு போய்க்கொள்ளலாம் என நினைக்கிறேன். அங்கே அவனுக்கு மிகச் சிரமமாய் இருக்கும், உங்களுக்குத் தெரியும்தானே? அங்கே அவன் சென்று நெடுநாட்களாயிற்று.' அதன்பிறகு அவள் மீண்டும் அமைதியாகிவிட்டாள்- நிஜம்தான், அவள் அங்கிருந்து இவ்வளவு தொலைவு வந்ததே இல்லை - வெஸ்ட்ஃபீல்டை அழைத்தாள் ஹாரியட். ஏதெல் தனது திறமையின்மையைக் கையாள முடியாமல் தோற்பது குறித்து, தவிர்க்க முடியாமல் தனக்குள் கசப்பு எழுவதை ஹாரியட்டால் உணர முடிந்தது.

'வாருங்கள் ராபர்ட். பயணத்தினால் ஹரால்ட் களைத்திருப்பான். மட்டுமின்றி, அவனும் ஏதெலும் பேசிக்கொள்ள நிறைய இருக்கும்.'

உடனே ஹரால்டும் அவனது மனைவியும் அதை மறுப்பது போல அவசர அவசரமாக எதையோ கூறத் தொடங்கினர்.

'நமது தோட்டங்களை ஒரே ஒரு சுவர் பிரிக்கிற இவ்வளவு அருகாமையில், உங்களுடன் இங்கே ஆர்க்-கில் இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது' என்றாள் ஏதெல் உடனடியாக. 'ஹரால்டிற்கு அது மிக உதவியாய் இருக்கும். உங்களுக்கும் அவனுக்கும் இடையே நிறைய பழைய தொடர்புகள் இருக்கின்றனவே திருமதி. வெஸ்ட்ஃபீல்ட்.'

இரண்டு ஆண்களும் தேநீர் மேசைக்குத் திரும்பியிருக்க, தன் மனைவியின் வார்த்தைகளைச் செவியுற்ற இளையவனின் அழகிய பழுப்பு முகம் அதிருப்தியை வெளிப்படுத்தும்படி வெறுமையை உடுத்திக்கொண்டது.

ஏதெல் அவனைக் கீழ்ப்பார்வை பார்த்தாள், என்றாலும் தான் சொன்ன வார்த்தைகள் எவ்வளவு துரதிர்ஷ்டமானவை என்பதை அவள் உணர்ந்தாளா என்பதை ஹாரியட்டால் கண்டறிய முடியவில்லை. சரியாக அணிந்துகொள்ளாத பெரிய தொப்பிக்குள்ளும் சோபையான வெள்ளை கவுனிற்குள்ளும் தொய்வாக இருந்தவள், தான் ஒன்றும் அவ்வளவு கடுமையானவளில்லை என்பது போல் தோன்றியது நிச்சயம். எனினும் ஏதோ ஒரு வகை நோய்மை அவளது இலக்கற்ற தன்மையினை ஊடுருவத்தான் செய்தது. குளிர்மையான நீரோட்டத்தினால் மர்மமாகத் தாக்கப்பட்டுவிட்டது போல, தனது கழுத்துக்குட்டையைத் தோள்களைச் சுற்றிப் போர்த்தியபடி தேநீர் மேசைக்குப் பின்புறம் சுருங்கிக்கொண்ட அவளைப் பார்த்தபோது அப்படித்தான் தோன்றியது.

விடைபெறும் பொருட்டு வெஸ்ட்ஃபீல்ட் தம்பதியினர் எழுந்து இணைந்துகொண்டனர். விருந்தினர்களுடன் வாயிலை நோக்கி நடக்கும் வழியில் மனைவியின் அருகில் நகர்ந்துகொண்ட ஹரால்ட் அவளது தோளில் தன் கரங்களை மெலிதாக இட்டுக்கொண்டதும், தனது இருண்மையிலிருந்து மெல்ல வெளியேறி புன்னகைத்தாள் அவள்.

வாயிலில் நின்றுகொண்டிருந்த அவர்கள் இருவரையும் ஹாரியட்டால் திரும்பிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. தன் குடைக்குள்ளிருந்து நிமிர்ந்து அவள் அவர்களை நோக்கியபோது, இறுக்கமான பழுப்பு முகத்துடனும் எங்கோ ஆழ்ந்த புன்னகையுடனும் அவன் காட்சியளிக்க, தன் மென்மைக்குள்ளும் அலைக்கழிப்பிற்குள்ளும் மிதந்தபடி கவிழ்ந்திருந்தாள் அப்பெண்.

தங்களது சொந்தத் தோட்டத்தின் வெயில்கூசும் சதுக்கத்தினை அடைந்தவுடன், சாந்திடப்பட்ட சுவரின் கரிய நிழலில் கிடத்தப்பட்டிருந்த பிரம்பு நாற்காலிக்குள் தன்னை அமிழ்த்திக்கொண்ட ஹாரியட் தன் கணவனிடம் உறுதியாகக் கூறினாள்-

'இங்கே வர வேண்டுமென அவன் ஏன் அவ்வளவு விரும்பினான் என்பது இப்போது எனக்குப் புரிந்துவிட்டது அன்பே. நேற்று அவளை முதன்முதலில் சந்தித்தபோதே என்னால் அதை உணர முடிந்தது. இப்போது அவர்கள் இருவரையும் ஒன்றாகப் பார்த்த பிறகு எல்லாமே தெளிவாகிவிட்டது. அவளை ஃபார்ச்சூனிலிருந்து தூர வைக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவளை அவன் இங்கே அழைத்து வந்திருக்கிறான். அதில் நாம் அவனுக்கு உதவ வேண்டும் எனவும் எதிர்நோக்குகிறான்.'

தனது ரோஜா மரங்களைக் கவனமாக ஆராய்ந்துகொண்டிருந்த வெஸ்ட்ஃபீல்ட், தன் மனைவியை ஆர்வமுடனும் வெளிப்படையான ஆச்சரியத்துடனும் நோக்கினார். அப்பார்வையில் வெளிப்படுகிற கேள்வியின் தொனியை அவள் மிக நன்றாக அறிவாள்.

'அவனது துக்கத்தையும்விட வெளிப்படையான ஒரு விஷயம் இருக்குமென்றால், அது அவள் ஃபார்ச்சூனிற்குச் செல்ல முடிவெடுத்துவிட்டாள் என்பதுதான்' எனத் தொடர்ந்தாள் ஹாரியட்.

'அவர்களுக்குத் திருமணம் ஆகி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அதற்குமேல் அவனால் அவளைச் சானலில் தொடர்ந்து வைத்திருக்க முடியவில்லை என நினைக்கிறேன். எனவே நம்மைச் சாக்காக வைத்து அவளை இங்கே திசைதிருப்பியிருக்கிறான்.'

செடிகளைக் கத்தரிப்பதிலிருந்து நிமிர்ந்த வெஸ்ட்ஃபீல்ட், 'நிச்சயமாக,' என ஒப்புக்கொண்டார். 'அவர்கள் இருவருக்கிடையே ஏதோ பிரச்சினை இருக்கிறதென்பதை யாராலும் உணர்ந்துகொள்ள முடியும். ஆனால், வேறு நூறு காரணங்கள் இருக்கலாமெனும் போது, அது ஏன் ஃபார்ச்சூன் சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்க வேண்டும்! வெவ்வேறு நோக்கங்களின் பொருட்டு மாறுபட்டு நிற்க மனிதர்களுக்கு ஏராளம் வாய்ப்புகள் இருக்கின்றனவே!'

'ஹ்ம்! ஆனால் ஃபார்ச்சூன்...' என்று பெருமூச்சிட்ட அவரது மனைவி, 'அவனது ஒட்டுமொத்தக் கடந்தகாலத்தின் ஒற்றைப் பிரதிநிதி ஃபார்ச்சூன்தான். அது எலனாரேதான். பாவம் இவளை அவன் அங்கே எப்படி அழைத்துச் செல்வான் ராபர்ட்? அது ரொம்பவும் கொடூரமாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு மேன்மையான இடத்தில் இவள் பரிதாபமாய்த் தோற்றமளிப்பாள்!' 'இவளை அவனால் திருமணம் செய்ய முடிந்திருக்கிறதென்றால், அவனால் அவளை ஃபார்ச்சூனிற்கு அழைத்துச் செல்லவும் முடிய வேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.' தொடர்ந்து பதிலளித்தார் ராபர்ட் வெஸ்ட்ஃபீல்ட்.

'ஓ, அவன் அவளைத் திருமணம் செய்தது! அதற்கு எங்களைத்தான் - அவனதும் எலனாரதும் பழைய நண்பர்களாகிய எங்களைத்தான் - பழிகூற வேண்டும். நாங்கள் அவனை ஏமாற்றிவிட்டோம். அவனது இழப்பின் எல்லையைத் தாங்க முடியாமல் நாங்கள் அவனுக்கு எதிராக நடந்துகொண்டு விட்டோம். ஒரு இடிபாடின் அடியிலிருந்து இழுத்து வரப்பட்ட மனிதனின் வெறும் ஒரு துண்டாகவே காட்சியளித்தான் அவன். எலனார் இறந்தபிறகு அவனிடம் எதுவுமே முழுமையானதாக இல்லை என்னும் விதமாக! அவர்கள் இருவரும் இணைந்தே வளர்ந்திருந்தனர். நாங்கள் அவன் குறித்து அஞ்சினோம், அவனை இந்தியாவிற்கு அனுப்புவது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம். அவன் அங்கே இன்னொரு திருமணம் செய்துகொள்வான் என்றும்கூட நம்பினேன் நான். அவன் ஏதெலைத் திருமணம் செய்துகொண்ட சேதி வந்தவுடன் அத்தோடு அவன் இது எல்லாவற்றையும் முடித்துக்கொள்வான் என எண்ணினேன். அவனும் எல்லோரையும் போல வழக்கமான ஒரு அத்தியாயமாகிவிடுவான் என எண்ணினேன். ஆனால் பாருங்கள், அவன் அப்படி ஆகவில்லை; அவன் முன்னிலும் அதிகமாகத் தனித்துவிடப்பட்டான். அவளில்லாமல் அவனால் எதையுமே சிறப்பாகச் செய்யமுடியவில்லை. பாருங்கள், அவனால் இதைக்கூடச் செய்ய முடியவில்லை.'

'இதைக்கூட?' தனது தோட்டவேலையை அப்படியே நிறுத்திவிட்டு வினவினார் வெஸ்ட்ஃபீல்ட். 'அவனுக்கு இன்னொரு மனைவியைத் தேர்ந்தெடுக்க எலனார் உதவியிருப்பாள் என்று நீ சொல்லுவதாக நான் புரிந்துகொள்ள வேண்டுமா?'

அவரது குரலில் வெளிப்பட்ட தீவிரத்தை அலட்சியப்படுத்தியபடி, 'இப்போது அவன் சிக்கியிருக்கிற இப்படி ஒரு நிலையிலிருந்து எலனார் அவனை நிச்சயம் காத்திருப்பாள். இப்படித் தன் ஒவ்வொரு செயலாலும் அவனைக் காயப்படுத்துகிறவளல்லாத ஒரு பெண்ணை அவள் அவனுக்குக் கண்டறிந்திருப்பாள். ஏதெல் கொஞ்சமும் உறுதியற்ற பெண்! திறனற்ற, அச்சம் நிறைந்த பெண். அவளது நடை கூட நம்மை எரிச்சலூட்டுவதாக இருக்கிறதை நீங்கள் கவனித்தீர்களா? சாதாரண டீ மேஜைக்கு நடக்கும்போதுகூட ஏதோ வலியை மிதிப்பது போலவும், மன்னித்தும் பொறுத்தும் தாங்கிக்கொள்வதும் போன்ற ஒரு நடை. தன்னுடைய ஒழுங்கற்ற தோற்றம் பற்றிய சிந்தையால் இவ்வளவு ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிற ஒருவரை நான் கண்டதேயில்லை. அச்சிந்தை ஒரு துயர்மிகு வேட்கையைப் போல அவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்கி விழுங்கிவிடுகிறது. அவன் எப்படி உணர்கிறான் என்பதை நான் அறிவேன். தனக்குப் பிடித்தவற்றை அவள் நேசிக்கிற விதத்தை அவன் வெறுக்கிறான், தனக்குப் பிடிக்காதவற்றை அவள் வெறுக்கிற விதத்தையும் அவன் வெறுக்கிறான். நான் சொல்வதைக் குறித்துக்கொள்ளுங்கள், அவள் ஃபார்ச்சூனை இலக்காக்கியிருக்கிறாள். குறைந்த பட்சம் அதையேனும் அவன் அனுமதிக்க மாட்டான். ஃபார்ச்சூனில் எலனார் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். அந்த இடம் மிக ஆழமாகவும் பொக்கிஷமாகவும் அவனது அந்தரங்கத்தில் இருக்கக்கூடியது. அந்தப் பெண் அதனைத் திட்டமிட்டுவிட்டாள், அதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டுவிட்டாள். அது ஒரு அடையாளமாக இருக்கிறது, இவள் மனம் அதையே எண்ணிக் கொண்டுள்ளது. அதிலிருந்து விலக்கி வைக்கப்படுவதை அவளால் தாங்க முடியாது. நேற்று நான் அவளைக் காணச் சென்றபோது, சற்றும் தாமதியாமல் தன் கணவனைப் பற்றி என்னிடம் விளக்கத் தொடங்கிவிட்டாள். அவள் எதையும் கண்டுகொள்ளாமல் இருக்கிறாள் என நான் எண்ணிவிடக் கூடாதென்கிற அச்சம் கொண்டவள் போல் தோன்றினாள் அவள்.'

தன் மனைவி மேலும் மேலும் கடுமையாகிக் கொண்டே செல்லச்செல்ல, தனது தோட்டத்து நாற்காலியில் சாய்ந்தபடி பிற்பகல் உறக்கத்தின் அரவணைப்பிற்குள் பாதி சரண் புகுந்திருந்தார் வெஸ்ட்ஃபீல்ட்.

கொட்டாவியைக் கவனமாகத் தணித்தபடி, 'தான் மீளமுடியாத எதற்குள்ளோ சிக்கிவிட்டோம் என்கிற துயர்மிகு சிந்தையைப் போக்கவே பாவம் அக்குழந்தை போராடுகிறாள் என்றே எனக்குத் தோன்றுகிறது. தனது நிச்சயமின்மையை நாகரீகமாக மறைக்க முயல்கிறாளாய் இருக்கும்.'

சிகமார் இலைகளின் நிழல் விளையாடும் அவரது முகத்தை ஒரு நொடி உற்று நோக்கிய ஹாரியட் கருணையுடன் புன்னகைத்தாள். 'அவள் நாகரீகமாக எதையோ மறைக்க முயல்கிறாள் என்னும் கருத்தே வேடிக்கையாக இருக்கிறது. என்றால் உங்களுக்கு அவளை அவ்வளவுதான் தெரிந்திருக்கிறது!' என்றபடி பெருமூச்சுவிட்டாள். 'ஹரால்டை ஏமாற்றியது போலவே அவள் உங்களையும் ஏமாற்றி இருக்கிறாள். அவள் எதிலும் தலையிடமாட்டாள் என்றுதான் அவன் நம்பியிருக்கிறான்; இவனது வருகைகளையும் வெளியேறல்களையும் நிலவொளி ததும்பும் புன்னகையுடன் அனுமதித்தபடி அவனது கருணையை சுவாசித்தபடி தன்னைப் பார்த்துக்கொள்வாள் என அவன் நம்பியிருக்கிறான். ஆனால் அவளது அத்தனை அமைதியையும், விட்டுக்கொடுக்கும் கவித்துவத் தொனியையும் தாண்டி, அவளிடம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும், முன்னிறுத்திக்கொள்ளும் ஆர்வம் இருக்கத்தான் செய்கிறது. அந்தக் கொடூரத்தைத் தான் அவனால் பொறுத்துக்கொள்ள முடியாமல் போயிருக்கிறது. இவளைப் போன்றவர்களை நான் முன்னரே பார்த்திருக்கிறேன். அவர்களது தன் முனைப்பை வாழ்வின் ஒவ்வொரு நாளும் நீங்கள் கத்தரிக்க முயன்றாலும் அடுத்த தினமே அவை புதிதாகவும் இன்னும் ஆர்வத்துடனும் மீண்டும் வெளிப்படுவதை உங்களால் உணர முடியும். பளிங்கிலிருக்கும் சிறிய கீறல்தான் அவள் கண்களில்படும். அவள் என்ன விரும்புகிறாள் என உங்களுக்குத் தெரிகிறதா?' பளிச்சிடும் கண்களுடன் நிமிர்ந்து அமர்ந்த திருமதி. வெஸ்ட்ஃபீல்ட், 'அவனது மனதில் எலனார் பெற்றிருந்த இடத்தை அவள் அடைய விரும்புகிறாள்; அவளால் அது முடியாது என்பதை அவள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறாள்.'

காதுகளுக்கு மேலிருக்கும் விறைத்த பொன்னிற மயிர்களை குழப்பத்துடன் வருடியபடியே, 'ஆனால், அவள் ஏன் அப்படி ஆக முடியாது என எனக்குப் புரியவில்லை? அவன் அவளை மணமுடித்திருக்கிறான். அதைவிடக் குறைவான ஒரு இடத்தை அவள் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்?'

'ஐயோ, ராபர்ட்!' அவன் ஏதோ அசிங்கமான ஒன்றைக் கூறிவிட்டது போல இடைமறித்தாள் ஹாரியட். 'உங்களுக்கு அவர்களைப் பற்றி எதுவும் தெரியாது. எலனார்தான் அவனை உருவாக்கினாள். அவளது படைப்பு அவன். மிக மோசமாகியிருக்க வேண்டிய நிலையிலிருந்து அவள்தான் அவனைக் காத்தாள்.'

கேலியாகச் சிரித்தார் வெஸ்ட்ஃபீல்ட்.

'என்றால், தன்னியல்பில் - அடிப்படையில் - அவன் அவ்வளவு மோசமாய் இருந்தானா?'

'இருக்கலாம், ஆனால் அப்போதும்கூட இப்போதிருப்பதைவிட அவன் நன்றாகத்தான் இருந்தான். ஏனோ அவன் இயல்பான குணநலன்களைக் கொண்டிருக்கவில்லை. இவ்வுலகில் பிறந்த எல்லோரிலும் அதிக முதிர்ச்சியற்றவனாக அவன் இருந்தான். இளமையே அவனை ஒரு நோய் போல் தாக்கியது. கிட்டத்தட்ட அது அவனைக் கொன்றிருந்தது. சுயவிழிப்பு குறித்த சிந்தையில் அதீதமாய் ஆழ்ந்திருந்த அவன், அதற்குத் தேவைக்கு அதிகமான முக்கியத்துவம் அளித்திருந்தான். அதைப் பற்றியே பேசியும் காண்பவர்களிடமெல்லாம் அதைத் திணித்தும் கொண்டிருந்தான் - கிறிஸ்துமஸ் மரத்தின் கீழ் நின்றபடி பரிசுப்பொதிகளைப் பிரித்து உற்சாகக் குரலெழுப்பும் மனநிலையிலிருந்து என்றேனும் அவன் வளர்வானா என்றுகூட நான் சந்தேகித்திருக்கிறேன். தான் அனுபவிக்கிற எதுவும் தான் மட்டுமே உணர்கிற தனித்துவமானவை அல்ல என்பதை அவன் அறிந்திருக்கவில்லை, ஆனால் அதை அவன் உணர்கிற விதம் அவனுக்கு மட்டுமே உரியது என அவன் நம்பினான் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.'

'எலனாரைச் சந்தித்தபோது அவன் தன்னை முற்றிலும் அவளிடம் தொலைத்துவிட்டான், அதுதான் அவனுக்குத் தேவையாகவும் இருந்தது. அவள் இயல்பிலேயே நிதானத்தையும் உறுதியையும் கொண்டவளாய் இருந்தாள். விவேகத்துடன் அவள் நடந்துகொள்ளாத சூழல் என்ற ஒன்றே இருந்ததில்லை. அவளால் எல்லா மனிதர்களிடமிருந்தும் பொருள்களிலிருந்தும் மகிழ்ச்சியைப் பெற முடிந்தது. ஆனால் ஒருபோதும் அவள் அவற்றால் ஏமாற்றமடைந்ததில்லை. அந்தப் பகுத்தறிதலை அவள் கைக்கொண்டது அறிவினால் அல்ல, அது முழுவதும் தூய உணர்வுகளின் சாயலையே கொண்டது என்பதுதான் அதன் அழகும் தனித்துவமும்.'

'அடுத்து என்ன நடந்ததென்பதை உங்களாலேயே கணிக்க முடிந்திருக்கும். அவனிடமிருந்த அத்தனையையும் மதிப்பிற்குரியதாகவும் உபயோகமானதாகவும் ஆக்கக்கூடிய ஒன்றை அவள் அவனுக்குத் தந்தாள். நாங்கள் எல்லோரும் நினைத்ததைவிட நுணுக்கமான இழை அவனிடம் இருந்திருக்கிறது, அதை அவள் கண்டுகொண்டாள். திறன்களைக் கண்டறிவதில் அவள் எப்போதுமே தவறியதில்லை.'

'அவர்களுக்குத் திருமணம் ஆன இரண்டு வருடங்களுக்குப் பிறகு நான் ஆறு வாரங்கள் ஃபார்ச்சூனில் அவர்களுடன் தங்கியிருந்தேன். அப்போதும்கூட, அவர்களுக்கிடையே இருந்த சாத்தியங்களையும் அவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு தந்துகொள்ள முடிந்ததென்பதையும் என்னால் கண்டுணர முடிந்தது. தொடர்ந்து அவர்கள் அப்படியேதான் இருந்தனர். அவர்களுக்கு எல்லாமே இருந்தது - குழந்தைகளைத் தவிர. அவர்கள் சுயநலம் மிக்கவர்களாய் இருந்தார்கள் என நான் நினைக்கிறேன். ஒருமுறை எலனார் என்னிடம் சொன்னது போல, அவர்கள் ஒருவர் மற்றவரையும் நித்திய வாழ்வையும் மட்டுமே விரும்பினர். அதை விவரிக்கவெல்லாம் எனக்குத் தெரியவில்லை, ஆனால் அது மிகக் கம்பீரமானதாகவும் உறுதியானதாகவும் இருந்தது.'

## 02

படர்ந்துகிடக்கும் நிலப்புரபுத்துவ எச்சங்களைச் சுமந்தபடி ஆர்க்- லா- பத்தாய்க்குப் (ARQUES-LA-BATAILLE) பின்புறம் உயர்ந்திருக்கும் பசுமையான மலைகளில் ஹாரியட் ஒரு நாள் நடந்து கொண்டிருந்தாள். அதிகாலைச் சூரியனின் மாயப் பொன்னொளி இன்னமும் பரவியிருக்க, பழைய கோட்டைகளின் விளிம்புகளைச் சுட்டியபடி மடிந்திருக்கும் வழுவழுப்பான புல் மடிப்புகளிலும் பிளவுகளிலும் பனித்துளிகள் மின்னின. திறந்து விரிந்த பசுமையான எல்லைகளையும், சிறிய நதியின் பளபளக்கும் வளைவுகளையும், மின்னும் வெண்பிர்ச் மரத் தோப்புகளினூடாகக் காணும்போது, அழகிய வண்ணங்கால் தீட்டிய சித்திரமென கீழே கிடந்தது நார்மன் தேசம்.

தோள்களின் மேல் சிறுகுடையும் வெண் காலணி முழுக்கப் பனியின் சாம்பல் நிறமுமாய், அகழியின் உள்விளிம்பில் அமைந்திருந்த கோபுரமொன்றின் அடித்தளத்தை அவள் சுற்றி வந்தபோது, கோபுரத்தின் சுவர்மடிப்பின் கீழ் நிழல் மூலையில், உலர்புல் தொப்பியைக் கண்களின் மேல் சரித்தபடி கிடந்த ஓர் ஆணின் மேல் கால் வைத்துவிட்டாள்.

'அட! என்னாயிற்று ஹரால்ட் ஃபோர்ஸைத்?' அதிர்ச்சியுடன் வினவினாள் ஹாரியட்.

அவன் எழுந்துகொண்டதும் முகத்தில் சூரிய ஒளி படிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தயவுசெய்து உட்காருங்கள்,' என்றான். 'அங்கே உலர்வாக இருக்கிறது, காட்சியும் அற்புதமாக இருக்கிறது.'

'நான் வந்தபோது நீ காட்சிகளை இரசித்தது போல் தெரியவில்லையே.' குடையைக் கழற்றிவிட்டு, அவனது அக்கறையற்ற காலை ஆடையையும், கனத்த விழிகளையும், மழிக்கப்படாத, சோகம் ததும்பும் முகத்தினையும் பார்த்தபடி வினவினாள் ஹாரியட். 'என்றாலும் நான் அமர்கிறேன்'. அன்புடன் அவனிடம் உறுதிகூறியவள், 'உன்னை அரிதாகத்தான் பார்க்க முடிகிறது. ஏன் நீ என்னைப் பார்க்க வரவே இல்லை? அதன் பொருட்டுதான் இப்போது அமர்கிறேன்' என்றாள்.

தயக்கத்துடன், அவளது காலணியையே கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்த ஹரால்ட் ஃபோர்ஸைத்தின் கீழுதடு சற்றே பி[illegible]ங்கியபடியிருந்தது. அவனையறியாமல் வெளிப்பட்டுவிடுகிற இப்பழக்கத்தை அவனது சிறுவயதில் [illegible]வள் இரசித்திருக்கிறாள்.

'ஒருவேளை, ஒருவேளை.. எனக்கு அதற்கான தைரியம் இல்லாமல் இருந்திருக்கலாம்,' எனப் பதிலளித்தான்.

'என்றால், எதோ ஒரு வகையில், சகிக்க முடியாத முட்டாள்தனம் உடையவள் என நீ என்னைக் கருதியிருக்கிறாய்?' கடிந்துகொண்டாள் ஹாரியட்.

'உங்களையா? ச்சே, இல்லை! நான் அப்படிச் செய்யவில்லை, செய்யவும் மாட்டேன். உங்களால் எப்படி அப்படி நினைக்க முடிகிறது?' ஒரு நீலப் பாறையின் சரிவில் அவள் அமர உதவியபடி இணக்கமான உடல்மொழியை வெளிப்படுத்தினாலும்,



அவளது கண்களைப் பார்ப்பதைத் தவிர்த்தான் அவன்.

'பிறகு ஏன் நீ தயக்கத்துடன் அங்கேயே நிற்கிறாய்?'

'நான் இங்கிருந்து கிளம்பிவிடுவதுதான் உங்களுக்கு நல்லதென யோசித்துக்கொண்டிருக்கிறேன்,' சிறிய முகச்சுழிப்புடன் அவளை ஒரு நொடி பார்த்தவன், 'அதிகாலைகளில் சில சமயங்களில் நான் மிகவும் மோசமான மனநிலையை வெளிப்படுத்துகிறவனாகி விடுகிறேன்.'

புல்தரையைத் தனது குச்சியால் குத்தியபடி நின்றவனை மிகுந்த அன்புடன் நோக்கினாள் திருமதி வெஸ்ட்ஃபீல்ட். இருபது வயதில் இருந்ததைவிடக் கொஞ்சமும் முதிர்ச்சியடையாமல் இவன் எப்படி முப்பத்தியெட்டு வயதை எட்டினான் என வியந்தாள். என்றாலும், அவர்களது மகிழ்ச்சி அவர்களுக்கு அளித்திருக்கும் பரிசு அதுதான். அது அவர்களை இளமையாக வைத்திருந்ததெனில், பெருமையும் பிரகாசமுமிக்க இளமையை அளித்திருந்ததெனில், அதேதான் வேறு எந்த இடத்திற்கும் நகர்வதிலிருந்து அவர்களைத் தடுத்திருந்தது. அவனது மலரும் காலத்தினை நீட்டித்த அது, அவனைக் கனியச் செய்யத் தவறிவிட்டது. வயது முதிர்வதை அனுமதிக்கும்போது நிறைய விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால் அவன் அவ்விதம் எதையும் இழக்கவில்லை, வயதாவதைப் பற்றிக் கற்றுக்கொள்ளக்கூட இல்லை, இன்னமும் ஒரு சிறுவனைப் போலவே திருப்பித் தாக்குகிறான்.

தனக்கு அருகில் இருக்கும் புல்தரையை ஹாரியட் சுட்டியவுடன் அவன் சட்டென அங்கே அமர்ந்துகொண்டான்.

'நிஜத்தில் இன்று காலையில் யாரையும் பார்ப்பதற்கு நான் தகுதியானவனாக இல்லை. இந்த முதல் சில மணிநேரங்கள்...' தோள்களைக் குலுக்கிக்கொண்டவன் அருகிலிருந்த புற்களை வேகமாக ஒவ்வொன்றாகப் பிடுங்கத் தொடங்கினான்.

'உனக்கு மிகச் சிரமமானவையாய் இருக்கின்றனவா?'

அவன் தலையசைத்தான்.

'ஏனென்றால் அவைதான் உனது மகிழ்ச்சிமிக்க தருணங்களாய் இருந்தன. இல்லையா?' உரையாடலின் நுனியைப் பற்றியபடி தொடர்ந்தாள் ஹாரியட்.

'இது விநோதம்தான்,' அமைதியாகப் பதிலளித்தான், 'ஆனால், அதிகாலைகளில் ஏனோ அவளை நான் நிச்சயம் கண்டறியப் போகிறேன் எனத் தோன்றுகிறது. ஒரு நாளின் இந்தச் சமயத்தில் நமக்கு அதீத ஆற்றல் இருக்கிறதென நினைக்கிறேன், சுற்றியிருப்பவற்றை ஆழமாக உணர முடிகிறது அப்போது.'

'என் அன்புச் சிறுவனே! உனக்கு இது இன்னும் இத்தனை கடினமாக இருக்கிறதா?'

'இது எனக்கு எப்போதேனும் சுலபமாகக்கூடும் என நீங்கள் ஒரு நொடி நினைத்தீர்களா என்ன?' ஒரு சிறிய புன்னகையுடன் வினவினான் அவன்.

'நான் அப்படி நம்பினேன். ஆமாம், அப்படி நம்பினேன்.'

ஃபோர்ஸைத் தலையசைத்தான். 'நான் ஏன் உங்களைப் பார்க்க வரவில்லை என்பது உங்களுக்கே தெரிந்திருக்கும்.' சட்டென விஷயத்திற்கு வந்தான் அவன்.

ஹாரியட் அவனது கரங்களைத் தொட்டாள். 'நீ என்னிடம் அச்சம்கொள்ள வேண்டாம். நீ அவளை நேசித்த அளவிற்கு நான் அவளை நேசித்தேனா தெரியவில்லை, ஆனால் அவளை நேசித்த அளவிற்கு நான் வேறெதையும் நேசித்ததில்லை.'

'எனக்குத் தெரியும். நான் இங்கே வந்ததற்கு அதுவும் ஒரு காரணம். நான் அவளுக்கு அறிமுகம் ஆன காலத்தில் நீங்கள் எப்போதும் அவளுடன்தான் இருந்தீர்கள், உங்களுடன் இருக்கும்போது அவளைப் பார்ப்பது சுலபமாக இருந்தது. சில சமயங்களில் அவளது உருவம் - படிகளில் இறங்கி வருகிற, தோட்டத்தைக் கடக்கிற, கைகளை நீட்டுகிற உருவம்- மங்கலாவது போல எனக்குத் தோன்றுகிறது, அது என்னை அச்சுறுத்துகிறது. சில இடங்களும் சில மனிதர்களும் எனக்கு அவளுடைய உணர்வைத் தருகின்றன.' ஒரு திடுக்கிடலுடன் நிறுத்திய அவன், ஒரு கூழாங்கல்லை எடுத்து, அகழிக்கு மறுபுறம் குவளைப்பூக்களால் மஞ்சள் நிறம் பெற்று மெதுவாய்க் கடக்கும் நூற்றாண்டுகளால் மென்மையாகவும் ஆழமற்றும் ஆக்கப்பட்ட சரிவான கரைக்கு எறிந்தான்.

'ஆனால் ஹரால்ட், வேறெந்த இடத்தையும்விட அவள் உனக்குள்தான் அதிகமாக இருப்பாள். அங்கிருக்க வேண்டுமென்றுதான் அவள் விரும்பினாள், அதைத்தான் அவள் சுவாசித்தாள், பல ஆண்டுகளாய் அதைத்தான் அவள் மனதில் சுமந்தாள்.'

தன் கரங்களுக்குக் கீழிருந்த வெற்றிடத்தைக் கூர்ந்து வெறித்த அவன், புற்களை மென்மையாகப் பறிக்கத் தொடங்கினான். அவன் பேசியபோது ஒலித்த உடைந்த குரல் அவளை திடுக்கிடச் செய்தது.

'முன்பு அது அப்படித்தான் இருந்தது, ஆனால் இப்போது நான் அதை இழந்து விடுகிறேன் - சில சமயங்களில் வாரக்கணக்கில்கூட. ஒரு மென்மையான வாசனையை நாசியில் இருத்திக்கொள்ள முயலும்போது அதைவிட நெடியான ஒரு வாசனை தோன்றி முன்னதை மங்கச் செய்துவிடுவது போன்றது அது.'

'என் அன்பிற்குரிய சிறுவனே, நான் இதற்கு என்ன சொல்வது?' அவளது கண்கள் மிகவும் மங்கலாகிவிட்டதால், அவன் அங்கிருக்கிறான் என்பதை உறுதிசெய்ய அவள் தன் கரங்களை நீட்டினாள். அதை அழுத்திய அவன் ஒரு நொடி அதைப் பற்றிக்கொண்டான்.

-நீங்கள் எதுவும் சொல்லத் தேவையில்லை. என்னால் நீங்கள் நினைப்பதை உணர முடிகிறது. நாம் எப்படி எல்லாவற்றையும் பழகிவிடுகிறோம் என்பதும் நம்மால் அது குறித்துச் செய்ய ஒன்றுமில்லை என்பதும் பிரம்மாண்டமாகத் தெரிகிறது. என்னுடனேயே இருப்பதாக அவள் மட்டும் உறுதியளித்திருந்தால் - ஒரு அடையாளத்தை விட்டுச் சென்றிருந்தால், புல்லிலோ விசும்பிலோ ஒரு நிழலை விட்டுச்சென்றிருந்தால் - அதுவே போதுமானதாக இருந்திருக்கும். என்னை என் காயங்களுடன் தனியே விடுங்கள் என்பதைத் தவிர இப்போது நான் வேண்டுவது எதுவுமில்லை. இவ்வளவுதான் என்னிடம் எஞ்சியிருக்கிறது. அதுதான் இவ்வுலகில் விலைமதிக்க முடியாத விஷயம்.'

'ஆனால் என் இனிய ஹரால்ட், இது மிகவும் கொடுமையாக இருக்கிறது! நீ இப்படிச் செய்வதை அவளால் தாங்கியிருக்க முடியாது.' உந்தப்பட்டு முனகினாள் ஹாரியட்.

'ஆமாம், அவளால் முடிந்திருக்கும். அவளால் அதைச் செய்ய முடிந்திருக்கும். அவளது வேதனையிலும் நிறைவின்மையிலும் அவளால் என்னை உயிர்ப்பித்திருக்க முடிந்திருக்கும்.'

போதும் என உணர்த்தும் விதமாக அவனை நோக்கிக் கைகளை நீட்டினாள் திருமதி. வெஸ்ட்ஃபீல்ட். அவளைக் காதலித்த காலங்களில், கட்டற்ற மகிழ்ச்சியில் திளைத்த காலங்களில், அவளோடு இங்கே புல்வெளியில் பலமுறை படுத்திருந்திருக்கிறான். அவன் இப்படிக் கொஞ்சம்கூட மாறாமல் இருக்கிறான் என்பது நம்ப முடியாததாக இருந்தது. அவன் வளரவுமில்லை, ஞானமடையவுமில்லை, முன்பைவிட சற்று முன்னேறவுமில்லை. அவன் மேலும் மேலும் எலனாராகி விட்டிருக்கிறான். அவனது சிக்கலின் துயரம் அவளைப் புத்துணர்வுடன் தீண்டியது, கைகளைக் கண்களுக்குக் கொண்டுசென்றவள், 'என் பரிதாபம் மிக்க சிறுமி ஏதெல், உன்னால் எப்படி இதைச் செய்ய முடிந்தது?' என்றாள்.

அவன் கிளம்புவதைக் கேட்ட அவள் நிமிர்ந்து பார்த்த போது சுவரின் பாதி உயர தூரத்தினைக் கடந்திருந்தான். அவள் அவனை அழைத்தபோது, அவன் தொப்பியை அர்த்தமின்றி அசைத்துவிட்டு மலையின் வழுவழுப்பான பச்சை முகட்டினைக் கடந்து செல்வதைக் காண முடிந்தது. சுவரின் வெம்மையில் சாய்ந்துகொண்ட ஹாரியட் அவ்விடத்தின் ஆழ்ந்த அமைதிக்குள் தன்னைப் புகுத்திக்கொள்ள முயன்றாள். எத்தனையோ முட்டாள்தனங்களும் வேட்கைகளும் அங்கேதான் தம்மை நிகழ்த்திக்கொண்டன - இப்போது புற்களின் அமைதியாய்ப் படிந்திருக்கின்றன. என்றாலும், ஒருவித வலி அவளுள் துடித்துக்கொண்டே இருந்தது. ஃபோர்ஸைத் இவ்வளவு நேரம் படுத்திருந்துவிட்டுச் சென்ற இடத்திலிருந்து ஒரு துர்வாடை போல எழுந்து அவளுக்கும் வயல்களுக்கும் பழத்தோட்டங்களுக்கும் நதியின் சாம்பல்பச்சை விளிம்புகளுக்கும் இடையே பரவுவது போல் இருந்தது அந்த வலி. இறுதியாக, ஒரு பெரு மூச்சுடன் அங்கிருந்து எழுந்துகொண்ட போது, 'ஓ, என் இனிய எலனார்! உன் மீது நான் இரக்கம் கொள்கிறேன், நீ எங்கிருந்தாலும் சரி, உன் மீது நான் இரக்கம் கொள்கிறேன், உன்னால் உணர முடிகிறதா?' என்று தனக்குள் முனகிக்கொண்டாள்.

**அவனுடன் இருப்பதில் ஹாரியட்டிற்கு ஒருவித அமைதி நிறைந்த மகிழ்ச்சிகூட ஏற்பட்டது. அவன் நிலைமையைச் சீர்படுத்த முயல்கிறான் என அவள் நினைத்தாள்**

## 03

இடையில் இருந்த மௌனம் கலைக்கப்பட்டுவிட்ட பிறகு, ஃபோர்ஸைத் அடிக்கடி திருமதி வெஸ்ட்ஃபீல்டின் தோட்டத்திற்கு வந்துசென்றான். அவள் தையல் வேலை செய்வதைப் பார்த்தபடியோ, அவளுடன் மலையுச்சியின் இடிபாடுகளிலோ நதிக்கரையிலோ வளமிக்கப் பண்ணைகளுக்கு ஊடாகவோ நடந்தபடியோ காலைப்பொழுதுகள் அனைத்தையும் கழித்தான். அவன் மிகக்குறைவாகவே பேசினான் என்றாலும், அவள் வெகு இயல்பாகப் பேசுவதற்கான இடத்தை அளித்திருந்தான். எலனார் ஸான்ஃபோர்டுடனான தனது பால்ய காலத்தைப் பற்றி இயல்பாகவும் சுதந்திரமாகவும் அவள் பேசியபோது அவன் மிக்க நன்றியுடன் அவற்றைக் கேட்டபடியே அமைதியாகப் பின் தொடர்ந்தான். பாரிஸில் உள்ள ஒரு கான்வெண்ட் பள்ளியில் அவர்களது நாட்களைப் பற்றி; ஸினெக்டடியிலிருந்து கொணர்ந்த சிறிய தேவதாரு தலையணையுடன் சேர்த்துத் தைத்து வைத்திருந்த 'மேனன் லெஸ்கால்ட்' புத்தகத்தின் பிரதியைப் பற்றி தனது பிறந்த தினத்தின் போது கைதேர்ந்த திட்டங்களின் மூலம் ஆல்பனியிலிருந்து வந்த ஒரு கபடமற்ற அத்தையின் பாதுகாவலில் அவளது அத்தனை ரோஜாக்களையும் பெர்-த- செய்ஸ் சுடுகாட்டிற்கு அனுப்பி முஸாயின் வில்லோ மரங்களுக்குக் கீழே வரிசைப்படுத்த வைத்தாள் என்பதைப் பற்றி.

அவனுடன் இருப்பதில் ஹாரியட்டிற்கு ஒருவித அமைதி நிறைந்த மகிழ்ச்சிகூட ஏற்பட்டது. அவன் நிலைமையைச் சீர்படுத்த முயல்கிறான் என அவள் நினைத்தாள். அவள் அவனை நம்பலாம் என்றும் முதன்முதலில் மலையில் சந்தித்த போது நிகழ்ந்த அவளைச் சிதைத்த அந்த நிகழ்வு மீண்டும் நடந்தேறாது என உறுதியளிக்க முயல்வதாகவும் தோன்றியது. எலனாரைப் பற்றி அவன் பேசியதெல்லாம், அவர்களது அன்பின் அழகைப் பற்றி மட்டுமேயாக இருந்தது. அதை நினைவுகூர்வதில் அவள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். அவர்கள் ஒருவேளை சுயநலம் மிக்கவர்களாய் இருந்திருக்கலாம், ஆனால் அது ஒருபோதும் சோம்பலாகப் பரிணமிக்கவில்லை. அவர்களது ஆர்வங்களை அவர்கள் செயலாக்கினர். அவர்களது அன்பு ஒருபோதும் தேங்கிப் போய்விடவோ மந்தமான நடுத்தர வயதை எட்டிடவோ இல்லை. அது எப்படி இரண்டு மனிதர்களால் பத்து முழு ஆண்டுகள் அவ்வளவு நெருக்கமாய்ப் பிணைந்து நிறைந்திருக்க முடிந்தது என்று ஹாரியட் தனக்குள் பலமுறை கேட்டுக்கொண்டாள். அதிலும் உச்சம் என்னவென்றால், அந்தச் சமயத்தில் அவர்கள் செய்த செயல்களும் சென்ற இடங்களும் சந்தித்த மனிதர்களும் அவர்களது வாழ்க்கை நாடகத்திற்கு இசை சேர்த்த வெறும் தற்செயல்கள் மட்டுமே.

ஆனால் அதன் முடிவோ, சொர்க்கத்தின் செயலால், வெகு சீக்கிரமே வந்துவிட்டது. வாய்ஸில் இருக்கும் அவர்களது சொந்த இடமான ஃபார்ச்சூனில் மூன்று தின உடல்நலிவு, அத்துடன் முடிந்துவிட்டது. தனது வழியைத் தானே கண்டறியும்படியாக அவன் வெற்றுவெளியில் தூக்கி எறியப்பட்டான். மையத்தை நோக்கி ஏங்கியபடியே வட்டத்தின் பகுதிகளில் போராடிக்கொண்டிருக்கும்படியாக விடப்பட்டான்.

ஒரு நாள், வயல்களினூடாக நடக்கலாம் என ஹாரியட்டை ஹரால்ட் கேட்டுக்கொண்ட போது, ஊரைக் கடந்தவுடனேயே, அவன் ஏதோ முக்கியமாகச் சொல்லப் போகிறான் என அவள் உணர்ந்துகொண்டாள். தோட்டத்திற்கு நடுவே ஒரு விடுதியில் உயர்ந்த பீச் மரத்தினாலான மஞ்சள் களிமண் சுவரருகே அமர்ந்து அவர்கள் உணவருந்திய போது, அவ்வூரிலிருந்து கிளம்பப் போவதாக ஹரால்ட் தெரிவித்தான்.

'எத்தனை நாட்களுக்கு என்று தெரியவில்லை. ஒரு வாரத்திற்கோ இரண்டு வாரத்திற்கோ இருக்கலாம். நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டுவிடக் கூடாது. இந்தக் கடந்த வாரங்களில் நீங்கள் எனக்குச் செய்திருக்கும் நன்மையைப் பற்றி நீங்கள் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. ஆனால், ஆனால்... இது நாங்கள் போட்டுக்கொண்ட ஒரு ஒப்பந்தம்,' பலவீனமாகச் சிரித்தபடி அவன் விளக்கினான். 'இயர்ஸிற்கு அருகில் மத்தியத் தரைக் கடலில் ஒரு சிறிய நகரில் நாங்கள் ஒருமுறை சிக்கிக்கொள்ள நேர்ந்தது. எங்களுக்கு அது மிகவும் பிடித்துப் போனதில் சில நாட்கள் அங்கே தங்கினோம். அங்கிருந்து கிளம்பியபோது ஒவ்வொரு வருடமும் திராட்சைகள் பழுக்கிற இந்த நாட்களில் நாம் இங்கு வரவேண்டும் என எலனார் கூறினாள். ஆனால் அதுதான் அவளது கடைசி ஆண்டு என்பதால் நாங்கள் ஒருமுறைகூட அங்கு மீண்டும் செல்லவில்லை. ஆனால் ஒவ்வொரு இலையுதிர் காலத்திலும் அதே வாரத்தில் நான் அங்கு சென்றேன். அங்கிருக்கும் எல்லோருக்கும் அவளை நினைவிருக்கிறது. அது ஒரு சிறிய இடம்.'

ஹாரியட் அவனையே பார்த்தபடி கவனமாகக் கேட்டுக்கொண்டாள். மேலேறிய ஒரு குட்டி கருப்புப்பூனை அவனது கரங்களைப் பாதங்களால் தட்டியும் உணவளிக்கும்படிச் சப்தமெழுப்பியும் உரசியது.

'அதனால்தான் நீ அடிக்கடி வெளியே செல்கிறாயா? ஏதெல் சொன்னாள். ஏதோ வேலையின் பொருட்டு என்று அவள் சொன்னாள், ஆனால் நான் அதை நம்பவில்லை.'

'அது அப்படி ஆனது குறித்து நான் மன்னிப்பு கோருகிறேன். இந்த விஷயத்தில் நான்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராத்து



# பெண்ணுக்கு காதல் எல்லாவற்றிலும் மேலானது: காதலன் அல்ல!

காதலில் ஆண் பெண் இருவருமே செய்யும் தவறு என்னவென்றால், ஒருவர் எப்படி இருக்கிறாரோ அவரை அப்படியே காதலிப்பதில்லை. தங்கள் கற்பனையில் உருவான ஒரு 'ஐடியல் இமேஜ்'ஐ அவர்கள் மேல் போர்த்தி அந்த இமேஜைக் காதலிக்கத் தொடங்குகிறார்கள். காதலிக்கும் நேரத்தில் மட்டும் தங்கள் மனதில் உள்ள கற்பனைப் பாத்திரம்போலவே காதலிப்பவர்களும் செயல்படுகின்றனர் என்று தோன்றும். இதை ஒரு 'லவ் இலூஷன்' என்று சொல்லலாமா என யோசிக்கிறேன். உலகில் இதைத் தாண்டிய 'மேஜிக்கல் ரியலிஸம்' வேறெதுவும் கிடையாது. அடுத்தவர்களுக்குச் சப்பையாகத் தெரியும் ஒரு பெண்ணும் ஆணும், காதலனுக்கு தேவதையாகவும் காதலிக்கு தேவகுமாரனாகவும் தெரிவது இதனால்தான்!

**ஆணின் காதல்... பெண்ணின் காதல்...**

இதுவரை ஒரே மாதிரி மென்டலாக இருக்கும் ஆணும் பெண்ணும் இதற்கடுத்த கட்டத்தில்தான் வேறுபடத் தொடங்குகிறார்கள். ஆண் அந்தப் பெண்ணைக் காதலிக்கிறான். பெண் தன்னுடைய காதலைக் காதலிக்கிறாள். பெண்ணுக்கு அது 'தன் காதல்'. அந்தத் தன்னுடைய காதல் உயிர்ப்புடன் இருக்க ஒரு பங்கேற்பாளர் தேவை. அந்தப் பங்கேற்பாளராகப் பாத்திரம் வகிப்பது மட்டுமே காதலனின் வேலை. அதனால்தான் ஒரு காதல் தோல்வியிலிருந்து பெண்களால் விரைவில் மீள முடிகிறது. பழைய காதலனை அவளுடைய காதலிலிருந்து தூக்கிவிட்டு இன்னொரு இணையை வெகு விரைவில், 'அவளுடைய காதலில்' அவளால் வைக்க முடிகிறது.

இதில் ஆண்கள் 'தியரட்டிக்கல்' ஆசாமிகள். அவளையே நினைத்துக்கொண்டு இருக்கிறேன் என 'சீன்' போடுவார்கள். வெகு விரைவில் இவர்களால் 'அவளை' மறக்க முடியாது. பலர் கல்யாணம் செய்து புள்ளகுட்டி பெற்ற பின்பும்கூட அவ்வப்போது, 'அவளை' நினைத்து 'ஃபீல்' செய்துகொண்டும், 'சீன்' போட்டுக்கொண்டும் இருப்பது இந்த வியாதியின் தொடர்ச்சிதான். ஆண்கள் கேனத்தனமாக இன்னொன்றையும் செய்வார்கள். தங்கள் 'எக்ஸ்' திருமணத்திற்குச் செல்வார்கள். அவளின் தேனிலவுப் புகைப்படங்களைச் சமூக வலைதளங்களில் தேடித் தேடிப் பார்ப்பார்கள். அவள் பெற்றெடுத்த குழந்தையின் புகைப்படங்களைப் பார்த்து ரசிப்பார்கள்.

இதையெல்லாம் தாண்டி திருமணத்திற்குப் பிறகும் அவளுடன் தொடர்பு கொண்டபடியே இருப்பார்கள். அது அவளுக்கு மாபெரும் தொந்தரவு என்பதையோ, அவள் இன்னும் இன்னும் வெறுப்பாள் என்பதையோ உணராத மரக்கட்டைகள் இந்த ஆண்கள். அதற்காக ஆண்களைக் காவியக் காதலர்கள் என்று சொல்லவில்லை. இந்த உணர்வெல்லாம் அவள் பிரிந்துபோனால்தான். உடன் காதலியாக இருக்கையில் அல்ல. காதலித்துக்கொண்டு இருக்கும்போதே, அடுத்த பெண்ணுக்கு 'ரூட்' போடுவது எல்லாம் நடக்கும். அதையும் மறைமுகமாகச் செய்யத் தெரியாது. அசட்டுத்தனமாக செய்து மாட்டிக்கொள்வார்கள்.

பெண்கள் இதில் ஆண்களை ஒப்பிட மேம்பட்டவர்கள். ஒருவனைப் பிரிந்ததும் அவனையே நினைத்து ஏங்கிக்கொண்டு இருக்க மாட்டார்கள். அவர்களுக்கும் வலி இருக்கும். அந்த வலி காதலனைப் பிரிந்த வலி அல்ல. காதல் புட்டுக்கொண்ட வலி. சங்க இலக்கியத்தில்கூட காதலனுடன் உறவில் இருக்கையில் அவனைப் பிரிந்த வலிதான் பெருமளவு சொல்லப்பட்டு இருக்கும். காதல் என்ற உறவில் இருந்து மொத்தமாக வெளி வந்த பின் காதலனை நினைத்து மூக்கு சிந்து‹ து பெரும்பாலும் இருக்காது.

தேவதாஸ் போன்ற பாத்திரங்களுக்கு இலை யான பெண் பாத்திரங்களை நாம் காண முடியாது. 'அவ என்ன வுட்டுட்டு போய்ட்டாடா மச்சி' என்று இரவு முழுக்க தன் நண்பர்களை ஆண்கள் 'டார்ச்சர்' செய்வதுபோல பெண்கள் செய்வதில்லை. பிரிந்தவனை நினைத்து ஏங்கிக்கொண்டு இருப்பதில்லை..

இதை நான் தவறாகப் பார்க்கவில்லை. பெண்கள் 'ப்ராக்டிக்கல்' என்று எடுத்துக்கொள்கிறேன். இயற்கையே அவர்களை அப்படித்தான் படைத்திருக்கிறது.

**கமல் - கிரண் காதல்**

சமீபத்திய ஓர் உதாரணத்தைத் தருகிறேன். காதலன் - காதலி இருவரும் என் நண்பர்கள். பத்து வருடக் காதல். அதில் 'லிவ் இன்' ஆகவே 5 வருடங்களாக இருந்தார்கள். பெண் வீட்டில் அவளை திருமணம் செய்துகொள்ளச் சொல்லி ஏக வற்புறுத்தல். காதலன் தனிப்பட்ட காரணங்களால் திருமணத்தைத் தள்ளிப்போட்டபடி இருந்ததால், இவளும் ஏதேதோ சாக்குப்போக்கு சொல்லி, வந்த வரன்களை எல்லாம் தட்டிக்கழித்தபடி இருந்தாள். இருவரும் ஈருடல் ஓருயிர் என்பதற்கு உண்மையான உதாரணமாகத் திகழ்வார்கள். நான் அவர்கள் வாழும் வீட்டிற்குச் சென்றிருக்கிறேன். பார்ட்டி செய்திருக்கிறோம். அவள் அவன் மேல் வைத்திருந்த அதீத காதலை நான் அறிவேன். எது ஒன்றென்றாலும் அவன் பக்கம் நிற்பாள். நாம் கற்பனையே செய்துபார்க்க முடியாதபடிக்கு அவனைத் தாங்குவாள்.

போன வருடம் அவனைப் பிரிந்தாள். அந்தக் காரணம் இங்கே வேண்டாம். வீட்டில் காட்டிய மாப்பிள்ளையைப் பேசிப் பார்த்து பழகிப் பார்த்து திருமணம் செய்துகொண்டாள். இவனுடன் பிரிந்ததற்கும் திருமணம் செய்ததற்கும் இடையே 4 மாதம் தான் இடைவெளி. திருமணத்திற்கு முன்பே எதிர்காலக் கணவனுடன் இருக்கும் புகைப்படங்களைப் பொதுவெளியில் பகிரத் தொடங்கினாள். எதிர்காலக் கணவனுடன் அதே தீவிர காதலில் குறுகிய காலத்திற்குள் அவளால் ஈடுபட முடிந்தது. வாழ்க்கையைக் கொண்டாடிக்கொண்டு இருப்பது அவளின் சமூக வலைத்தளப் பதிவுகள் மூலம் தெரியவந்தது. உடனடியாக கர்ப்பம் ஆனாள். தாய்மையைக் கொண்டாடத் தொடங்கினாள். குழந்தை பிறந்ததும் அதைக் கொண்டாடத் தொடங்கினாள்.

இவன் கதையை நான் சொல்ல விரும்பவில்லை. அந்த நண்பனும் இந்தத் தொடரை விடாமல் வாசித்து வருபவன்தான். என்னால் ஒன்றை உறுதியாகச் சொல்ல முடியும். அவளுடைய புதுக் கணவனை அவள் அதே தீவிரத்தோடு காதலித்துக்கொண்டு இருக்கிறாள். அவளுடனான தொலைபேசி உரையாடலில் இதை என்னால் நேரடியாகக் கேட்கமுடியாது. ஆனால், அவள் குதூகலமாகப் பேசிய பல தருணங்களைத் தொகுத்துப் பார்த்து இந்த முடிவுக்கு வருகிறேன்.

'அன்பே சிவம்' படத்தில் கமல் நுட்பமாக ஒரு காட்சி வைத்திருப்பார். அந்தக் காட்சியைக் குறிப்பிட்டு எவரும் எழுதி நான் பார்த்ததில்லை. நேரடியாக எந்த விமர்சனமும் இல்லாமல் இயல்பான காட்சியாக வைத்திருப்பார் கமல். நாம்தான் இரண்டு காட்சிகளையும் கோர்த்துப் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும்.

தொடக்கத்தில் வரும் கமல் - கிரண் காதல் காட்சிகள் கவித்துவமாக இருக்கும். 'லார்ஜர் தன் லைஃப்' போன்ற காதல்தான். கிரண் கமல் மேல் பித்துப்பிடித்துப் போய் இருப்பார். அப்படி உயிருக்குயிராகக் காதலிப்பார். கிரண் இந்தப் படத்தில் மிக நன்றாக நடித்திருப்பார். கமலுடனான காட்சிகளில் கண்கள் மட்டுமல்லாமல் உடலில் ஒவ்வொரு செல்லிலிருந்தும் காதல் சொட்டிக்கொண்டு இருக்கும் கிரணுக்கு. கமல் ஒரு விபத்தில் மாட்டிக்கொள்வார். அவர் என்ன ஆனார் என்று கிரணுக்குத் தெரியாது. மாதவன் அறிமுகக் காட்சியில் அவருக்கு ஒரு போன் வரும். அப்போது அவர் கட்டிக்கொள்ளப்போகும் பெண் அவ்வளவு காதலுடன் பேசுவார். அதீத அக்கறையோடும், அளவற்ற அன்பு மற்றும் காதலைக் குழைத்து அவ்வளவு உரிமையோடு பேசுவார். பிறகுதான் தெரிய வரும் அப்படிப் பேசிய பெண் அதே கிரண்தான் என்று.

என்ன இருந்தாலும் கமல் அனுபவஸ்தர் அல்லவா? இதில்

**பெண்கள் இதில் ஆண்களை ஒப்பிட மேம்பட்டவர்கள். ஒருவனைப் பிரிந்ததும் அவனையே நினைத்து ஏங்கிக்கொண்டு இருக்க மாட்டார்கள். அவர்களுக்கும் வலி இருக்கும். அந்த வலி காதலனைப் பிரிந்த வலி அல்ல.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணுக்கு காதல்...

பெண்களை விமர்சிக்க ஏதுமில்லை. கிரணின் கமல் மீதான காதலும் உண்மைதான். மாதவன் மீதான காதலும் உண்மைதான். அதே தீவிரம்தான். அதனால்தான் பெண்களுடைய காதலில் காதலனைவிட அவர்களுடைய காதலுக்கு 'பவர்' அதிகம் என்கிறேன்.

குழந்தை என்ற ஒன்றே பெண்களுக்கு இயற்கை கொடுத்த ஒரு மாபெரும் 'டூல்' என நினைக்கிறேன். என்னதான் தந்தைப் பாசம், தந்தைப் பொறுப்பு என்றெல்லாம் சொல்லிக்கொண்டு திரிந்தாலும் அவையெல்லாம் சமீபமாக சில ஆயிரம் ஆண்டுகளில் உருவான கற்பிதங்கள். மனிதன் நாகரிகம் அடைந்ததும் சமூகம் சொல்லிக்கொடுத்து ஆண்கள் பின்பற்றுபவை. ஆனால், தாய்ப்பாசம் என்பது இயற்கையானது. ஓர் உயிர் தன்னுடலிலிருந்து உருவாகி உலகுக்கு வருகிறது என்ற உணர்வுக்கு மாற்று எதுவும் கிடையாது. அது தன்னில் ஒன்று, தன்னில் இருந்து வந்தது என்பது அவளுக்கு உறுதியாகத் தெரியும். ஆண்களைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் ஒரு நம்பிக்கையில் தான் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது.

### அலைஞ்சான் ஆண்கள்...

பெண்களைப் பொறுத்தவரை காதல், காமம் எல்லாம் கடைசியாக அவர்கள் ஒரு குழந்தை பெற்றெடுப்பதற்கான ஒரு 'ப்ராஸஸ்'. இது அவர்களின் ஆழ்மன விழைவாக இருக்கலாம். இயற்கை அப்படி ஒரு மன அமைப்பையும், உந்துதலையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கலாம். தங்களின் காதலின் விளைவாக, பெரும் மகிழ்வாக அவர்கள் குழந்தை பெற்றெடுத்தலைப் பார்க்கிறார்கள். அதில் அவர்கள் நிறைவடைகிறார்கள். ஆண்களுக்கு இந்தக் காதல், காமம் மூலம் நிறைவடைதல் என்ற ஒன்று இல்லை. அதனால்தான் ஆண்கள் கடைசி வரை 'அலைஞ்சான்'களாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இது என்னுடைய தனிப்பட்ட 'அப்ஸர்வேஷன்'. என் தனிப்பட்ட கருத்து.

என் தோழிகள் என்னிடம் வெளிப்படையாகப் பேசக் கூடியவர்கள். பெண்கள் எல்லோரும் வெளிப்படையாகப் பேசுவதை விரும்புபவர்கள் தான். என்ன ஒன்று, அவர்கள் பேசுவதை வைத்து அவர்களை ஜட்ஜ்செய்யக்கூடாது. அவர்கள் பேசுவதை சேமித்து வைத்துக்கொண்டு, அதைப் பயன்படுத்தக்கூடாது. பேசுவது வெறும் உரையாடல் மற்றும் கருத்து பரிமாற்றம் மட்டுமே என்கிற ரீதியில் நீங்கள் பழகத் தொடங்கினால், உங்கள் தோழிகளும் உங்களிடம் வெளிப்படையாகப் பேசுவார்கள். அவர்கள் பேசுவதை உங்கள் லௌகீக வாழ்க்கைக்குப் பயன்படுத்தப் பார்க்கக்கூடாது, அவ்வளவுதான்.

உதாரணமாக ஒரு தோழி, 'நல்ல ப்ளஸண்டான செக்ஸே ரீஸன்ட் டைம்ல இல்லடா' என்று சொன்னால், உடனே, 'ஹி... ஹி... நான் வரட்டுமா...' எனக் கேட்டுக் கடுப்பேற்றக்கூடாது. சும்மா இருந்தாலே மலமாடுபோல ஆண்கள் அவர்கள் மேலேறிக் கொண்டு இருக்கையில் பெண்கள் எப்படி வெளிப்படையாகப் பேசுவார்கள்?

எதுவோ சொல்ல வந்து என்னமோ எழுதிக் கொண்டிருக்கிறேன் பாருங்கள். கொஞ்சம் பொறுங்கள், இதை எப்படியாவது தொடர்புபடுத்திவிடலாம். என்னிடம் வெளிப்படையாகப் பேசுகிறார்கள் என்று சொன்னேன் அல்லவா? என் தோழிகள், என்னிடம் பேசும் அளவுக்கு அவர்கள் கணவர்களிடம் வெளிப்படையாகப் பேச மாட்டார்கள். அதுபோல என் மனைவி என்னிடம் அவ்வளவு வெளிப்படைத்தன்மையுடன் பேச மாட்டாள். ஏன்? அப்படி வெளிப்படையாகப் பேசத் தொடங்கினால் இங்கே எந்த உறவும் உருவாக முடியாது. அப்படியே உருவானாலும் நிலைத்திருக்க முடியாது.

இப்படி அடிப்படையிலேயே வெளிப்படைத் தன்மையற்ற அடித்தளத்தில்தான் பெரும்பாலான ஆண் - பெண் உறவுகள் கட்டமைக்கப்படுகின்றன. அந்த போலியான அடித்தளத்தின் மீது போலியான செங்கற்கள், போலியான சிமெண்ட், போலி இரும்புக்கம்பிகள் கொண்டு கட்டி எழுப்பப்படுகின்றன. பின் அதன் மேல், போலி பெயின்ட், போலி மார்பிள்ஸ் என அடுக்கிக்கொண்டே போகிறோம். இருவரும் பெரும்பாலும் நடித்துக்கொண்டும், அனுசரித்துக்கொண்டும், விட்டுக்கொடுத்துக்கொண்டும் வாழ்க்கை முழுவதும் கழிகிறது. விட்டுக்கொடுத்து வாழ்வதுதான் வாழ்க்கை என பலர் சொல்லியிருக்கிறார்கள்.

நான் இதில் மாறுபடுகிறேன். சமூகத்தில் விட்டுக்கொடுத்துதான் வாழ்ந்தாக வேண்டும். அலுவலகத்தில், பொது இடத்தில், கடைகளில், அரசு சம்மந்தப்பட்ட வேலைகளில் என எங்கும் எதிலும் விட்டுக்கொடுத்தே வாழ வேண்டியிருக்கிறது. காதலும் காமமும் கலந்து காலம் முழுக்க ஒன்றாக வாழும் இருவருக்குள்ளும் ஏன் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும்? விட்டுக்கொடுத்து வாழ்வது என்பது கேட்பதற்கு இனிமையாக இருக்கும். ஆனால், அது அதிக அழுத்தம் தரக்கூடியது. காலம் முழுக்க ஒருவருக்கு விட்டுக்கொடுத்தே வாழ்ந்துகொண்டிருந்தால் அவர் மேல் அன்பு வருமா? கொலைவெறி வருமா?

விட்டுக்கொடுக்காமலேயே, அதேசமயத்தில் அடுத்தவர் சுதந்திரத்தில் குறுக்கிடாமல் இருவரும் சேர்ந்து வாழும் புள்ளியை அடைய முடியும். அதற்கு முதலில் கற்பனாவாதக் காதலில் இருந்து மனதை வெளியேற்றவேண்டும். ஈருடல் ஓருயிர் என்றெல்லாம் கம்பளிப்பூச்சிபோல ஒருவர் மீது இன்னொருவர் ஏறக்கூடாது. இதையெல்லாம் இப்போது படிக்கையில் சிறப்பாகத் தோன்றி, இப்படியே செய்யலாம் என முடிவெடுத்தாலும், காதலில் மாட்டியதும் இதெல்லாம் காற்றில் பறந்துவிடும். இப்படி எல்லாம் முயற்சியே செய்துபார்க்க முடியாதபடிக்குத் தடையாக இருப்பவள் காதலிதான்.

### பைத்தியக்காரத்தனங்கள்

காதல் பூத்து அவளிடம் அதைத் தெரிவிக்கும் போது இயல்பான மானிடன் இயல்பாக காதல் வந்து இயல்பாகத் தெரிவிப்பதைப் போல சொன்னால் ஒன்றுமே நடக்காது. எல்லையில்லா பெருங்காதல், பிரபஞ்சத்திலேயே இதுவரை இல்லாத அரிய காதல், உன்னைக் காதலிக்கவே இந்தப் பிறவி, ஈரேழு ஜென்மம் எடுத்தாலும் உன்னையே காதலிக்கவேண்டும், யாருமில்லா உலகில் நீயும் நானும் மட்டுமே வாழவேண்டும் - இப்படியான 1,000 டெம்ப்ளேட் வசனங்கள் உள்ளன. இவற்றில் ஏழெட்டையாவது சொல்லி, அப் நார்மலாகக் காதலை வெளிப்படுத்த, கரடி குட்டிக்கரணம் அடித்து தன் முடியை எல்லாம் கொத்துக் கொத்தாக பிய்த்துப் போடுவதைப் போல எதையாவது செய்தால்தான் அவள் காதலைப் பரிசீலிக்கவாவது செய்வாள். ஆக தொடக்கத்திலேயே இந்தப் பைத்தியக்கார உலகுக்குள் நுழைவதற்கு விதிகளை உருவாக்கி காதல் வாழ்க்கையில் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என 'டிக்டேட்' செய்தபடி இருக்கிறாள் காதலி.

வித்தியாசமாக 'ப்ரொபோஸ்' செய்யவேண்டும். அடிக்கடி 'சர்ப்ரைஸ்' கொடுக்கவேண்டும். இது என்ன காதலா அல்லது சர்க்கஸா அல்லது திகில் மர்மம் நிறைந்த திரைப்படமா? யாரும் செய்யாததைச் செய்யவேண்டும், வித்தியாசமாகச் செய்ய வேண்டும், விசித்திரமாகச் செய்ய ஷவேண்டும் என்றெல்லாம் அழுத்தத்தைக் கொடுப்பவர்கள் இந்தக் காதலிகள். இதிலெல்லாம் வித்தியாசம், யூனிக்நெஸ் எதிர்பார்ப்பவர்கள், கடைசியாகக் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடியும் இருட்டில் செய்த அதையேத் தானே செய்யப்போகிறார்கள்? நானும் வித்தியாசத்துக்கு எதிரானவன் இல்லை, அது சுவாரஸ்யமாக இருக்கவேண்டும், விரும்பிச் செய்யவேண்டும். அதை விட்டுவிட்டு பைத்தியக்காரத்தனமாக இருக்கலாகாது.

பேருந்தை நிறுத்தி சர்ப்ரைஸாக பிறந்த நாள் வாழ்த்து சொல்வது, ஏழெட்டு பேரைக் கூலிக்குக் கூட்டி வந்து ஆட வைத்து பொக்கே கொடுப்பது, நிறையப் பள்ளிச் சிறுமிகளைக் கூட்டி வந்து பாடவிட்டு ஆடவிட்டு பூக்கள் கொடுப்பது, திடீரென்று சாப்பிடும் ஓட்டலில் நான்கைந்து பேரர்கள் டேன்ஸ் போட்டு பிறந்த நாள் வாழ்த்து சொல்வது... இதையெல்லாம் நீங்கள் விடியோவாக சமூக வலைத்தளங்களில் பார்த்திருக்கக்கூடும். நான் மேலே சொன்னதெல்லாம் மிக எளிமையான பைத்தியக்காரத்தனங்கள். இதையெல்லாம் தூக்கி அடிக்கும் பைத்தியக்காரத்தனங்கள், வெளியே சொல்ல முடியாத கீலாத்தனங்கள் நிறைய உள்ளன.

இதையெல்லாம் செய்யச் சொல்லி அழுத்தம் கொடுத்துக்கொண்டிருப்பவர்கள் பெண்கள். ஒரு காதலனுக்கு இப்படியான பைத்தியக்காரத்தனங்களைக் காதலிகள் செய்வதில்லை என்பதைக் கவனித்து இருப்பீர்கள்.

காதலில் இப்படி 'அப் நார்மல்' ஆக இருக்கும் அவள் இந்தக் காதல் வாழ்க்கையைத் தவிர ஏனைய சமூக, அலுவலக வாழ்வில் 'நார்மல்' ஆக இருப்பாள். காதல் வாழ்வில் மட்டுமே 'அப் நார்மல்'. ஏனென்றால் அவளுடைய காதலை அவள் சாதாரண காதலாக எடுத்துக்கொள்வதில்லை. அவளுடைய காதல் எப்போதும் 'லார்ஜர் தன் எ லைஃப்'தான்.

(பேசுவோம்...)

# கலக்கும் புட்டு ஐஸ்கிரீம்!

இந்தியாவின் கேரள மாநிலத்தின் பாரம்பரிய உணவு யாழ்ப்பாணத்தைப் போலவே புட்டும் வாழைப்பழமும்தான். அரிசிப் புட்டு, கோதுமை புட்டு, ராகி புட்டு எனப் புட்டுகள் பல வகைகளில் அங்குள்ளன. புதிதாக இப்போது புட்டு ஐஸ்கிரீம் இணையத்தைக் கலக்கிவருகிறது. இந்த இணைய உலகில் விதவிதமான உணவுகளை அறிமுகப்படுத்தும் ஃபுட்டிகள் பெருகிவிட்டார்கள்.

'Foodie sha' என்கிற கேரள இளைஞர் தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில், கேரளத்தின் ஓர் உணவகத்தில் புட்டு ஐஸ்கீரிமைத் தயார் செய்யும் காணொலியைப் பதிவேற்றியிருந்தார். வித்தியாசமான இந்த புட்டு ஐஸ்கிரீமைப் பார்த்தவர்கள் அதிக அளவில் பகிர, இந்த காணொலி கொடிகட்டிப் பறந்தது. சரி, இந்தப் புட்டு ஐஸ்கிரீமை எப்படிச் செய்கிறார்கள்? புட்டுக் குழாயில் அரிசி மாவை நிரப்புவதற்குப் பதிலாக ஐஸ்கிரீமை இடுகிறார்கள். இடையிடையே தேங்காய்த் துருவலுக்குப் பதில் கார்ன்ஃபிளேக்ஸ் மற்றும் சாக்கோசிப்களை நிரப்பி விடுகிறார்கள். அவ்வளவுதான், புட்டு ஐஸ்கிரீம் தயாராகி விடுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்...? அப்படி...?

நட்சத்திரா

06



மேட்டுக்குடி மக்கள் என்று சுட்டிப்பேசப்படும் மக்கள் கூட்டமென்று இருப்பது யதார்த்தம். வாழ்க்கைத்தரம், பொருளாதாரம் என்பவற்றில் தமக்கு அயலில் உள்ள மக்களைவிட மேம்பட்டவர்களாகத் தம்மை ஆக்கிக் கொண்டவர்களாக இந்த மேட்டுக்குடியினர் இருந்தனர். உயர் சாதி, உயர் கல்வி, பெரும் சொத்து என்பன அவர்களைக் கனவான்களாக ஆக்கியது. மன்னராட்சிக் காலத்தில் முக்கிய நிர்வாகப் பதவிகளில் இங்கு மேட்டுக்குடி வேளாளர்களே முதன்மை பெற்றனர். பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அந்த அரசுகளுக்கு விசுவாசமாகச் செயற்பட்டு அவர்களில் பலர் பல்வேறு நலன்களையும் பெற்றுகொண்டனர். அளவுக்கு அதிகமான காணிகளைத் தமது உடமையாக்கிக் கொண்டனர். பொதுவான சமூகக் கட்டமைப்பில் ஒரு சிறு மக்கள் குழுவே பல துறைகளிலும் குவியப்படுத்தப்பட்ட அதிகாரத்தைக் கொண்டிருந்தது.இவர்கள் ஏன் மேட்டுக்குடிகள் என அழைக்கப்பட்டார்கள்.

**காரணம் 1 - உயரமான நிலத்தில் வாழ்ந்தார்கள்**

இந்த மேட்டுக்குடி மக்கள் தம்மை மற்றைய மக்களிடமிருந்து வேறுபடுத்துவதற்காக மழைக் காலத்தில் வெள்ளம் தேங்காத உயர்ந்த இடத்தில் தமது குடிமனைகளை அமைத்தார்கள். வெள்ளப் பாதிப்பிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வது மட்டுமல்லாது அதை ஓர் மதிப்பாகக் காட்டுவதற்கும் இது புவியியல் ரீதியாக வழியேற்படுத்தியது. உயரத்திலிருந்து கொண்டு தாழ்ந்த நிலங்களில் வாழ்ந்த மக்களைக் கண்காணித்துக் கொள்ளவும் தாழ்த்தப்பட்ட மக்கள் தமக்கு எதிராகச் செயற்பட்டுத் தாக்குதல் ஒன்றைத் திட்டமிட்டுச் செய்ய முற்படும்போது அவற்றை இலகுவில் கண்டுபிடித்துவிடவும் இதனால் முடிந்தது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கிளர்ந்தெழுகின்ற மக்களைத் தாழ்நிலங்களில் வாழும் மற்றொரு இனக்குழுவினரை வைத்து முறியடிக்கவும் செய்தார்கள்.

**காரணம் 2 - கையேந்த வைப்பது**

வெள்ளம் தேங்கும் தாழ்நிலம், மணற்பாங்கான பகுதிகள், சேற்றுநிலம் தரிசு நிலம் சுண்ணாம்புக்கல் படர்ந்த கலட்டிப் பகுதிகள், உவர் நீருள்ள பகுதிகள் போன்றவற்றைச் சாதியாலும் மதிப்பாலும் குறைந்தவர்களுக் வழங்கி (வேளாளரின் சொந்த நிலமாக இருந்தவை, தேச வழமைச் சட்டத்தினூடாகத் தமதாக்கிக் கொள்ளப்பட்ட நிலங்கள்) அவர்கள் ஒவ்வொரு வருடமும் இயற்கை அழிவுகளுக்கு உட்படும்போது தம்மிடம் வந்து கையேந்தி நிற்க வைப்பது.

**காரணம் 3 - சாதரணமாக அணுகமுடியாது தடுத்தல்**

சாதியையும் மதிப்பையும் முதலீடாகக் காட்டி மேட்டுக்குடி மக்களான தம்மைச் சாதாரண மக்கள் சாதாரணமாக நாட முடியாது என நம்ப வைத்ததுடன் மேட்டுக்குடி வேளாளர்களுக்குக் குடிமைகளான ஏனைய சாதியினரைத் தமது வேலைகளுக்காகத் தாம் கூப்பிடும்போது ஓடிவரத்தக்க தூரத்தில் குடியமர்த்திச் சிற்றரசர்கள்போல இந்த மேட்டுக்குடியினர் தம்மை உருவாக்கிக் கொண்டனர்.

**காரணம் 4 - சிங்கள வளவுக்காரர்**

சிங்களவர்களில் மேட்டுக்குடியினரை வளவுக்காரர் என்கின்றனர். வளவுக்காரர்களுக்குப் பெருமளவு நிலங்கள், தென்னந்தோட்டங்கள், வயல்கள் என அதிக சொத்துகள் இருந்தன. சாரம், வெள்ளைநிற பெனியன் அணிந்து கோட் போட்டுத் தலையில் கொண்டை வைத்து மாட்டுக் கொம்பால் செய்யப்பட்ட வளைந்த சீப்பு அணிந்திருப்பர் இவர்கள். கையில் ஊன்றுகோல் தடி வைத்திருப்பர். பெண்கள் முத்துமாலை அணிந்து உசரி எனப்படும் கேரளப் பாணியில் சேலை உடுத்திருப்பார்கள். தமிழரிலும் சிங்கள வர்களிலும் மேட்டுக்குடியினர் பலர் தமது பயணத்தின் போது மாட்டு, குதிரைவண்டி போன்றவற்றைப் பயன்படுத்தினார்கள்.

மேட்டுக்குடி நிலங்கள் தற்போது முன்பிருந்த அர்த்தத்தில் இல்லை. தாழ்நிலப் பிரதேசங்களில் காலத்துக்குக் காலம் அரசால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளால் புதிய தெருக்களும் கெங்கிறீட் வீதிகளும் இடப்பட்டு நீரோட்டங்கள் திசைமாற்றப்பட்டும் வெள்ள இடரிலிருந்து தாழ்நிலங்களில் வாழ்ந்த மக்களை மீட்டெடுத்திருக்கிறது.

---

# காக்கைப் பொன்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

கண்களை மூடிப்பாடு கின்ற பாடலின் மகிழ்ச்சி ஒரு நடனக்காரியைக் கொண்டு வந்திருந்தது. சற்குணம் அதிசயத்தைப் போல அந்த விரல்களின் நடனத்தைத் தலையு யர்த்திப் பார்த்தபடி இருந்தான். எப்போதும் சாதாரணமாகத் தோன்றும் ஒருத்தியின் உடலசைவுகள் கொஞ்சம் இரகசியம் பூசிக்கொள்ளும்போது எவ்வளவு வசீகரம் கொண்டுவிடுகின்றன! எதையோ உணர்ந்தவளாகச் சட்டென கண்விழித்தாள். அவ ளது மகிழ்ச்சியின் கடைசித்துளி இன்னமும் விரல்களில் நளினிப்பதைப் பார்த்தாள். கூடவே தலையணைக்குள் புதைந்தபடி அந்த விரல்களை, உன்னிக்கின்ற கண்களை, நிர்வாணத்தின் மீச்சிறு துண்டுகளாக இருளுக்குள் ஜ்வலிக்கின்ற அந்த விரல்களின் வெண்மையை, ஒரு அழைப்பைப் போல அவை நிகழ்த்துகின்ற நடனத்தை, வியர்வை ததும்பப் பார்த்த சற்குணத்தின் கண்களில் மயக்கத்தின் கருப்பு மின்னல்கள் தோன்றி மறைந் தபடியிருந்தன.

கண்ணுக்குத் தெரியாத சாட்டையொன்றினால் கணந்தோறும் அடிபட்டுக்கொண்டே இருக்கும் அவனது வியர்வை பொங்குகின்ற உடலைப் பார்த்தாள் ஒரு உலைதுருத்தியின் பதற்றத்தோடு அது மூச்சுத் திணறிக்கொண்டிருப்பதன் சித்திரவதையையும். அவனது கைகள் சப்தமின்றி கதவைத் திறப்பதற்கான

பாவனைகளோடு அவளைப் பற்றின. மஞ்சு அவனது கண்களில் அதனைக் கண்டாள். இருளுக்குள் மறைகின்ற முடிவுகொண்ட படிக்கட்டுகளின் வழியே முதல் அடி எடுத்துவைக்கின்ற அவனது கண்களில் வருகின்ற அந்த அச்சத்தை, இரகசியத்தை. அந்தக் கண்களின் வழியே அவள் எங்கெங்கோ சரிந்துகொண்டிருந்தாள். விறகை வெளியே இழுத்தாற்போலச் சட்டென அவளுடம்பு தணியத் தொடங்கியது. இவ்வளவு நேரம் அவள் எதன் கதகதப்பில் நின்றாளென்பதே அவளுக்குப் புரியவில்லை. சற்குணத்தின் விழிகளுக்குள் திரண்டெழுந்துகொண்டிருக்கும் யார் யாருடைய சாயைகளையோ அவள் திகைத்தவளாகப் பார்த்தபடியிருந்தாள். எக்கி மேலேற தன்னையறியாமல் கிளர்ந்தெழுந்த சற்குணத்தின் தோளைப் பற்றியவள் கண்ணீர் திரண்டுவிட்ட கண்களோடு, 'தெய்வமே... போடா' என்றாள். வாசலில் இருளுக்குள் சங்கர் வந்தமரும் ஓசையும் அவன் உரசிக்கிழித்த தீக்குச்சியின் பெரும் பிழம்பொன்று மெல்ல மெல்ல ஒரு துளியாகி வடிகின்ற வெளிச்சமும் கதவிடுக்கில் சேர்ந்து விழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமையறிதல்

45

ஐயங்கொண்டான் சுவாமிகள்

பொதுவாகவே போதனைகள் வழியாக மேம்போக்காக அறிந்து வைத்துள்ள எந்தவொன்றையும் அப்படியே அடைவது சாத்தியமானதல்ல என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவ்வாறுதான் கோட்பாடுகளை உள்நுளைந்து அறிவதற்கு முயலாது அப்படியே விழுங்கி வைத்துக்கொள்வதாலும் எண்ணியதை அப்படியே அடைதலும் சாத்தியமற்றது. எண்ணிக்கொண்டிருப்பவை எல்லாம் அப்படியே எவ்வளவு முயன்றாலும் கிட்டுமா? எத்தகைய சூழல்? யாருக்கு? எது? எப்பொழுது? எவ்வளவு? எவ்வாறு? போன்ற வினாக்களுக்கூடாக எமக்குத் தேவையானதை அடைதல் அல்லது முயற்சித்தல் அவசியமாதில்லையா?

எண்ணுவது உயர்வு என்று பள்ளிப் பாடமாக மனதில் உறைய வைத்திருக்கிறோமல்லவா? எண்ணுவதால் மட்டும் உயர்வு கிட்டுமா? யாதாயினும் ஒரு சிறு முயற்சி கூட இல்லாது கிட்டிவிடுமா? எண்ணம் யதார்த்தத்தின் துணையுடன் முயற்சிசெய்தல்வேண்டும். கைகளை அகல விரித்துப் பறந்து பிறருக்கு உதவவேண்டும் என்று எண்ணுவது சரி. அது அப்படியே சாத்தியப்படுமா? ஓடியோடி உத வமுடியும். அதை எப்படிச் சாத்தியமாக்கலாம்? அதற்காக என்ன செய்யவேண்டும்? என்று எண்ணி முயற்சிப்பதுதான் முக்கியமானது. புத்திசாலித்தனமானது.

எண்ணம் முக்கியமானது என்பதில் மறுகருத்துக்கு இடமேயில்லை. எண்ணமானது செயலாவதற்கு முயற்சி முக்கியமாகத் தேவையானது. இங்கே இந்த முயற்சி என்பதன் முதல் எதிரியாகவும் முழு எதிரியாகவும் எண்ணமே இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டியுள்ளது. ஆனால் எண்ணம் எப்படி முயற்சிக்கு எதிராகிறது? ஏன் எதிராகிறது? எண்ணியிருக்கிறோமா? இங்கிருக்கிறது ஒரு சுவையான முரண்.

எண்ணுகிற மனம் அதற்கான தடைகளையும் சேர்த்தே எண்ணுகிறது. தடைகள் என்பவை இல்லாத ஒன்றுமே இல்லை என்பதையும் அதே மனமே எண்ண வேண்டியிருக்கிறது. இங்கு விருப்பமாகிற செயலை அதற்கான எத்தனத்தை அல்லது முயற்சியை அதற்கான செல்வழியிலுள்ள தடைகளை வெற்றியை மட்டுமல்ல தோல்வியையும் என யாவற்றையும் எண்ணுவது ஒரே மனம்தான். இங்கேதான் மனம் என்கிற ஒன்றினது வகிபங்குதான் எல்லாமுமாகிறது.

மனம் என்பதை எண்ணம் என்பதை கையாள்வதிலுள்ள திறன்தான் இன்பமாகிறது. துன்பமுமாகிறது. உற்சாகமாகிறது. சோர்வுமாகிறது. பெருமையாகிறது. சிறுமையுமாகிறது. கிளர்ச்சியாகிறது. விரக்தியுமாகிறது. நம்பிக்கையாகிறது. நம்பிக்கையீனமுமாகிறது. எல்லாமுமாகிறது. முழுதுமாகிறது. மனம் என்பது என்ன? எப்படியானது? நான் யார்? அதற்கும் எனக்குமான தொடர்பு ஊடாட்டம் என்ன? ஆகமொத்தம் எல்லாமே மனம்தான்.

மனம் என்பது தொடர்பில் மீள மீளவும் பேசுதல் என்பது சலிப்பானது. அதனைக் கேட்பது எரிச்சலானது என்பதும் அறியாத தல்ல. இருந்தும் தவிர்க்கவியலாத ஒன்றாகவே மனம் இருக்கிறது. எமக்குள் இருக்கிறது. எமக்காகவே இருக்கிறது. எம்மை இயக்குகிறது. என்பதை நன்கறிந்த நாம் அதனை இயக்குவது நாமே என்பதை அறிந்தும் அறியாமலும் மறந்தும் இருக்கிறோம் என்பது கவனத்திற்குரியது.

முன்அத்தியாயங்களில் பகிர்ந்துகொண்டவை போல மனத்தை அடைசலாக்கி நெருக்கடிக்கு உள்ளாக்கி அவசரத்துக்கு எதையுமே பயனுள்ள விதமாக தேவைக்கேற்றபடி பயன்படுத்த முடியாதவாறு காவித்திரிகிறோம். இதனாலேயே பயன்பாட்டுக்குத் தேவையான நேரங்களில் தேவையானதை எடுத்தாள முடியாது தடுமாறுகிறோம்.

பட்டறிவு பட்டறிவுடனிணைந்த படிப்பறிவு வெறும்படிப்பறிவு என எதுவாயிருந்தாலும் தேவைக்கு உதவாதது பயனற்றது. குப்பைதான் அது. தேவைக்கு உடனடியாகப் பயன்படுத்தும் விதமாக அறிவை தயார் நிலையில் வைத்திருக்கிறோமா? இங்கும் தடையாக முன்வந்து நிற்பது மனம்தான். அதுவும் நம்பிக்கைகள் எனும் பெயரில் பகுத்தறிவோடு எந்தவிதமான உறவுமற்ற அடைசலாக்கப்பட்ட எண்ணங்கள்தான். சம்பிரதாயங்கள் சகுனங்கள் நாள்-கோள்-நட்சத்திரங்கள் சடங்குகளென நீளவாகும் பட்டியலிலுள்ளவைகள்தான்.

யதார்த்தமான சிந்தனையாற்றல் நடைமுறைச்சாத்தியமான முயற்சி போன்றவை மனத்தை இயக்கக்கூடியன. இவை தொடர்பாக சிந்திப்போமா?

# நாங்கள் எங்கை நிக்கிறம்?

கதிரேசன் காத்தவராயன்



அண்டைக்கதிலை கோயிலடியிலை கதையை குறையிலை விட்டிட்டு பூசைக்குப் போனனானல்லே... முடிஞ்சு வர வல்லியம்மானையும் தம்பரையும் காணயில்லை... நான் போய் அவையோடை இருந்துகொண்டன். ரியூசன் முடிஞ்சு கலகலத்தபடி கூட்டமாய்ப் பெடி பெட்டையள் போச்சுதுகள்.

"உங்கை பாருங்கொ முக்கால்வாசியும் முகக்கவசமில்லாமல் போகுதுகள்..." எண்டு புறுபுறுத்தார் கனகர். "உண்மைதானப்பா ஒரு கவனமுமில்லை... கவனிப்பாருமில்லை... கட்டறுத்துக் கொண்டு திரியுதுகள்.... கோறொனா புதிசு புதிசா அவதாரமெடுத்துக்கொண்டு வருகுது எண்டும் கத்துகிறாங்கள், கட்டுப்பாடுகளை கைவிட்டும் போட்டாங்கள்..." எண்டு சீறினார் முருகேசர்.

"பள்ளிக்கூடங்களிலை உந்தளவு வசதியளோடை நடத்துகிறதிலையே சிக்கல்படுகிறம்... உதுக்குள்ளை நெருக்கியடிச்சு ரியூட்டறியள் போட்டா போட்டியோடை நடக்குது..." எண்டார் சுப்பண்ணை.

"கோதாரி விழுவார் எலெக்சன் காலம் மாதிரியல்லே றோட்டுகள் மதிலகளை நாசமாக்கிறாங்கள்... ஒருத்தன்ரை புதிசாப் பெயின்ரடிச்ச மதிலிலை கண்டபாட்டுக்கு நோட்டீஸ் ஒட்டுகிறதுக்கு என்னண்டுதான் மனம் வருகுதோ உவங்களுக்கு...!" எண்டு முருகேசர் சொல்லிக் கொண்டிருக்கேக்குள்ளையே கனகர் "உவங்களிட்டைப் படிச்சு நல்லா வரட்டுமெண்டு எங்கடை பிள்ளையளை என்னண்டு அனுப்புறது?" எண்டு கேட்டார்.

"உண்மைதானப்பா கனகு... அண்டைக்குப் பாத்தன் பொடிப்பிள்ளையள்... படிக்கிற பொடியள்தான் உந்த நோட்டீசுகளை ஒட்டிக்கொண்டு போகுதுகள்..." எண்டு நான் கண்டதைச் சொன்னன். கதிரேசண்ணை "உதுக்கு ஒரு விளக்கமிருக்கு... பெடியளுக்கு அப்பிடிச் சொல்லித்தான் அனுப்பியிருக்கிறாங்கள்..." எண்டு நிப்பாட்டினார் முருகேசர்.

"என்னப்பா அது விளக்கம்?" எண்டு அந்தரப்பட்டார் சுப்பண்ணை. "உதுகும் ஒரு வாழ்க்கைக்கான படிப்பாம்... என்ன அப்பிடியல்லே?" எண்டன் நான். "கதிரேசண்ணை நீ கில்லாடிதானப்பா... அப்பிடித்தானாம் சொல்லி ஒட்டவிட்டவங்கள்... பெடியள் எனக்குச் சொன்னவங்கள்" எண்டார் எரிச்சலோடை முருகேசர்.

"ம்ம்.. ம்ம்.. சோக்காச் சொன்னியள்... வாழ்க்கைக்கு? உது? ஓஓஓ... இப்ப ரியூட்டறிக்கு ஒட்டிப் பழகட்டும்... அப்பதான் பசை வாளி காவியளாய் மாறி அரசியல்வாதியளிட்டை எடுபிடி செய்யலாம்... பேப பெடியள்... ஒழுங்காப் படிச்சு ஒரு உத்தியோகம் எடுக்கிறதுக்கு வழியைத் தேடுறதை விட்டிட்டு பசைவாழி காவிப் பழகீனம்..." எண்டு சுப்பண்ணை கொதிச்சார்.

"ஏ.எல். சோதினைக்கெண்டு விட்டிருக்கிற லீவிலை புது வகுப்புகளையுமல்லே தொடக்கியாச்சுதாம்..." எண்டு கனகர் சொல்லிக்கொண்டிருக்க சுதனும் அவனோடை ஒருத்தனும் வந்தாங்கள். எங்களைக் கண்டிட்டு வந்தாங்கள்... "என்ன படிப்புக் கதையள் நடக்குதபோலை எண்டு கேட்டான் சுதன். ஓமடா தம்பி உங்கடை ரியூட்டறிக் கதைதான் வேறையென்ன?" எண்டன் நான்.

"என்ன ரியூட்டறிக் கதையோ" எண்டு சுதன் கேக்க கனகர் விளக்கமாச் சொன்னார். சுதன் சிரிச்சான். கூடவந்தவன் அசடு வழியிற மாதிரி ஒரு சிரிப்பை வரவழைச்சான். "மாமா...நீங்கள் நெடுகவும் சொல்லுறதுதான்... பெரியாக்களுக்கு மேல் வீடு காலிதான்... அதுவும் படிப்பெண்டு வந்தால் சொல்லவே தேவையில்லை..." எண்டு சிரிச்சான்.

"ஏனடாப்பா சிரிக்கிறாய்?" எண்டார் முருகேசர். "நாடு முழுக்க பாடசாலையளுக்கு லீவு.... இஞ்சை பள்ளிக்கூடங்கள்... ரியுசனுகள்... வலு அமளி... விட்டதைப் பிடிக்கிறதைவிட அடுத்ததைப் படிக்கிற வேகம்..." எண்டான் சுதனோடை வந்தவன். "நாட்டை முடக்கினா பொருளாதாரம் தாங்காது எண்டு சோதினைச் சாட்டிலை சன நடமாட்டத்தைக் குறைக்கிறதுதான் லீவுக்குள்ளை இருக்கிற செய்தி. எங்கடையாக்களுக்கு உதுகள் விளங்காதல்லே" எண்டான் சுதன். "எவடம் எவடம்... புளியடி புளியடி... விளையாடுறம் போலை என்ன?" எண்டு கேட்டுக்கொண்டு வீட்டை வந்திட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த வார சமையல்

# மையிட்ட கணவாய்க் கறி...!

கணவாய் மீனைப் பலரும் பலவாறாகச் சமைத்துண்கிறார்கள். கணவாயில் குழம்பு மற்றும் உறைப்பான பிரட்டல் கறியே அதிகளவில் ஆக்குகிறார்கள். அது தவிரக் கரையோரத்தவர்கள் கணவாயைப் பொரித்தும் உண்கிறார்கள். கணவாயைப் பொரிப்பது என்பது இலேசுப்பட்ட காரியமல்ல. பொரிக்கும்போது வெடிப்புடன் எண்ணெயைச் சிதற வைக்கும் தன்மை கணவாய்த் தசைகளால் ஏற்படுத்தப்படும். அதனால் மூடு சட்டியால் இறுக மூடியே கணவாயைப் பொரிக்கிறார்கள். குழம்புக் கறியாக மட்டுமன்றி அவித்து உறைப்பான கலவை பிரட்டியதாகவும் நகர்ப்புற உணவுக் கடைகளில் நீங்கள் கணவாய்க் கறியைச் சுவைக்க முடியும். நகர்ப்புற மக்களுக்கும்கூட இவ்விரு கறிகளும் பழக்கப்பட்டவைதான்.

சில கரையோரக் கிராமங்களுக்கேயுரிய மை கலந்த கணவாய்க் கறி குறித்துப் பலருக்கும் தெரிந்திருப்பதில்லை. கணவாய் மீனுக்குள் காணப்படும் கரு நிற மையைக் கலந்து கறியாக்கும் பழக்கம் சில மீனவக் குடும்பங்களுக்கேயுரியதாக இருக்கிறது. அதிலிருந்து வேறு சிலரும் இதற்குப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். கடலில் எதிரிகளிடம் மாட்டிக்கொண்டதும் அந்த இடத்தில் கரும்புகைபோல கருநிற மையைக் கக்கிவிட்டுத் தலைமறைவாகிடுவதற்கெனக் கணவாய்கள் தமது உடலுக்குள் சேமித்து வைத்திருக்கின்ற அந்த மையைத தான் இந்தக் கறிக்குக் கலந்து சமைக்கிறார்கள். இதனால் இந்தக் கறி கருநிறத்தில் இருக்கும். பொதுவாக இந்த மையை கணவாய் சமைப் பவர்கள் முற்றாக நீக்கிவிடுவார்கள்.

**தேவையான பொருள்கள்**



கணவாய் - அரைக் கிலோ (கணவாய் மீனைத் துண்டு துண்டாக்கிச் சுத்தப்படுத்தும்போது அவற்றுக்குள் இருக்கின்ற மைப் பையை தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும் - அனைத்துப் பைகளும் தேவையில்லை. ஒன்றிரண்டு போதுமானது), புளி - 50 கிராம், சின்ன வெங்காயம் - 100 கிராம், பச்சை மிளகாய்கள் - 5, தேங்காய்ப்பால் -1 டம்ளர், தூள் - 25 கிராம், உப்பு, மரக்கறி எண்ணெய் தேவையான அளவு, தேசிப்புளி சிறிதளவு, கறிவேப்பிலை ஆகியன.

**எவ்வாறு சமைப்பது...?**

சுத்தப்படுத்திய கணவாய் மீன்களைச் (மை உட்பட) சட்டிக்குள்போட்டுச் சிறிதளவு மரக்கறி எண்ணெய், புளிக்கரைசல், நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு ஆகியன கலந்து வேகவிடவேண்டும். அவிந்ததும் தேங்காய்ப்பால், கறிவேப்பிலை, தூள் ஆகியவற்றைச் சேர்க்கவேண்டும். நன்றாகப் பிரட்டிவிட்டுச் சில நிமிடங்கள் கொதிக்க வைக்கவேண்டும். கறி நன்றாகக் கொதித்ததும் தேசிப்புளியை விட்டு இறக்கினால் சரி. கருநிறத்தில் உறைப்பான சுவையான கணவாய்க் குழம்பு தயார்.

## நம்மவூர்ச் சுத்துமாத்து

# ராசி – பலன் என்கிற சுத்துமாத்து

மதிசுதன் - நெல்லியடி



அதிகாலையில் எழுந்து தகுந்த நேரத்துக்கு ஆயத்தமாகி வேலைக்குப் போய்க்கொண்டிருந்தேன். கைபேசிக்கு அழைப்பொன்று வந்தது. பதிலளித்துக் காதில் வைத்தால் யாரோ ஒரு சிவாச்சாரியார் பேசுகிறேன் என்று குரல் பதிவு ஒன்று தொடர்ந்தது. எனது பேச்சுக்கு இடமில்லாமல் தன் பாட்டுக்குக் கதைத்துக் கொண்டே போனது அந்தக் குரல். அவருடைய ராசி பலனைக் கேட்பதற்கு ஒரு பட்டனை அமுக்குமாறும் அதற்கான கட்டண விவரத்தையும் சொல்லிக்கொண்டுபோனார். தொலைத் தொடர்புச் சேவை நிறுவனங்களுடன் இணைந்து வியாபார உத்தியாக ராசி - பலன் சொல்ல வந்த அந்தச் சிவாச்சாரியாரை நினைத்தால் சிரிப்பாக இருந்தது. கூடவே கோபமும் வந்தது. நிலமையை எண்ணிக் கவலையடைந்தேன்.

தற்போது எல்லா வீடுகளிலும் தொலைக்கட்சி அலைவரிசைகளில் அன்றைய ராசி பலன் என்னவாக இருக்கப்போகிறது என்பதை அறிவதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். எனினும் தொலைக்காட்சி அலைவரிசைகள் ஒவ்வென்றிலும் ஒரே ராசிக்கு ஒரே மாதிரியான பலன்கள் கூறப்படுகிறதா என்று பார்த்தால் அவ்வாறில்லை. நூறு நாள்களுக்கு அவற்றைப் பதிவு செய்து அதில் எத்தனை வீதம் சரியாக நடந்தது என்றும் அதைக் கேட்கும் யாரும் தேடிப்பார்ப்பதில்லை.

ஒருவரது சாதகத்தின் அமைப்பின்படியே அவரது பலனைக் கணி க்க முடியும். அதையும் கணிக்கக்கூடியவரால் மட்டுமே அவருக்குத் தினமும் என்ன நடக்கும் என்பதைக் கணிக்க முடியும். அது மிகவும் நுட்பமானதும் அறிவுபூர்வமானதும் கணிதக் கணிப்புகளுடன் தொடர் புபட்டதும் ஆகும். அந்தளவுக்கு ஞானமுள்ள சாதகம் கணிக்கும் திறனுள்ளவர்கள் நூற்றுக்கு ஒருவர் அல்லது இருவர் மாத்திரமே இருக்க முடியும். நிலமை இவ்வாறிருக்கும்போது பல சிவாச்சாரியார் களும் சாதகக் கணிப்பாளர்களும் ராசிகளுக்கான பொதுப்பலன்களை ஊடகங்களில் கூறுகிறார்கள். இது பொய்யானது. இதை நம்புகின்ற சாதாரண மக்கள் இன்றைக்கு என் ராசிக்கு இப்படிக் கூறியிருக்கிறார்கள் என்று அதை நினைத்து அன்றைய நாளையே இழக்கின்றனர். பலருக்கு இன்று அதிக பணவரவு, செல்வம் செழிக்கும், திருமணம் கைகூடும் என்றெல்லாம் கதை விடுகிறார்களே தவிர அப்படியேதும் நடப்பதில்லை. ஒவ்வொரு ராசிக்கும் திருமணம் கைகூடும் என்று கூறுவதை வைத்துப் பார்த்தால் தமிழரில் எவரும் இனிமேல் திருமணம் முடிப்பதற்கு இருக்கமாட்டார்கள். எல்லாத் திருமணங்களும் எப்போதோ முடிந்திருக்கும். முதிர் கன்னிகளை அதிகம் கொண்ட சமூகமாக நாமே இருக்கிறோம். பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்து 6 மாதங்களுக்குள் மணமுறிவு ஏற்பட்டுமுள்ளன. இதற் கெல்லாம் சாதகம் கணித்தவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்? இதுபற்றி மக்கள் சிந்திக்க வேண்டும்.

சூரியன் உதித்து தொடங்குகின்ற நாள்கள் எல்லாம் புதிய நாள்களே. இன்று எமக்குக் கிடைத்த நாள் பெரும் வரப்பிரசாதம். இன்றைய நாள் உண்மையானதும்கூட. அந்த நாளை எவ்வாறு முயற்சியுடன் முன்னெடுப்பது என்பதில் ஆர்வமுள்ள மக்கள் மட்டுமே வாழ்க்கையில் வெற்றிபெற்றிருக்கிறார்கள். இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக ஜப்பானியர்களையும் யூதர்களையும் குறிப்பிட முடியும்.

மனிதன் இந்தப் பூமியில் தோன்றி மிக நீண்ட காலத்துக்குப் பின்னரே நெசவுத் தொழிலைக் கண்டறிந்தான். ஆடைகளை நெய்தான். வர்ணங்களை உருவாக்கினான். அதற்கு முன்னரே கிரகங்களையும் சாத்திரங்களையும் கணித்தார்கள். இவற்றை முதலில் கண்டுபிடித்த முனிவர்கள்கூட கோவணத்துடன்தான் இருந்தான். இன்றைய சாதகம் கணிப்பவர்கள் இன்று இந்த வர்ணத்தில் ஆடை அணிவது நல்லது என்றும் எஸ்.எம்.எஸ்ஸில் நல்ல செய்தி வரும் என்றும் கூறுகிறார்கள். சாதகக் கணிப்பீடு என்ற விடயமே திசை மாறி அது ஒரு முழுநேரச் சுத்துமாத்தாகியுள்ளது. இதிலிருந்து சாதாரண மக்கள் விடுபடவேண்டும். இதனால் ஏமாறக்கூடிய அப்பாவி மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இவற்றை அறிவுபூர்வமாக அணுகும்போது சிவாச்சாரியார்களதும் சாதகக் கணிப்பாளர்களதும் பொய்கள் தெரியவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானா வாலா கானக் குயிலான கதை!

ஜெயந்தன்

1940கள் வரையிலும் இந்தியாவின் வடபகுதியில் நாடக மேடைகள், தெருக் கச்சேரிகளில் பாடிக்கொண்டிருந்தவர்களை வடஇந்திய மக்கள் 'கானா வாலா' எனக் கொச்சையாக அழைத்தார்கள். அதே காலகட்டத்தில், நாடகக் கலைஞர்களை நாம் 'கூத்தாடி' என அலட்சியப்படுத்தியதைப் போல.



'கானக் குயில்', 'குயின் ஆஃப் மெலடி', 'இந்தியாவின் நைட்டிங்கேல்' என இன்று கொண்டாடப்படும் மறைந்த பாடகி லதா மங்கேஷ்கர், ஓர் எளிய, மராட்டிய 'கானா வாலா' குடும்பத்தில் பிறந்தவர். தந்தை பண்டிட் தீனாநாத், தாய் ஷிவந்தி இருவரும் இசையையும் நாடகத்தையும் நேசித்தவர்கள். பசியை வெல்வதற்காகக் கலையிடம் தஞ்சமடைந்த குடும்பத்துக்கு, மூத்த மகளாகத் தனது பங்களிப்பைச் செலுத்த, 13 வயது முதல் பாடவும் நாடகங்களில் நடிக்கவும் தொடங்கினார் லதா.

ஒரு கட்டத்தில் தந்தையின் மறைவு, குடும்பத்தைக் காக்க வேண்டிய தலைமகளாக அவரது கலை வாழ்க்கையைப் புரட்டிப்போட்டது. அப்போது ஒரு பிறவிக் கலைஞராக இன்னும் தீவிரமாக வெளிப்பட்டு நின்றார்.

தன்னுடைய பதின்ம வயதில், மராட்டிய சினிமாவில் முதல் பின்னணிப் பாடலைப் பாடித் திரையுலகுக்கு அறிமுகமான காலத்தில் அவர் எப்படிப் பாடினாரோ, அதே போல்தான் கடைசி வரை லதா மங்கேஷ்கர் பாடினார். தொடக்கத்தில் சில மராத்திப் படங்களில் பாடியிருந்தாலும் 1949இல் வெளியான 'மஹல்' இந்திப் படத்தில் 'ஆயஹா.. ஆனே வாலா' என்கிற பாடலில் தொடங்கியது லதாவின் உண்மையான திரையிசைப் பயணம்.

'வர வேண்டியவர் ஒருபோதும் வராமல் போக மாட்டார்' என்கிற அந்தப் பாடலின் பொருளும்கூட லதாவின் வருகையைச் சொல்லிவிட்டது. இந்தித் திரையிசையில் அவரது குரல் அறிமுகமான பிறகு, இந்தியாவின் எட்டாவது அட்டவணையில் இருக்கும் இந்தி உள்ளிட்ட மொழிகளைக் கடந்து, பல மொழிகளில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடிக் குவித்திருப்பது முறியடிக்க முடியாத கின்னஸ் சாதனையாக இருக்கிறது. வயதுக் குரிய தடம் காலம்தோறும் அவரது குரலில் சிறிது சிறிதாகத் தென்பட்டபோதும், பாடும் முறை என்பது அவருக்கே உரித்தான பிறவி வரமாகவே தொடர்ந்தது.

## ஓர் உலக அதிசயம்!

'லதா மங்கேஷ்கர் தானாக நிகழ்ந்த ஓர் உலக அதிசயம்! அவர் போன்ற ஒரு பாடகியை உலக மக்கள் இசையில் வேறு எங்கேயுமே நாம் பார்க்க முடியாது. பாடும் முறையில் அவர் வெளிப்படுத்தும் ஆழம், நூலளவுக்குக்கூட உணர்வுகளை மிகைப்படுத்தாத தன்மை இரண்டும் அவரது தனித்த அடையாளங்கள். ஒரு பாடலின் மெட்டுக்கு, வரிகள் காட்டும் உண்மைக்கு என்ன உணர்வு தேவையோ அதைக் கச்சிதமாகத் தன்னுடைய குரலில் கொண்டுவந்துவிடும் ஆற்றல், இறைவன் அவருக்கு வழங்கிய கொடை.

வாழ்க்கையின் இயல்பான அத்தனை உணர்வுகளும் அவரது குரல்வழியே துல்லியமாக வெளிப்பட்டிருக்கின்றன. பாடகிகளுக்குப் பொதுவான குரல் பிரச்சினை ஒன்று உண்டு. அது உச்ச ஸ்தாயியில் பாடினால் கீச்சுத் தன்மையும் கீழ் ஸ்தாயியில் பாடும்போது கட்டைக் குரலும் வந்துவிடும். ஆனால், எப்படிப் பாடினாலும் துல்லியமான குரல் லதா மங்கேஷ்கருடையது. இது அவர் கற்றுக்கொண்டு வந்ததல்ல இதைக் கற்றுக்கொள்ளவும் முடியாது. கடந்த 45 ஆண்டுகளில் அவர் பாடிய ஒரு பாடலையாவது கேட்காமல் என்னுடைய நாட்கள் கடந்து சென்றதில்லை' என்று வியந்து போகிறார் வெகுஜன இசை விமர்சகர் ஷாஜி.

## இனிய குரலின் கடவுள்

எந்தவொரு திரையிசைப் பாடகரையும் அவர் பாடத் தொடங்கிய மூன்றாவது படத்திலிருந்து அவரை 'இனிய குரலின் கடவுள்' எனக் கொண்டாடியிருப்பார்களா என்று தெரியவில்லை. லதா மங்கேஷ்கருக்கு அது நடந்தது. 'மஜ்பூர்', 'அந்தாஸ்', 'பர்ஸாத்' தொடங்கி 'அனார்கலி', 'முகல்- ஏ-ஆஸம்' எனக் காதலின் அமரத்துவம் இசையின் வடிவமாக வெளிப்பட்ட அத்தனை படங்களிலும் காவியக் குரலாக ரசிகர்களின் மனதை ஊடுருவிப் பாய்ந்தார் லதா. அத்தகைய பாடல்கள் மெலடியாகத் தாலாட்டியதுடன் ரசிகர்களின் மனக் காயங்களுக்கு மருந்தாகவும் அமைந்து போயின.



50 முதல் 70கள் வரையிலான இந்தித் திரையிசையின் பொற்காலத்தில், ஆணுலகில் மிதிபட்டு நசுங்கும் குடும்பப் பெண்களின் கண்ணீரையும் மீட்சியையும் ஒலித்த குரலும் லதாவுடையதாக மாறியிருந்தது. அவர் வந்து பாடிக்கொடுக்க வேண்டும் என்பதற்காக மூன்று மாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரை காத்திருந்த இசை ஜாம்பவான்கள் பாலிவுட்டில் இருந்தார்கள். 'லதாவின் குரலுக்காக ஐந்து மாதங்கள் காத்திருந்தேன்' என்று இசையமைப்பாளர் சலீல் சௌத்ரி சொல்லியிருக்கிறார். அன்று, புகழின் உச்சத்தில் விளங்கிய பாடகர்களான முகமது ரஃபியும் கிஷோர் குமாரும் லதா மங்கேஷ்கரின் வசதிக்கு ஏற்ப விட்டுக்கொடுத்துப் பாடித் தந்ததெல்லாம் திரையிசை வரலாறு.

## சிவாஜி கணேசனின் தங்கை

இந்தியிலிருந்து தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட ஒருசில கறுப்பு - வெள்ளைப் படங்களுக்கு 60களில் சில பாடல்களைத் தமிழ் தெரியாமலேயே பாடியிருக்கிறார் லதா. அதன் பின்னர், தமிழ் சினிமாவில் அவரது குரலை நேரடியாக ஒலிக்க வைத்தவர் இளையராஜா. 1987இல் பிரபு நடித்து, ராஜா இசையில் வெளியான 'ஆனந்த்' படத்தில் இடம்பெற்ற 'ஆராரோ... ஆராரோ...' பாடலில் வந்து தமிழகத்தைத் தாலாட்டினார்.

**லதா மங்கேஷ்கர் தானாக நிகழ்ந்த ஓர் உலக அதிசயம்! அவர் போன்ற ஒரு பாடகியை உலக மக்கள் இசையில் வேறு எங்கேயுமே நாம் பார்க்க முடியாது. பாடும் முறையில் அவர் வெளிப்படுத் தும் ஆழம், நூலளவுக்குக்கூட உணர்வுகளை மிகைப்படுத்தாத தன்மை இரண்டும் அவரது தனித்த அடையாளங்கள்**

இளையராஜாவின் இசையில் 'சத்யா' படத்துக்காக அவர் பாடிய 'வளையோசை கலகல வென' பாடல் தலைமுறைகள் தோறும் கடத்தப்பட்டுவரும் அதிசயமாகிவிட்டது. அவருடைய லட்சக்கணக்கான தமிழக ரசிகர்களின் கைபேசிகளில் ரிங்டோனாக இன்னும் அப்பாடல் வசீகரம் குறையாமல் ஒலித்துக்கொண்டிருகிறது. ஏ.ஆர்.ரஹ்மான் இசையிலும் இந்தியில் பல பாடல்களை லதா பாடியிருக்கிறார்.

திலீப்குமார் போன்ற பாலிவுட்டின் நட்சத்திரங்கள் தமிழ்த் திரையுலக ஆளுமைகளுடன் நெருக்கமான நட்பைக் கொண்டிருந்தது போல், சிவாஜி கணேசனைத் தன்னுடைய சொந்த சகோதரனாகக் கருதி அன்பு செலுத்தியவர் லதா மங்கேஷ்கர். சென்னை வரும்போதெல்லாம், 'அன்னை இல்லம்'தான் அவரது இல்லம். 'இந்தியக் கலாச்சாரத்தில் ரக்ஷா பந்தன் என்பது சகோதர - சகோதரி இடையிலான பாசப் பிணைப்பை எடுத்துக்காட்டும் பண்டிகை. ரக்ஷா பந்தன் சமயத்தில் லதாஜி சென்னையில் இருந்தால், அப்பாவுக்கு ராக்கி கட்டுவதற்கு ஓடோடி வந்துவிடுவார். அவரது வருகைக்காக அன்னை இல்லம் விழாக்கோலம் பூண்டுவிடும். அப்பாவின் மறைவுக்குப் பிறகும் எங்கள் குடும் பத்தின் மீது துளி பாசமும் குறையாதவர். அவர் மறைவு எங்கள் குடும்பத்துக்கும் இந்தியத் திரை யுலகத்துக்கும் பேரிழப்பு' என லதா மங்கேஷ்க ருடனான நினைவுகளை, உடைந்த குரலுடன் பகிர்ந்துகொள்கிறார் பிரபு. சிவாஜியின் குடும்பத்தினர் மட்டுமல்ல இந்தியாவே தங்கள் குடும்பத்தில் ஒருவரை இழந்து விட்டதாகத்தான் கண்ணீர் வடிக்கிறது.இந்தியாவைத் தாண்டி லதாவின் குரல் ஈழத் தமி ழர்கள் பலரின் மனங்களிலும் ஆழப் பதிந்திருக்கிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம் ஒரு பைத்தியகாரத்தனம்

இ.கிருஷ்ணன்



சிரிப்பு, துயரம், அருவருப்பு, வியப்பு, பயம், பெருமை, கோபம், இன்பம் என்பன எண் வகை மெய்ப்பாடுகளாகும். மெய்யில் (உடலில்) தென்படுவது மெய்ப்பாடு. அதாவது, மனித உள்ளத்தின் உணர்ச்சிகள் உடலில் தென்படுவது மெய்பாடு என்று பொருள். தொல்காப்பியம் உரைக்கும் எட்டு வகை மெய்பாடுகளில் ஏழாவதாக சுட்டும் கோபத்தால் மனித குலம் இன்று பல பிரச்னைகளை எதிர்கொண்டு, இறுதியில் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறது. உலக மக்களிடையே நிலவும் ஒற்றுமையின்மைக்கும் பெரும்பாலான பிரச்னைகளுக்கும், தீமைகளுக்கும், வன்முறைகளுக்கும் கோபமே காரணமாக உள்ளன.

உள்ளத்தின் உணர்ச்சி கொந்தளிப்பின் வெளிப்பாடாக ஒருவருக்கு கோபம் ஏற்படுகிறது. வெறுப்பு, நம்பிக்கையின்மை, பயம், அறியாமை, பொறாமை, ஆணவம், அகங்காரம் முதலியவை கோபம் உருவாகக் காரணமாகிறது. பிறர் மீது ஒருவர் காட்டும் கோபம் தற்கொலையாகவோ, கொலையாகவோகூட முடியலாம். அதுமட்டுமல்ல மனிதர்களிடையே தீராப் பகையைக்கூட உருவாக்கும்.

கணவன், மனைவி மீது கொள்ளும் கோபம் இறுதியில் மணமுறிவு வரை, அதையும் மீறி இன்று கொலையிலும் முடிகிறது. குடும்பத்தினரிடையே ஏற்படும் கோபம் குடும்பத்தின் அமைதி, நிம்மதி, மகிழ்ச்சியைக் கெடுக்கும். குழந்தைகளிடையே பெற்றோர் காட்டும் கோபம் அவர்களை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

கோபத்தினால், பிறர் செய்த தவறுக்காக நமக்கு நாமே தண்டனை கொடுத்துக் கொள்கிறோம். நண்பர்களுக்கிடையேயான சண்டை, இரு பிரிவினர்களிடையே மோதல், கலவரம், பழிவாங்கும் உணர்வு, கொலை, ஆயுள் வரை பகை, போர் எல்லாம் கோபத்தின் வெளிபாடுகளே.

இராமகிருஷ்ண பரமஹம்சர், கோபம் ஒரு குறுகிய காலப் பைத்தியகாரத்தனம், அதை நீ கட்டுப்படுத்தாவிடில் அது உன்னைக் கட்டுப்படுத்திவிடும் என்கிறார். ஒரு கண நேரம் கோபத்தை அடக்கி வைப்பவன் ஒரு நாளின் துயரத்தை அடக்கியவனாவான். கோபம் நல்லவர்களைக்கூட குற்றவாளிகளாக்கும்.

"கோபப்படும் மனிதால் அதிக அளவு சிறப்பாக வேலைகள் செய்ய முடியாது. அமைதியான, மன்னிக்கக் கூடிய சம நோக்குடைய நிலைக் குலையாத மனமுடையவனே அதிக அளவு சிறப்பாக செயலாற்ற முடியும்' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

சேர்ந்தாரைப் பிரிக்கும் தீய குணங்களில் உயர்ந்து குன்றாய் நிற்பது கோபம். பிறரை வீழ்த்துபவன் வீரனல்ல, கோபம் ஏற்படும் போது தன்னை அடக்கி ஆளுபவனே வீரன். எண்ணி இலட்சியத்தை அடைய விலக்க வேண்டியது கோபம். தன்னைக் காத்து தரணியில் உயர உழைப்பவன் அயராது கோபத்தை அடக்க வேண்டும். சிறிய தீப்பொறி பெரிதாகி பெருங் காட்டை அழிப்பது போல, ஒருவரின் சிறு கோபம் சமூகத்தை அழிக்கும் வல்லமை படைத்தது. அதாவது, பிறர் செய்த தவறுக்காக நமக்கு நாமே கொடுக்கும் தண்டனைதான் கோபம்.

சமைக்கும் உணவில் முறை மாறியமையும்போது அமிழ்தமும் நஞ்சாகிறது. மனித மனமும் அமிழ்த சொரூபம். அது கோபம் கொள்ளும்போது நஞ்சாக மாறுகிறது. ஒருவர் கோபத்தில் இருக்கும்போது எண்ணுகிற எண்ணம் கொடியது. மேலும், உடல் முழுவதும் அப்போது கொடி யதாகிறது. உண்ணுகிற உணவும் நஞ்சாகிறது. தற்காலிகமாக அமையும் பைத்தியம் எனப்படுகிறது கோபம். எனவே தான், திருவள்ளுவரும், 'நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற" என்கிறார்.

மனிதன் எத்தனை செல்வம் பெற்றிருந்தாலும், ஞானம், அறிவு, கலைகளில் மேன்மை இருந்தாலும், தன்னிடம் கோபம் எனும் கொடிய மிருகத்தை அவன் தலைதூக்க விட்டால் அவனிடமிருந்து அனைத்து செல்வமும், செல்வாக்கும், நட்புகளும், உறவுகளும், உற்சாகமும், மகிழ்ச்சியும் மறைந்தோடிவிடும். பெற்றோர், தங்கள் பிள்ளைகளுக்கு இளைய பருவத்திலேயே கோபத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கற்றுத்தர வேண்டும்.

ஓர் இளைஞன் அதிகமாகக் கோபம் கொள்பவனாக இருந்தான். எதற்கெடுத்தாலும் பட்டென கோபம் கொள்வான். இதனால் அவன் அனைவரிடமும் கெட்ட பெயரையே சம்பாதித்தான். அதைக் கண்டு வருந்திய அவனது தந்தை, அவனிடம் ஒரு சுத்தியலும், நிறைய ஆணிகளையும் கொடுத்து, இனிமேல் உனக்கு கோபம் வரும் போதெல்லாம் வீட்டின் கொல்லைப்புறத்திள்ள காய்ந்த மரத்தில் இந்த ஆணிகளை அடி என்று கூறினார்.

முதல் நாள் பத்து ஆணி, மறு நாள் ஏழு, பின் ஐந்து, இரண்டு என படிப் படியாக ஆணிகள் குறைந்தன. ஒரு நாள் ஒரே ஒரு ஆணிதான் அடித்தான். மற்றொரு நாள் எவ்வித ஆணியும் அடிக்கவில்லை. மொத்தமாக ஐம்பது ஆணிகள் வரை அடித்து இருந்தான். அவன் தன் தந்தையிடம், 'எனக்கு இனி கோபம் வராது' என்று கூறினான். 'இனிமேல் கோபம் வராத நாளில் நீ ஒவ்வொரு ஆணியாகப் பிடிங்கி விடு" என்றார் தந்தை. அதை ஏற்று, தான் அடித்த ஐம்பது ஆணிகளையும் பிடுங்கினான். தந்தையை அழைத்து அனைத்து ஆணிகளையும் பிடுங்கிவிட்டேன் என பெருமையுடன் காட்டினான்.

உடனே தந்தை சொன்னார், "ஆணிகளை பிடுங்கி விட்டாய், அதனால் மரத்தில் ஏற்பட்ட துளைகளை என்ன செய்வாய்? உன் கோபம் இதுபோல பலரை காயப்படுத்தியிருக்குமல்லவா? நீ பிறரிடம் காட்டிய கோபம் அவர்களை காயப்படுத்தியிருக்கும், அவர்கள் உன்னை மன்னித்தாலும், அந்த ரணம் ஆறாது என்பதை மறந்து விடாதே. எனவே, யாரிடமும் கோபம் கொள்ளாதே" என்றார்.

கோபத்தை கட்டுப்படுத்துபவன், இந்த சமுதாயத்திற்கு நல்லது செய்பவனாகிறான். கோபம் மனிதனின் நல்ல குணத்தையும் அழித்துவிடும். ஒருவர் எத்தகைய ஆற்றலை பெற்றிருப்பினும், தன்னைக் காக்க கோபத்தை ஆயுதமாக கொள்வானாயின், அதுவே அவனை அழித்துவிடும். புன்னகை ஒரு தொற்று நோய் என்றால், கோபம் ஒரு சங்கிலித் தொடர். அதன் கண்ணியை உடைப்பதென்பது அவ்வளவு சுலபமானது அல்ல. கோபத்தை விட்டொழித்து உலகில் மிகவும் தெய்வீகமானதும், மிகவும் உன்னதமானதுமான அன்பையும், இரக்கத்தையும் அனைவரிடமும் பரப்புவோம்.

## மொழி...

வவுனியா வளாகம் **2021** ஆனி மாதம் **8** ஆம் நாள் சிறப்பு அரசிதழ் அறிவிப்பின் மூலம் தனியான பல்கலைக்கழகமாகத் தர முயர்த்தப்பட்டது. எனினும் அதனை உத்தி யோகபூர்வமாக நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இலங்கையின் **17**ஆவது பல்கலைக்கழகமாக இது இடம்பிடித்திருக்கிறது.

நிகழ்வில் உரையாற்றிய அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச, இது மாணவர்களுக்கு உயர் கல்விக்கான அணுகலை மேம்படுத்தி, நாடு முழுவதும் நமது மக்களையும் நமது கலாச்சாரத்தையும் அதிக அளவில் ஒருங் கிணைப்பதற்கான வாய்ப்புகளைத் திறக்கிறது என்றார்.

இருப்பினும் பல்கலைக்கழகத்தை திறப்பு நிகழ்வு தமிழ் சிங்கள கசப்புணர்வை வளர்ப்பதற்கான மற்றொரு வாய்ப்பை உருவாக்கியுள்ளது. அரச தலைவர் திரை நீக்கம் செய்த நினைவுக் கல்லின் முகப்புப் பகுதியில் பதிக்கப்பட்டிருந்த தமிழ் மொழியிலான அறிவிப்பு கடைசி நேரத்தில் கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகளின் உத்தரவுக்கமைய பின்புறமாக மாற்றப்பட்டு அந்த இடத்தில் சிங்கள மொழியிலான நினைவுக் கல் பதிக்கப்பட்டது. அதனையே அரச தலைவரும் திறந்து வைத்தார்.

அரசமைப்பின் ஊடாகத் தமிழ் மொழிக் கான இடம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் நிலையிலும் தமிழ்பேசும் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் தமிழ் மொழிக்கே முன்னுரிமை என்பது ஏற்கப்பட்டிருப்பினும் அமைந்த வவுனியா பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி பின்தள்ளப்பட்டு சிங்கள மொழி முன்னிலைப்படுத்தப்பட்டமையை தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வன்மையாகக் கண்டித்தார்.

தமிழ் மொழிக்கான முன்னுரிமை மதிக்கப்படாத நிலையில் பல்கலைக்கழகத் திறப்பு விழா நிகழ்வையே தாம் புறக்கணித்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

வைப்பது தொடர்பான சடங்காகத் திரை நீக்கம் செய்யப்பட்ட நினைவுக்கல் தனிச் சிங்களத்தில் மட்டுமே எழுதப்பட்டிருந்தது. இலங்கையில் மும்மொழிக் கொள்கை நடை முறையில் உள்ளது என்று அரசு அறிவிக்கின்றபோதும் பல்கலைக்கழக திறப்பு நிகழ்வில் ஏனைய இரு அரச மொழிகளுக்குமான இடம் புறக்கணிக்கப் பட்டிருப்பது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எதிர்ப் பலைகளைத் தோற்று வித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த உறுப்புகள் மீள உருவாகினால்.....?
## ஆச்சரியமளிக்கும் ஆய்வு முடிவு

பேரா. மோகனா

பிறப்பிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒரு தவளையின் கால்களை வளரவைத்து இயல்பு நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். கேட்பதற்கே ஆச்சரியமளிக்கும் இந்த அறிவியல் முன்னேற்றம் மனிதர்களிடத்திலும் இது போன்றே உறுப்புக்களை வளர்த்தெடுக்க எதிர்காலத்தில் உதவும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

உயிரியக்க திரவத்தால் நிர்வகிக்கப்படும் நிலையில், ஒரு தவளைக்கு காக்டெய்ல் (பலவற்றின் கலவை) போல் ஐந்து வகை மருந்துகள் அளிக்கப்பட்டு, சிகிச்சை செய்யப்பட்டது. அந்த தவளைக்கு பிறவிலேயே கால் இல்லை. அப்படிப்பட்ட தவளைக்கே சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆச்சரியமாக தவளை ஒரு செயல்பாட்டு நிலைக்கு வந்தது. அதன் கால்கள் வளர்ந்து கிட்டத்தட்ட முழுமையான நிலைக்கு வந்துவிட்டது. நன்றாகவும் செயல்பட்டது. இந்த ஆய்வு பற்றிய தகவல், டஃப்ட்ஸ் பல்கலைக் கழக அறிவியல் பத்திரிகையில் 2022, தை 26ஆம் நாள் வெளியிடப்பட்டது.

**ஆய்வும் முடிவும்**

இயற்கையாகவே கால்களை மீண்டும் உருவாக்க முடியாத பெரிய தவளைகளில் கால்களின் நீண்ட கால வளர்ச்சியை அறிவியலாளர்கள் தூண்டியுள்ளனர். தவளைகள் 10 மாதங்களுக்குப் பின்னர், அவைகளின் இழந்த கால்கள் மீண்டும் பெற்றன. ஓர் உயிரியக்கத்தின் கீழ் வைத்திருந்த ஐந்து வகை மருந்து காக்டெயிலை வெறும் 24 மணி நேரம் செலுத்தியதன் மூலம் இது தூண்டப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது. பின்னர் கால் வளர்ந்தது. வளர்ந்த புதிய கால்கள் உணர்வு மற்றும் இயக்கத்தை செயல்படுத்தும் அளவுக்கு சிறப்பாகச் செயல்பட்டன.

**தவளை ஆராய்ச்சி மனிதனுக்கு உதவும்**

இந்த தவளை ஆராய்ச்சியின் முடிவு, மனிதர்களின் உறுப்பு சிகிச்சைக்கு ஒரு நம்பிக்கை ஆதாரத்தை நிதர்சனமாக உருவாக்கியுள்ளது. நீரிழிவு நோய் முதல் விபத்து வரையிலான பல்வேறு அதிர்ச்சியுறும் காரணங்களால் கை, கால்களை இழந்த லட்சக்கணக்கான மனிதர்கள் இந்த உலகில் உள்ளனர். அவர்களுக்கும், அவர்களுக்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவர்களுக்கும், இந்த ஆய்வு மிகவும் மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் மிக மிக ஆழமாக வழங்கியுள்ளது.

இயற்கையான மீளுருவாக்கம் மூலம் உறுப்பு உருவாகும் செயல்பாட்டை மீண்டும் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் சமீபத்தில் கிட்டவில்லை. எட்டவில்லை. ஆனால், தவளை போன்ற கீழ் விலங்குகளான சலமாண்டர்களின் கால்கள் மற்றும் கைகளின் வளர்ச்சியில் இவர்கள் சூப்பர் ஹீரோக்களாக உள்ளனர்.

**காலம் நம் கையில்**

சயின்ஸ் அட்வான்சஸ் என்ற இதழில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வில், டஃப்ட்ஸ் பல்கலைக்கழகம் மற்றும் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின், வைஸ் இன்ஸ்டிடியூட்(TUFTS UNIVERSITY AND HARVARD UNIVERSITY'S WYSS INSTITUTE) அறிவியலாளர்கள், மீளுருவாக்கம் செய்யும் மருத்துவத்தின் இலக்கை நோக்கி, நம்மை ஒரு படி மேலே கொண்டு வந்துள்ளனர். மனிதனின் இழந்த கை, கால் போன்ற உறுப்புகளை நாமும் மீளுருவாக்கம் செய்யலாம் என்பதுதான் அது.

**அமுத திரவத்தில் ஊறிய தவளைகள்**

இயற்கையாகவே கை, கால்களை மீளுருவாக்கம் செய்ய முடியாத வயது வந்த தவளைகளில் உயிரியக்கத்தில் பயன்படுத்தப்படும் ஐந்து மருந்து காக்டெய்லைப் பயன்படுத்தி, 24 மணி நேரத்திற்கும் மேல் அந்த அமுதத்தில் ஊறவைத்து முத்திரையிட்டு, இழந்த கால்களை மீண்டும் வளர்க்க முயற்சி செய்தே வெற்றி பெற்றுள்ளனர். அந்தச் சுருக்கமான சிகிச்சையானது 18 மாத காலத்துக்குப் பின்னர் மீள் வளர்ச்சியை இயக்குகிறது. இது சிறந்த செயல்பாட்டுடன் காலை மீட்டெடுக்கிறது.

**அனைத்து விலங்குகளுக்கும் மீளுருவாக்கம் ஓர் எல்லை வரையே**

உலகில் பெரிய உயர் நிலை பாலூட்டிகள், பறவைகள் மற்றும் பெரிய ஊர்வன விலங்குகளுக்கு கீழ் உள்ள பலவகை உயிரினங்கள், உதாரணமாக வாலுடைய தவளையான சாலமண்டர்கள், நட்சத்திரமீன்கள், நண்டுகள் மற்றும் பல்லிகள் போன்ற விலங்கினங்கள், குறைந்தபட்சம் சில உறுப்புகளை முழுமையாக மீளுருவாக்கம் செய்யும் திறனைக் கொண்டுள்ளன. தட்டைப்புழுக்களை எத்தனை துண்டுகளாகவும் வெட்டலாம். ஒவ்வொரு துண்டும் ஒரு முழு உயிரினத்தையும் மறுகட்டமைக்கும்/உருவாக்கும். மனிதர்கள் போன்ற பாலூட்டிகளும், பறவைகளும் புதிய திசு வளர்ச்சியுடன் காயங்களை மூடும் திறன் கொண்டவர்கள். மேலும், நமது கல்லீரல்கள் 50% இழப்புக்குப் பிறகும் முழு அளவில் மீளுருவாக்கம் செய்யும் திறன் உள்ளது. இது குறிப்பிடத்தக்க, கிட்டத்தட்ட தட்டையான புழு போன்ற திறனையேக் கொண்டுள்ளன.



**கை போன்ற சிக்கலான உறுப்பு உருவாதல்**

ஆனால், ஒரு பெரிய மற்றும் கட்டமைப்பு ரீதியாக சிக்கலான உறுப்புகளான மூட்டு, கை அல்லது கால் இழப்பை மனிதர்கள் அல்லது பாலூட்டிகளில் எந்த இயற்கையான மீளுருவாக்கம் செயல்முறையாலும் மீட்டெடுக்க முடியாது. உண்மையில் நாம் பெரிய, பெரிய காயங்களை ஆற்றுகின்றோம். அவற்றின் மேல் தோல் வளர்ந்து அது தழும்பு தோலாக மாறிவிடும். இந்த அமைப்பானது அங்குள்ள குருதி கசியாமல் இருக்க நோய்த்தொற்று ஏற்படாமல் இருக்கவே ஒரு உருவமற்ற தோலாக மாறியுள்ளது.

**மீளுருவாக்கம்**

டஃப்ட்ஸ் ஆராய்ச்சியாளர்கள் ஆப்பிரிக்க தவளைகளின் கால் பகுதியில் காயத்தை உண்டு பண்ணி, அதனை ஒரு சிலிகான் தொப்பியில் அடைத்தனர். இதன் மூலம் மீளுருவாக்கம் செய்யும் செயல்முறையைத் தூண்டினர். அதை அவர்கள் பயோடோம் (BIODOME) என்று அழைக்கின்றனர். இதில் ஐந்து மருந்து காக்டெய்ல் முறையில் ஏற்றப்பட்ட புரத ஜெல் உள்ளது.

**பல குணங்கள் கொண்ட மருந்துகள்**

இந்த மருந்துகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குணம் உள்ளது. ஒவ்வொரு மருந்தும் அதன் தன்மைப்படி, வீக்கத்தைக் குறைத்தல், வடுக்களை உண்டாக்கும் கொலாஜன் உற்பத்தியைத் தடுப்பது மற்றும் நரம்பு இழைகள், குருதி நாளங்கள் மற்றும் தசைகளின் புதிய வளர்ச்சியை ஊக்குவித்தல் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களை அறிவியலாளர்கள் எதிர்பார்த்தபடி சிறப்பாகவே நிறைவேற்றின. இந்தக் கலவையும் உயிரியக்கமும் ஓர் உள்ளூர் சூழலையும் அதற்கான அறிகுறிகளையும் காட்டியது. இது காயத்தை மூடுவதற்கான இயற்கையான போக்கிலிருந்து தடுத்து மற்றும் மீளுருவாக்கம் செயல்முறையை நோக்கி செதில்களை நகர்த்தியது.

**கால்விரல்களுடன் தவளையின் கால்கள்**

சிகிச்சையளிக்கப்பட்ட பல தவளைகளில் திசுக்களின் வியத்தகு வளர்ச்சியைக் கவனித்த ஆராய்ச்சியாளர்கள் மிகவும் மகிழ்ந்தனர். கிட்டத்தட்ட முழுமையாக செயல்படும் தவளையின் காலை மீண்டும் உருவாக்கினர். புதிய மூட்டுகள் இயற்கையான மூட்டு எலும்பு அமைப்பைப் போன்ற அம்சங்களுடன் நீட்டிக்கப்பட்ட எலும்பு அமைப்பைக் கொண்டிருந்தன. உட்புற திசுக்களின் (நியூரான்கள் உட்பட) செழுமையான நிரப்பு மற்றும் பல "கால் விரல்கள்" மூட்டு முனையிலிருந்து வளர்ந்தன, இருப்பினும் அடிப்படை எலும்பின் ஆதரவு இல்லாமல்தான் இவ்வளவும்.

**நீந்தவும் உதவும் மீளுரு கால்கள்**

மீண்டும் வளர்ந்த மூட்டு நகர்ந்து, கடினமான இழையிலிருந்து தொடுதல் போன்ற தூண்டுதல்களுக்கு பதில் வினை தந்தது. மேலும், தவளைகள் சாதாரண தவளையைப் போலவே தண்ணீரின் வழியாக நீந்துவதற்கு அதைப் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது.

டஃப்ட்ஸில் உள்ள ஆலன் டிஸ்கவரி மையத்தின் ஆராய்ச்சி இணைப்பாளரும் ஆய்வறிக்கையின் முதல் ஆசிரியருமான நிரோஷா முருகன் கூறுகையில், "நாங்கள் தேர்ந்தெடுத்த மருந்துகள் கிட்டத்தட்ட முழுமையான மூட்டுகளை உருவாக்க உதவுகின்றன என்பதைப் பார்ப்பது உற்சாகமாக இருக்கிறது. ஒரு மாத கால மீளுருவாக்கம் செயல்முறையை இயக்க மருந்து களின் சுருக்கமான வெளிப்பாடு மட்டுமே தேவை என்ற உண்மையி லிருந்து, தவளைகள் மற்றும் பிற விலங்குகள் செயலற்ற மீளுருவாக்கத் திறன்களைக் கொண்டிருக்கலாம். அவை செயல்படத் தூண்டப்பட லாம்" என்றும் தெரிவித்தார்.

**நீண்டகால பயணிப்பில் மனிதனுக்கு பயனுள்ள ஆய்வு**

சுருக்கமான தலையீட்டின் வழியே நீண்ட கால வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வழிமுறைகளையும் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்தனர். சிகிச்சைக்குப் பிறகு முதல் சில நாட்களுக்குள், உடல் வடிவம் பெற கருவில் உதவும் வளரும் வகையே இங்கும் உள்ளது. கருவில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் அறியப்பட்ட மூலக்கூறு பாதைகளின் செயல்பாட்டையே இங்கும் அவர்கள் கண்டறிந்தனர்.

**தவளை கை உருவாக்கம் மற்றும் கருவின் வளர்ச்சி**

இந்த பாதைகளை செயல்படுத்துவது என்பது திசுக்களின் வளர்ச்சி மற்றும் அமைப்பின் சுமையை மூட்டு மூலம் கையாள அனுமதிக்கும். இது ஒரு கருவில் எவ்வாறு நிகழ்கிறதோ, அதைப் போலவே, மூட்டு வளர எடுக்கும் பல மாதங்களில் தொடர்ந்து சிகிச்சை தலையீடும் தேவைப்படும் என்பதும் தெரியவந்துள்ளது.

**எதிர்காலத்தில் இழந்த கை, கால் உறுப்பு மீளுருவாக்கம்**

பயோடோமின் கீழ் ஒரு திரவ சூழலுடன் திறந்த காயத்தை மூடுவது, சரியான மருந்து காக்டெய்ல் மூலம், மீளுருவாக்கம் செயல்முறையை இயக்கத்தில் அமைக்கத் தேவையான முதல் அறிகுறிகளை தர முடியும் என்று நிரோஷா முருகன் கூறினார். 'சிக்கலான வளர்ச்சியை சிறு கையாளுதல்கள் மூலம் செய்யவில்லை. ஏனெனில், பெரிய விலங்குகள் இன்னும் தங்கள் உடல் உருவாக்கத்துக்கு தேவையான தகவல்களைக் கொண்டுள்ளன' என்றும் தெரிவித்தார்.

மனிதனின் கை, கால் உறுப்புகளையும் இனி இழந்தால் உருவாக்கிவிட முடியும் என்ற ஆழமான நம்பிக்கை அறிவியலாளர்களுக்கு இந்த ஆய்வின் மூலம் பிறந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள ஈழ மீடியா கூப்ஸ் பிறைவேட் லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.02.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781